359

# தமிழ் இலக்கிய மாலை

359/2.nx

ஐந்தாம் படிவம்

பொதுப் பகுதி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 MAY 1954

TB
031(10)
N54
1,30,088

...ஜா பதிப்புக் கழகம், சென்னை

# தமிழ் இலக்கிய மாலை

## ஐந்தாம் படிவம் : பொதுப் பகுதி


தொகுத்தவர் :

பண்டித வித்துவான்,

லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்,

துணைத்தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS

24 MAY 1954



வர்தா பதிப்புக் கழகம்

திருவல்லிக்கேணி : சென்னை

...த்திய பதிப்பு—1952
மறு பதிப்பு—1954

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT BOOK COMMITTEE

பதிப்புரிமை

சென்னை-600 008
1,30,088
TB
031(10)
N54

Kabeer Printing Works, Madras (2476)

# முன்னுரை

சொற்சுவை பொருட்சுவை செறிந்த இனிய பல செய்யுட்களும், அறிஞர் பெருமக்களின் உயர்ந்த கருத்துக்கள் அடங்கிய சிறந்த பலவகைக் கட்டுரைகளும் இம்மாலைக்கு அழகு செய்கின்றன.

சென்னை அரசியலார் அண்மையில் திருத்தி அமைத்துள்ள பாடத் திட்டத்திற்கு ஏற்ப இம்மாலை வெளி வருகின்றது. ஐந்தாம் பாரத்தில் 4 பிரிவேளை (Period) தமிழ் பயிலும் எல்லா மாணவரும் படிப்பதற்கு அரசியலார் குறிப்பிட்ட அளவு செய்யுட் பகுதியும், உரைநடைப் பகுதியும் இதன்கண் உள்ளன.

செய்யுட் பகுதிக்கும் உரைநடைப் பகுதிக்கும் வேண்டும் அளவு அருஞ்சொற்பொருளும் கேள்விகளும் பயிற்சிகளும் சேர்த்துள்ளேன்.

இதன்கட் காணப்படுஞ் செய்யுட்களையும், கட்டுரைகளையும் சேர்த்து வெளியிட உடன்பாடளித்த பெரியோர்கள், பதிப்பாளர்கள் ஆகியோரின் பெயர்க் குறிப்பும் இதன்பின் உள்ளது. உடன்பாடு வழங்கிய அப் பெருந்தகையாளர்கட்கு நான் மிகவும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையேன்.

லெ. ப. கரு. இராமநாதன்

# இசைவு வழங்கியவர்கள்

## செய்யுள்

| செய்யுள் | இசைவு வழங்கியவர்கள் |
|---|---|
| மனோன்மணீயம் | சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. |
| தாமரையி னுண்மலரே | வித்துவான் திரு. ந. சுப்பிரமணியன், எம். ஏ. |
| இருளும் அகலும் | கவிமணி திரு. சி. தேசிகவிநாயகம் பிள்ளை |
| ,, | புதுமைப் பதிப்பகம், காரைக்குடி. |
| சுப்பிரமணிய பாரதியார் பாடல் | பாரதி பிரசுராலயம், திருவல்லிக் கேணி. |

## உரைநடை

| உரைநடை | |
|---|---|
| டேவிட் லிவிங்ஸ்டன் | சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. |
| மலையமான் திருமுடிக்காரி | சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. |
| மின்னலும் இடியும் | சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. |
| தஞ்சைப் பெரிய கோவில் | பழநியப்பா பிரதர்ஸ், திருச்சி. |
| தேனீ | டாக்டர் திரு. ச. இராஜகோபாலாச்சாரியார். |
| ,, | ஆசிரியர், கலைமகள், மயிலாப்பூர். |
| வியாபாரம் | திரு. கே. சந்தானம், எம். ஏ., பி. எல். |
| ,, | அதிபர், சக்தி காரியாலயம், சென்னை. |

பிற செய்யுட்களுக்கும், பிற கட்டுரைகளுக்கும் உரிமையுடைய அவைகளின் ஆசிரியர்கள் இசைவு வழங்கியுள்ளார்கள்.

# பொருளடக்கம்

## செய்யுள்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| I. | கடவுள் வாழ்த்து | | |
| | 1. ஐங்குறு நூறு | ... | 1 |
| | 2. சீருப் புராணம் | ... | 2 |
| | 3. நீதி நூல் | ... | 2 |
| | 4. திருவருட்பா | ... | 2 |
| II. | அறவுரை | | |
| | 1. திருக்குறள் | ... | 4 |
| | 2. பழமொழி | ... | 9 |
| | 3. நீதிநெறி விளக்கம் | ... | 11 |
| | 4. அறநெறிச்சாரம் | ... | 13 |
| III. | காதை | | |
| | 1. மனோன்மணீயம் | ... | 16 |
| | 2. திருவிளையாடற் புராணம் | ... | 20 |
| | 3. கம்ப ராமாயணம் | ... | 25 |
| IV. | சிறு நூல்கள் | | |
| | 1. செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ் | ... | 31 |
| | 2. அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழ் | ... | 32 |
| | 3. முக்கூடற் பள்ளு | ... | 33 |
| V. | புனைந்துரை | | |
| | 1. தாமரை | ... | 36 |
| | 2. நினைவும் முடிவும் | ... | 36 |
| | 3. கடல் | ... | 37 |
| VI. | பல்சுவை | | |
| | 1. சீட்டுக் கவி | ... | 39 |
| | 2. சிலேடை | ... | 40 |
| | 3. தொழில் | ... | 40 |
| | 4. ஈரடி இருநூறு | ... | 41 |

## உரை நடை


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | திருக்குறள்—உரைப்பாயிரம் | ... | 43 |
| 2. | அன்னைக்கு எழுதிய கடிதம்<br>—டாக்டர் திரு. மு. வரதராசன், எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச். டி. | ... | 45 |
| 3. | இந்தியாவின் பொருள் நிலை<br>—டாக்டர் திரு. ஜே. எஸ். பொன்னையா, எம்.ஏ.டி. லிட்., | ... | 50 |
| 4. | டேவிட் லிவிங்ஸ்டன்–I<br>—சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் | ... | 55 |
| 5. | டேவிட் லிவிங்ஸ்டன்–II<br>—சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் | ... | 60 |
| 6. | மின்னலும் இடியும்<br>—திரு. என். கே. வேலன், பி.ஏ. | ... | 66 |
| 7. | மலையமான் திருமுடிக்காரி<br>—திரு. சிவ. குப்புசாமி பிள்ளை | ... | 71 |
| 8. | வியாபாரம்<br>—திரு. கே. சந்தானம், எம்.ஏ., பி.எல். | ... | 76 |
| 9. | தஞ்சைப் பெரிய கோவில்<br>—திருவாட்டி ஆர். எஸ். ருக்குமிணி, எம்.ஏ. | ... | 85 |
| 10. | கப்பல் பிரயாணம்<br>—திரு. சோம. லெ. இலக்குமணன் செட்டியார், பி.ஏ. | ... | 93 |
| 11. | தேனீ<br>—டாக்டர் திரு. ச. இராஜகோபாலாச்சாரியார் | ... | 101 |
| 12. | ஓவியன்<br>—திரு. ம. ப. பெரியசாமித்தூரன், பி.ஏ., எல்.டி. | ... | 110 |

# தமிழ் இலக்கிய மாலை

## ஐந்தாம் படிவம் : பொதுப் பகுதி

## செய்யுள்

---

## I. கடவுள் வாழ்த்து

### 1. ஐங்குறுநூறு

ஐங்குறுநூறு என்பது எட்டுத்தொகை நூல்களில் மூன்ருவதாக உள்ளது. எட்டுத்தொகை நூல்களாவன : நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பனவாம். இந்நூல் மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்னும் ஐந்திணைகளில் ஒவ்வொன்றுக்கும் உரிய ஒழுக்கங்களைத் தனித்தனி விளக்கும் குறுகிய அடிகளால் ஆகிய நூறு நூறு பாக்களை உடையதாதலால் இப்பெயர் பெற்றது. இதில் வரும் பாக்கள் மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையும் உடையன. ஒவ்வொரு திணைக்குரிய நூறு நூறு செய்யுட்களும் ஒவ்வொரு புலவரால் இயற்றப்பட்டன. இதனைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் என்றும், தொகுப்பித்தவன் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்றும் கூறுவர். இங்கே எடுத்துக் காட்டப்பெற்ற செய்யுள் இந்நூலின் கடவுள் வாழ்த்துச் செய்யுளாகும். இதனைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனர். இவர் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய தொகை நூல்களுக்கும் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். இவரது காலம் கி. பி. இரண்டாம் நூற்றுண்டு என்பர்.

நீல மேனி வாலிழை பாகத்(து)
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன முறையே.

## 2. சீருப் புராணம்

இந்நூல் முகம்மதியத் தலைவரான நபி நாயகத்தின் வரலாற்றை உணர்த்துவது. இதனை இயற்றியவர் உமறுப் புலவர். இவர் எட்டயபுரத்து அரசவைப் புலவராய் இருந்தவர். இவர் தந்தையார் சேகு முதலியார். இப்புலவர் காலம் கி. பி. 17-ஆம் நூற்றாண்டின் இறுதி.

சிறந்தமெய்ப் பொருளை அழிவிலா மணியைத்
தெரிந்துமுக் காலமு முணர்ந்து
துறந்தவ ரிதயா சனத்திருந் தவனைத்
தொடரின்ப துன்பமற் றவனைப்
பிறந்தபல் லுயிரின் மனத்தள வுறைந்து
பிறப்பிறப் பென்றிலா தவனை
மறந்தவர் சுவர்க்கப் பதியையு மறந்து
மண்ணினின் மதிமறந் தவரே.

## 3. நீதி நூல்

இதனை இயற்றியவர் வேதநாயகம் பிள்ளை. இவர் திருச்சிராப் பள்ளியை அடுத்த குளத்தூர் என்னும் ஊரில் பிறந்தவர்; கிறிஸ்து மதத்தைச் சார்ந்தவர்; சீகாழி, மாயூரம் முதலான இடங்களில் நீதிபதியாக இருந்தவர். இவர் உரை நடையிலும், செய்யுள் நடையிலும் பல நூல்கள் செய்துள்ளார். இவருடைய காலம் கி. பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதி.

ஆதியீ றில்லான் தன்னை அமைத்தகா ரணமொன் றில்லான்
கோதிலான் கணத்து ளண்டங் கோடிசெய் தளிக்க வல்லான்
ஓதிடும் ஒப்பொன் றில்லான் உருவிலான் உருவிண் தங்குஞ்
சோதிதன் னிழலாக் கொண்ட சோதியைத் துதியாய்நெஞ்சே.

## 4. திருவருட்பா

### கலைமகள் வாழ்த்து

இது கடவுளின் திருவருளால் பாடப்பெற்ற பாக்களையுடையதாதலால் இப்பெயர் பெற்றது. இதனை இயற்றியவர் இராமலிங்க அடிகள். இவர் சிதம்பரத்திற்கு அண்மையிலுள்ள மருதூரில் கருணீக வேளாளர் மரபில்

## கடவுள் வாழ்த்து

இராமைய பிள்ளைக்கும் சின்னம்மைக்கும் புதல்வராகத் தோன்றினர். இவ இயற்றிய உரைநடை நூல்கள் : ‘ சீவகாருணிய வொழுக்கம், ’ ‘மனுமுறை கண்ட வாசகம் ’ முதலியன. இவரது காலம் கி. பி. 19-ஆம் நூற்றாண்டு.

கலைபயின்ற உளத்தினிக்குங் கரும்பினைமுக்
கனியையருட் கடலை யோங்கும்
நிலைபயின்ற முனிவரருந் தொழுதேத்த
நான்முகனர் நீண்ட நாவின்
தலைபயின்ற மறைபயின்று மூவுலகுங்
காக்கின்ற தாயை வாகைச்
சிலைபயின்ற நுதலாளைக் கலைவாணி
யம்மையைநாம் சிந்திப் போமே.

### அருஞ்சொற்பொருள்

1. நீலமேனி வாலிழை - நீலமேனியையும் வாலிழையையும் உடைய உமையம்மை. வாலிழை - தூய்மையான அணி. முகிழ்த்தன - தோன்றின.

2. இதயாசனம் - மனமாகிய இருக்கை. தொடர் - பிறப்புத் தோறும் தொடர்ந்து வருகின்ற.

3. கோது - குற்றம்.

4. முக்கனி - மா, பலா, வாழைக் கனிகள். தலை - இடம். வாகை - வெற்றி மாலை. சிலை பயின்ற நுதல் - வில்லைப் போன்ற நெற்றி.

### கேள்விகள்

1. ஆசிரியர் பெருந்தேவனர் மூவகையுலகும் எங்குத் தோன்றிய தாகக் கூறுகிறார் ?

2. உமறுப் புலவர் பிறப்பில்லாதவனை எவ்வெவ்வாறு வருணிக் கின்றார் ?

3. வேதநாயகம் பிள்ளை எடுத்துக் காட்டும் இறைவன் இலக்கணங் கள் யாவை ?

4. கலைவாணியம்மையை இராமலிங்க அடிகளார் எவ்வெவ்வாறு வாழ்த்துகின்றார் ?

### பயிற்சி

1. பொருள் கூறுக : வால், இழை, முகிழ்த்தன, இதயம், உறைந்து, பதி, ஈறு, கோது, அளிக்க, சிலை, நுதல், பயின்று.

2. ஐங்குறுநூறு, நீதிநூல், சீறாப்புராணம் : சிறு குறிப்பு வரைக.

3. சீறாப்புராணம், திருவருட்பா நூல்களைச் செய்த ஆசிரியர் வரலாறு களைச் சுருக்கி வரைக.

# II. அறவுரை

## 1. திருக்குறள்

இது தமிழ் நூல்களில் தலையாயது; பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. அந்நூல்கள் இவை என்பதை,

நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி—மாமூலம்
இன்னிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு.

என்னும் வெண்பாவால் அறியலாம். இது குறள் வெண்பாக்களால் ஆகிய நூலாதலின் குறள் எனப் பெயர் பெற்றது. திரு என்னும் அடைமொழி சிறப்புக் கருதிச் சேர்க்கப் பெற்றது. இஃது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பால்களையும், நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையும், அதிகாரம் ஒன்றிற்குப் பத்துக் குறள்களாக ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங் குறள்களையும் உடையது. இந்நூல் ஆங்கிலம் முதலிய வேறு பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதனை இயற்றியவர் தெய்வப் புலமைத் திருவள்ளுவர். இவர் வரலாறு பற்றிப் பலரும் பலவாறு கூறுவர். அஃது எவ்வாறுயினும் எக்காலத்தும் நின்று நிலவி மக்கட்குப் பல்லாற்றானும் பயன் தரவல்ல இத்திருக்குறளொன்றே இவர்தம் ஆழ்ந்தகன்ற அறிவுடைமை, சீரிய வாழ்க்கை, விழுமிய புகழ் முதலியவற்றை நன்கு விளக்க வல்லதாம். இவரது காலம் கி. பி. 2-ஆம் நூற்றாண்டு என்பர்.

### இனியவை கூறல்

பணிவுடையன் இன்சொல னாதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற. (1)

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. (2)

### செய்ந்நன்றி யறிதல்

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார். (3)

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. (4)

### புறங் கூறுமை

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும். (5)

ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னு முயிர்க்கு. (6)

### ஒப்புர வறிதல்

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. (7)

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. (8)

### வாய்மை

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். (9)

யாமெய்யாக் கண்டவற்று ளில்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற. (10)

### இன்னா செய்யாமை

இன்னாசெய் தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல். (11)

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். (12)

### கல்வி

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. (13)

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு. (14)

### ஆள்வினையுடைமை

முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். (15)

தெய்வத்தா னாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். (16)

### நட்பு

நவிற்றொறும் நூனயம் போலும் பயிற்றொறும்
பண்புடை யாளர் தொடர்பு. (17)

உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. (18)

### உழவு

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர். (19)

இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும். (20)

### அருஞ்சொற்பொருள்

**இனியவை கூறல்** - இனிய சொற்களைச் சொல்லுதல்.

1. பணிவுடையன் - தன்னுல் வணங்கத் தக்காரிடத்து வணக்க முடையவனுய். இன்சொலன் ஆதல் - எல்லாரிடத்தும் இனிய சொல்லையும் உடையவனுதல். பிற அல்ல - மற்றைய அணிகள் அணியாகா. மற்று - அசைநிலை.

2. இனிது - இன்பம்; வினையாலணையும் பெயர். ஈன்றல் - தருதல். காண்பான்-அநுபவித்தறிகின்றவன். வழங்குவது - சொல்லுவது. எவன் - என்ன பயன் கருதி. கொல், ஓ - அசை நிலைகள்.

**செய்நன்றியறிதல்**-தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாதிருத்தல்.

3. தினைத்துணை - தினையளவு. பனைத்துணை - பனையளவு. தினை, பனை என்பன சிறுமை பெருமைகளுக்குக் காட்டும் அளவைகள்.

4. எந்நன்றி கொன்ருர்க்கும் - பெரிய அறங்களைச் சிதைத்தவர் களுக்கும். மகற்கு - மகனுக்கு.

**புறங் கூருமை** -

ஒருவரைக் காணுத இடத்தில் அவரை இகழ்ந்து பேசாதிருத்தல்.

5. புறங்கூறி - பிறனைக் காணுத இடத்தில் இகழ்ந்து பேசி. பொய்த்து-கண்ட இடத்தில் அவனுக்கு நல்லவனுக நடித்து. வாழ்தலின் - வாழ்தலைக் காட்டிலும். அறங்கூறும் - அறநூல்கள் சொல்லும். ஆக்கம் - புறங்கூறுதலை விட்டவர் மறுமையில் எய்தும் பயன்.

6. ஏதிலார் - அயலார். தம் குற்றம் - புறங்கூறுதலாகிய தம் குற்றத்தை. காண்கிற்பின் - காணவல்லராயின்; கில் - ஆற்றல் உணர்த்தும் இடைநிலை. மன்னும் - நிலைபேறுடைய.

ஒப்புரவறிதல் -

உலகநடையை அறிந்து செய்தல்

7. தாள் ஆற்றி - முயற்சி செய்து. வேளாண்மை - உபகாரம்.

8. உலகு அவாம் - உலக நடையை விரும்பிச் செய்யும்.

வாய்மை -

உண்மையினது தன்மை

9. தன்னெஞ்சு அறிவது - தன்னுடைய நெஞ்சு அறிவதொரு செய்தியை.

10. மெய்யாக் கண்டவற்றுள் - உண்மை நூல்களாகக் கண்ட நூல்களில். எனைத்தொன்றும் - யாதொரு தன்மையானும். வாய்மையின் நல்ல பிற இல்லை - உண்மையைக் காட்டிலும் மிக்கனவாகச் சொல்லப்பட்ட பிற அறங்கள் இல்லை.

இன்னா செய்யாமை -

தனக்கு ஒரு பயனைக் கருதுதல், கோபம், சோர்வு ஆகிய காரணங்களால் ஒருயிர்க்குத் துன்பந் தரத்தக்கவைகளைச் செய்யாதிருத்தல்.

11. ஒறுத்தல் - தண்டித்தல். நன்னயம் - இனிய மகிழ்ச்சி தரும் செயல்களை.

12. இன்னா - துன்பம் தரும் செயல்கள்.

கல்வி -

13. கற்பவை - கற்கப்படும் நூல்கள்; அவை அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருளை உணர்த்தும் நூல்கள். கசடு - குற்றம்; இதுவோ அதுவோ என்னும் ஐயமும், ஒன்றை மற்றொன்றாக அறிகின்ற விபரீதமும் ஆம். அதற்கு தக நிற்க - அக்கல்விக்குத் தக அற நூல்கள் சொல்லும் நெறியில் நிற்க.

14. யாதானும் - ஏதேனும் ஒரு நாடும். சாந்துணையும் - இறக்கும் வரையும். என் - என்ன நினைத்து.

ஆள்வினையுடைமை -

இடைவிடாத மெய்ம்முயற்சியை உடையவனாக இருத்தல்.

15. திருவினை ஆக்கும் - செல்வத்தை 'வளர்க்கும். முயற்றின்மை - முயற்சியில்லாமை. இன்மை - வறுமை.

16. தெய்வத்தான் - ஊழ்வகையால், ஆகாது எனினும் - கருதிய பயனைத் தராதாயினும். மெய்வருத்தக் கூலி தரும் - உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியளவு பயன் தரும்.

நட்பு -

17. நவில்தொறும் - கற்குந் தோறும். பயில் தொறும் - பழகுந் தோறும். பண்புடையாளர் - நற்குணமுடையவர். தொடர்பு - நட்பு.

18. உடுக்கை - ஆடை. இடுக்கண் - துன்பம். களைவது - போக்குவது. உழவு - உழுதல் தொழில்.

19. மற்றெல்லாம் - மற்றையோரெல்லாம்.

20. இலம் - யாம் வறுமையை யுடையோம். அசைஇ - சோம்பலுற்று. நகும் - சிரிப்பாள்.

### கேள்விகள்

1. ஒருவற்கு அணியாவது எது ?
2. பயன் தெரிவார் தன்மை யாது ?
3. யாருக்கு உய்வுண்டு ? யாருக்கு உய்வில்லை ?
4. ‘ சாதல் அறங்கூறும் ஆக்கம் தரும் ’—எப்பொழுது ? ஏன் ?
5. தாளாற்றித் தந்த பொருளின் பயன் யாது ?
6. உலகவாம் பேரறிவாளன் திரு எதனை நிகர்க்கும் ?
7. வாய்மையின் சிறப்பு யாது ?
8. இன்னா செய்தாரை ஒறுப்பது எங்ஙனம் ?
9. கல்வியைக் கற்கவேண்டும் முறையும் அதன் சிறப்பும் யாவை ?
10. முயற்சியின் சிறப்பு யாது ?
11. பண்புடையாளர் தொடர்பு எதனை ஒக்கும் ?
12. நட்பின் தன்மை யாது ?
13. ‘ நிலமென்னும் நல்லாள் நகும் ’—எப்பொழுது ? ஏன் ?

### பயிற்சி

1. திருவள்ளுவரைப் பற்றிப் பத்து வரிகள் வரைக.

2. பிரித்தெழுதுக : ஊருணி, உலகவாம், நன்னயம், சாந்துணை, நவிற்றொறும், நூனயம்.

3. ‘ எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் ’—விளக்கிப் பொருள் தருக.

4. சேர்த்து எழுதுக : எ + நன்றி, தினை + துணை, செய் + நன்றி, தாள் + ஆற்றி, தன் + நெஞ்சம், கசடு + அற.

## 2. பழமொழி

இதுவும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. தொன்று தொட்டு வழங்கிவரும் பழமொழிகளைத் தம்முட் கொண்டுள்ள நானூறு வெண்பாக்களால் ஆகிய நூலாதலின் இதற்குப் பழமொழி என்றும், பழமொழி நானூறு என்றும் பெயர் வழங்கப்படுகின்றது. இதனை இயற்றியவர் முன்றுறையரையனார். இவரது காலம் கடைச்சங்க காலம்.

இளமையிற் கற்றல்

ஆற்றும் இளமைக்கண் கற்கலான் மூப்பின்கண்
போற்று மெனவும் புணருமோ—ஆற்றச்
சுரம்போக்கி உல்குகொண்டார் இல்லையே இல்லை
மரம்போக்கிக் கூலிகொண் டார். (1)

பெரியரோடு சேர்ந்தாலும் பெரியராகாமை

தக்காரோ டொன்றித் தமராய் ஒழுகினார்
மிக்காரால் என்று சிறியாரைத் தாம்தேறார்
கொக்கார் வளவய லூர தினலாமோ
அக்காரம் சேர்ந்த மணல். (2)

கெட்டார்க்கு நட்டார் இல்லாமை

முட்டின் றொருவர் உடைய பொழுதின்கண்
அட்டிற்றுத் தின்பவர் ஆயிரவர் ஆபவே
கட்டலர்தார் மார்ப கலியூழிக் காலத்துக்
கெட்டார்க்கு நட்டாரோ இல். (3)

பொருளுடையாரைக் கருமமுள்ளவர் தேடிவருவர்

அருமை யுடைய பொருளுடையார் தங்கண்
கரும முடையாரை நாடார்—எருமைமேல்
நாரை துயில்வதியு மூர குளந்தொட்டுத்
தேரை வழிச்சென்றார் இல். (4)

உலோபியின் செல்வம்

வழங்கலும் துய்த்தலும் தேற்றாதான் பெற்ற
முழங்கு முரசுடைச் செல்வம்—தழங்கருவி
வேய்முற்றி முத்துதிரும் வெற்ப அதுவன்றோ
நாய்பெற்ற தெங்கம் பழம். (5)

### அருஞ்சொற்பொருள்

1. ஆற்றும் - கற்றலைச் செய்தற்குரிய. போற்றும் - கல்வியைக் கற்றுப் போற்றுவான். ஆற்ற - மிகவும். சுரம்போக்கி - வழியைக் கடக்க விட்டு. உல்கு - சுங்கம். மரம்போக்கி - ஓடத்திலிருந்து போகவிட்டு ; மரம் - ஓடம், கருவி ஆகுபெயர். கூலிகொண்டார் இல்லையெனக் கூட்டுக.

இப்பாடலில் 'சுங்கம் மாறினல் சுண்ணும்பும் கிடையாது,' 'ஓடம் விட்டு இறக்கினல் ஓடக்காரனுக்கு ஒரு சொட்டு' என்னும் பழமொழிகள் அமைந்துள்ளன.

2. தமர் - உறவினர். மிக்கார் - மேலான குணத்தையுடையவர். ஆல், அசை. தேருர் - தெளிந்து நட்புக் கொள்ளார். கொக்கு - மாமரம். அக்காரம் - சர்க்கரைப் பாகு.

இப்பாடலில் 'சர்க்கரையும் மணலும் சரியாமா ?' என்னும் பழமொழி அமைந்துள்ளது.

3. முட்டு இன்று - குறைவில்லாமல். உடைய - செல்வமுடைய. அட்டிற்று - (அவருடைய) சமையல் அறையில் உள்ளதாகிய வுணவை ; குறிப்பு வினையாலணையும் பெயர். அட்டில் - சமையலறை. ஆப - ஆவார்கள். தார் - மாலை.

இப்பாடலில் 'கெட்டார்க்கு நட்டாரில்லை' என்னும் பழமொழி அமைந்துள்ளது.

"கெட்டார்க்கு நட்டாரில்லை என்பதோ நெஞ்சேநீ
பெட்டாங் கவர்பின் செலல்"

என்னும் குறள் இங்கே நினைக்கத் தக்கது.

4. அருமை உடைய - பெறுதற்கரிய. தங்கண் கருமம் - தம்மிடத்து முடித்துக்கொள்ளும் காரியம். தொட்டு - தோண்டி. தேரைவழிச்சென்ருர் - தவளையுள்ள இடத்தைத் தேடிச் சென்றவர்.

இப்பாடலில் 'குளத்தைத் தோண்டித் தவளையைக் கூப்பிட வேண்டுமா ?' என்னும் பழமொழி அமைந்துள்ளது.

5. வழங்கல் - பிறர்க்குக் கொடுத்தல். துய்த்தல் - தான் அநுபவித்தல். தேற்ருதான் - தெளிந்து செய்யமாட்டாதவன். தழங்கு - ஒலிக்கின்ற. வேய் - மூங்கில்.

இப்பாடலில் 'நாய்க்குத் தேங்காய் தக்குமா ?' என்னும் பழமொழி அமைந்துள்ளது.

### கேள்விகள்

1. நாம் இளமையில் கற்கவேண்டும் என்பதை விளக்க வந்த உவமை யாது ?

2. 'அக்காரம் சேர்ந்த மணல் தின்னலாமோ ?'—இக்கேள்வி எழக் காரணம் யாது ?

3. 'கெட்டாருக்கு நட்டார் இல்' என்ற பழமொழியை விளக்குக.

4. 'குளந்தொட்டுத் தேரை வழி சென்றார் இல்'—இப்பழமொழி எதனை விளக்க வந்தது?

5. நாய் பெற்ற தேங்காயை ஒப்பது எது? எப்படி?

பயிற்சி

1. சேர்த்துக் கூறுக: இளமை + கண், ஊழி + காலம், குளம் + தொட்டு, வழி + சென்றார், முத்து + உதிரும், அது + அன்றோ.

2. இங்குக் கூறப்பட்டுள்ள பழமொழிகளைத் தொகுத்து உரை நடையில் எழுதுக.

3. இவ்வைந்து பழமொழிகளிலும் ஆசிரியர் நமக்குக் கூற விரும்பிய வற்றைத் தொகுத்து 15 வரிகளுள் எழுதுக.

## 3. நீதிநெறி விளக்கம்

இது நீதி வழியை விளக்கும் நூல் என பொருள்படும்.

இதனை இயற்றியவர் குமரகுருபர அடிகள். இவர் பாண்டிய நாட்டில் ஸ்ரீவைகுண்டம் எனப்படும் கைலாசபுரத்தில் சைவவேளாளர் மரபில் பிறந்தவர். தந்தையார் சண்முகசிகாமணிக் கவிராயர். தாயார் சிவகாம சுந்தரியார். இவர் திருச்செந்தூர் முருகப் பெருமானருளால் எல்லாக் கலைகளையும் ஓதாது உணர்ந்தவர். தருமபுரம் ஆதீனத் தலைவர் மாசிலா மணித் தேசிகரால் ஞானோபதேசம் பெற்றுத் துறவு பூண்டு அவர் கட்டளை யின்படி காசியிற் சென்று மடம் ஒன்றமைத்துச் சிவவழிபாடு செய்து கொண்டு சிலகாலம் இருந்து அங்குச் சிவபதம் அடைந்தனர். இவரது காலம் 350 ஆண்டுகளுக்கு முற்பட்டது.

புதியவற்றைக் கற்றலினும் கற்றவற்றைப் பாதுகாத்தல் சிறந்தது

வருந்தித்தாம் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் தொடங்கல்—கருந்தனம்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்(கு)
எய்த்துப் பொருள்செய் திடல். (1)

செல்வருக்குத் திருப்தியும், கல்வியுடையார்க்கு மேலும் மேலும் கற்கவேண்டும் என்னும் ஆர்வமும் வேண்டும்

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றவெல்லாம்
எற்றே யிவர்க்குநா மென்று. (2)

### மதிப்பை விரும்புபவன் செய்ய வேண்டுவது

பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல். (3)

### தாம் மேற்கொண்ட முயற்சியில் ஊக்கம் உடையார் இலக்கணம்

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார். (4)

### செல்வம் படைத்தும் ஈயாதவரது இழிவு

வள்ளன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றையோன்
நல்குரவே போலும் நனிநல்ல—கொன்னே
அருளிலன் அன்பிலன் கண்ணறையன் என்று
பலரால் இகழப் படான். (5)

### அருஞ்சொற்பொருள்

1. கற்றன - படித்தவைகளை ; வினையாலணையும் பெயர். ஓம்பாது - சிந்தித்தல் முதலியவற்றால் பாதுகாவாமல். பரிந்து - வருந்தி. கற்பான் - கற்க. கருந்தனம் - பெரும் பொருள். கருமை - பெருமை ; கைத்தலத் தனவாகிய கருந்தனத்தை. உய்த்துச் சொரிந்திட்டு - மதியாமல் போக விட்டுவிட்டு. அரிப்பரித்தல் - கடைத்தெரு ‹ முதலிய இடங்களிலுள்ள புழுதியை ஏதேனும் சிறுபொருள் கிடைப்பது கருதிக் கொழித்தல். எய்த்து - வருந்தி.

2. தம்மின் மெலியாரை - தம்மைக் காட்டிலும் செல்வத்தில் தாழ்ந்த வர்களை. உடைமை - செல்வம். அம்மா - வியப்பிடைச் சொல். கருத்து அழிக - உள்ளம் உடைக. எற்றே - எவ்வளவு தாழ்ந்தது. இவர்க்கு - இவர் கற்றவைகளுக்கு நாம் கற்றதெல்லாம் எற்றே எனக் கூட்டுக.

3. சுட்டு - மதிப்பு. யாண்டும் - எவ்விடத்தும் ; எக்காலத்தும். நோற்பது - நோற்றல். தூற்றல் - பலர் அறியச் சொல்லுதல். புறங் காத்து - வெளியிடாமல் அடக்கி. தாழ்ச்சி-வணக்கத்தைப் புலப்படுந்தும் சொற்களை.

நோற்பது ஒன்று உண்டு ; அது தாழ்ச்சிசொலல் என்க.

4. மெய் - உடம்பு. செவ்வி - காலம். கருமமே கண்ணாயினர் பாரார், நோக்கார், துஞ்சார், மேற்கொள்ளார், அருமையும் பாரார், அவமதிப்புங் கொள்ளாரென்க.

5. வள்ளன்மை - வரையறை செய்யாமல் கொடுக்குந்தன்மை. செல்வத்தின் - செல்வத்தைக் காட்டிலும். மற்றையோன் - வறியவனுடைய. நல்குரவே நனி நல்ல போலும் என்க. நல்குரவு - வறுமை. நனி - மிகவும்; உரிச்சொல். கொன்னே - ஒரு பயனும் இல்லாமல். கண் அறையன் - கண் அற்றவன்; கண்ணோட்டமில்லாதவன்.

### கேள்விகள்

1. வருந்திக் கற்றவற்றை ஓம்பாது புதியன விரும்பிக் கற்றல் எதனை ஒக்கும்?

2. "தம்மின் மெலியாரை நோக்கி", "கற்றாரை நோக்கி" என்று தொடங்கி ஆசிரியர் கூறுவன யாவை?

3. பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் செய்ய வேண்டுவன யாவை?

4. தாம் மேற்கொண்ட வினையில் ஊக்கமுடையார் இயல்பு யாது?

5. வள்ளன்மையில்லான் செல்வத்திலும் வறுமையே சிறந்தது—ஏன்?

### பயிற்சி

1. நீதிநெறி விளக்க ஆசிரியர் வரலாற்றைச் சுருக்கி வரைக.

2. "கருந்தனம்—கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட்டு அரிப்பரித்தாங்கு—எய்த்துப் பொருள் செய்திடல்" தெளிவான பொருள் கூறுக.

3. பொருள் கூறுக:—ஓம்பாது, கற்பான், உய்த்து, பெருஞ்சுட்டு, செவ்வி, நல்குரவு, கண்ணறையன்.

## 4. அறநெறிச்சாரம்

இந்நூல், அறவழிகளுள் சாரமான செய்திகளைக் கூறுவதால் இப்பெயர் பெற்றது. இஃது அறிஞர் உள்ளத்தைக் கவரத்தக்க சொற்பொருட் சுவை நிரம்பிய இருநூற்றிருப்பத்தாறு வெண்பாக்களால் ஆகியது. இதனை இயற்றியவர் முனைப்பாடியார். இவர் சமண சமயத்தவர்; ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டவர்.

கீழ்மகன் நெஞ்சில் அறவுரை புகாது

வைகலும் நீருட் கிடப்பினும் கல்லிற்கு
மெல்லென்றல் சால அரிதாகும்—அஃதேபோல்
வைகலும் நல்லறம் கேட்பினுங் கீழ்கட்குக்
கல்லினும் வல்லென்னும் நெஞ்சு. (1)

### நடுவு நிலைமை

காய்த லுவத்த லகற்றி ஒருபொருட்கண்
ஆய்த லறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்றகுணந் தோன்ருத தாகும் உவப்பதன்கண்
குற்றமும் தோன்ருக் கெடும். (2)

### தற்புகழ்ச்சி கூடாது

பலகற்ருேம் யாமென்று தற்புகழ வேண்டா
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்
சிலகற்ருர் கண்ணும் உளவாம் பலகற்ருர்க்(கு)
அச்சாணி யன்னதோர் சொல். (3)

### மிகவும் உயர்வாகிய முக்குணங்கள்

தூயவாய்ச் சொல்லாடல் வன்மையும் துன்பங்கள்
ஆய பொழுதாற்று மாற்றலும்—காய்விடத்து
வேற்றுமை கொண்டாடா மெய்ம்மையும் இம்மூன்றும்
சாற்றுங்காற் சாலத் தலை. (4)

### செல்வர்கள் செய்ய வேண்டுவன

செல்வத்தைப் பெற்ருர் சினங்கடிந்து செவ்வியராய்ப்
பல்கிளையும் வாடாமற் பாத்துண்டு—நல்லவாம்
தான மறவாத தன்மையரேல் அஃதென்பார்
வானகத்து வைப்பதோர் வைப்பு. (5)

### அருஞ்சொற்பொருள்

1. வைகலும் - நாள்தோறும். மெல்லென்றல் - மென்மையையடைதல். சால - மிகவும்; உரிச்சொல். நல்லறம் - நல்ல அறநூல்களை. கீழ்கட்கு - கீழ்மக்களுக்கு. நெஞ்சு கல்லினும் வல்லென்னும் - மனம் கல்லைக் காட்டிலும் திண்ணிதாகவே இருக்கும்.

2. காய்வதன்கண் - வெறுக்கப்படும் பொருளினிடத்து. உவப்பதன்கண் - விரும்பப்படும் பொருளினிடத்து. தோன்ருு - தோன்ருமல்; ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். கெடும் - மறையும். ஒருபொருட்கண் ஆய்தல் - ஒரு பொருளிலுள்ள குணகுற்றங்களை ஆராய்தல். அறிவுடையார் கண்ணது - அறிவுடையாரிடத்திலுள்ள செயலாகும்.

3. அலர் - பரந்த. ஞாயிற்றை - சூரியனை. காக்கும் - மறைக்கும். யாம் பல கற்றேம் - யாம் பல நூல்களையும் கற்றுள்ளோம். பல கற்றார்க்கு அச்சாணி அன்னதோர் சொல் சிலகற்றார் கண்ணும் உளவாம் எனக் கூட்டுக. அச்சு ஆணி - தேர்ச் சக்கரத்தின் இருசில் கோக்கும் ஒருவகை இரும்பாணி. அது சக்கரம் கழலாமற் காக்கவல்லது.

4. தூயவாய் - குற்றம் இல்லாமல். துன்பங்கள் ஆய பொழுது - துன்பம் அடைந்தவிடத்தும். ஆற்றும் - பொறுக்கும். காய்விடத்து - (தம்மை) வெறுப்பவர் இடத்தும். கொண்டாடா - கொள்ளாத; ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

5. கடிந்து - நீங்கி. செவ்வியராய் - காணுதற்கு எளியவராகி. கிளை - சுற்றத்தார். பாத்து உண்டு - அவர்கட்கும் பகுத்துக் கொடுத்துத் தாமும் உண்டு. அஃது வானகத்து வைப்பதோர் வைப்பு என்பார் எனக் கூட்டுக. அஃது - அத்தன்மை. வானகத்து - மேலுலகத்தில். வைப்பது ஓர் வைப்பு - தமக்கு உதவுமாறு வைக்கின்ற ஒப்பற்ற சேமநிதி.

## கேள்விகள்

1. கீழ்மகன் தன்மை யாது?
2. நடுவு நிலைமையின் இலக்கணம் யாது?
3. ஏன் காய்தலும் உவத்தலும் கூடாது?
4. 'பலகற்றேம் யாம் என்று தற்புகழ வேண்டா'—ஏன்?
5. உயர்ந்த குணங்கள் யாவை?
6. 'வானகத்து வைப்பதோர் வைப்பு'—எது?

## பயிற்சி

1. 'சில கற்றார் கண்ணும் உளவாம், பல கற்றார்க்கு அச்சாணி அன்னதோர் சொல்'—இதற்கு ஒத்துள்ள குறள் யாது?

2. பொருள் தருக:—வைகல், சால, காய்விடம், செவ்வியர், பாத்துண்டு, வைப்பு, கிளை.

3. இவ்வைந்து பாடல்களின் திரண்ட பொருளை 15 வரிகட்குள் எழுதுக.

# III. காதை

## 1. மனோன்மணீயம்

இது சீவக வழுதியின் மகள் மனோன்மணியின் வாழ்க்கையை விளக்கிப் புதுவதாகப் புனைந்துரைக்கப்பட்ட சிறந்த நாடக நூலாகும். இது தெளிவும், இனிமையும் அமைந்த செய்யுள் நடையாலாகியது. இதனை இயற்றியவர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை. இவர் கி. பி. 1855-ஆம் ஆண்டில் ஆலப்புழை என்னும் ஊரில் பிறந்தார். தந்தையார்—பெருமாள் பிள்ளை. சுந்தரம் பிள்ளை ஆங்கிலம் தமிழ் இரண்டிலும் சிறந்த புலமையுடையவர்; ஆங்கிலத்தில் எம். ஏ. பட்டம் பெற்று திருவனந்தபுரம் அரசினர் கல்லூரியில் வரலாற்றாசிரியராகவும், தத்துவ ஆசிரியராகவும் இருந்து பணி புரிந்துவந்தனர். இவர் கி. பி. 1898-ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வை நீத்தனர்.

தன்னோடு போர் செய்ய வந்த புருடோத்தமன் என்னும் சேர அரசனை எதிர்க்கக் கருதிய சீவக வழுதி, தன் படைவீரர்களை நோக்கி உணர்ச்சி ததும்பப் பேசுதலும் படைவீரர்களின் ஆரவாரமும்.

**சீவகவழுதி :**

வேற்படைத் தலைவரே ! நாற்படை யாளரே !
கேட்பீர் ஒருசொல் ! கிளர்போர்க் கோலம்
நோக்கியாம் மகிழ்ந்தோம். நுமதுபாக் கியமே
பாக்கியம். ஆ ! ஆ ! யார்க்குஇது வாய்க்கும் ?
யாக்கையின் அரும்பயன் வாய்ந்ததுஇங் குமக்கே !
தாயினும் சிறந்த தயைபூண் டிருந்தநும்
தேயமாந் தேவிக்குத் தீவினை இழைக்கத்
துணிந்தஇவ் வஞ்சரை எணுந்தொறும் எணுந்தொறும்
அகந்தனில் அடக்கியும் அடங்காது எழுந்து,
புகைந்துயிர்ப்பு எறியப் பொறிகண் பொறிய
நெடுந்திரள் புருவம் கொடுந்தொழில் குறிப்ப
வளங்கெழு மீசையுங் கிளர்ந்தெழுந்து ஆடக்
களங்கமில் நும்முகங் காட்டும்இச் சினத்தீ
கண்டுஅப் பாண்டியே கொண்டனள் உவகை.
விந்தம் அடக்கினோன் தந்தநற் றமிழ்மொழி
தற்சுதந் தரம்அறும் அற்பர்வாய்ப் படுமோ ?

**படைகள் :** தமிழ்மொழிக்கு ஜே ! ஜே !

**சீவகவழுதி :**

சேனையோடு இவ்வழி திரிந்துநேற்று இரவில்நும்
திருவனை யார்களும் சேய்களும் கொண்ட
வெருவரு நித்திரைக்கு உறுகண் விளைத்து,நும்
பாஷாபி மானமும், தேசாபி மானமும்
பொருளெனக் கருதாது அருள்நிறை நமது
ஆண்மையும் சுதந்தரக் கேண்மையும் ஒருங்கே
நிந்தைவஞ் சியர்செய வந்தநும் கோபம்
முற்றும் இயல்பே, மற்றுதன் குகையுள்
உற்றுஅரி முகமயிர் பற்றிடின் அதற்குஅக்
குறும்பால் எழுஞ்சினம் இறும்பூது அன்றே!
உரிமைமேல் ஆண்மை பாராட்டார் சாந்தம்,
பெருமையில் பிணத்திற் பிறந்ததோர் சீதம்
அந்தணர் வளர்க்குஞ் செந்தழல் தன்னிலும்
நாட்டுஅபி மானம்உள் மூட்டிய சினத்தீ
அன்றோ வானோர்க்கு என்றுமே உவப்பு!
வந்தஇக் கயவர்நும் சிந்தையிற் கொளுத்திய
வெந்தழற்கு அவரே இந்தனம் ஆகுக.

**படைகள் :** ஆகுக ! ஆகுக !

**சீவகவழுதி :**

போர்க்குறிக் காயமே புகழின் காயம்.
யார்க்குஅது வாய்க்கும்! ஆ! ஆ! நோக்குமின்!
அனந்தம் தலைமுறை வரும்தனி மாக்கள்,
தினந்தினம் தாம்அனு பவிக்குஞ் சுதந்திரம்
தந்தம் முன்னோர் நொந்தபுண் எண்ணிச்
சிந்தைஅன்பு உருகிச் சிந்துவர் கண்ணீர்,
என்றால் அப்புண் 'இரந்துகோட் டக்கது'
அன்றோ? அறைவீர். ஐயோ! அதுவும்
புண்ணோ! புகழின் கண்ணே, எவரே
புண்படாது உலகில் புகழுடம்பு அடைந்தார்?
புகழுடம்பு அன்றிஇவ் இகழுடம் போமெய்?
கணங்கணம் தோன்றிக் கணங்கணம் மறையும்
பிணம்பல. இவரெலாம் பிறந்தார் என்பவோ!

உதும்பர தருவில் ஒருகனி அதனுள்
பிறந்துஇறு மசகம் இவரிலும் கோடி.
பிறந்தார் என்போர் புகழுடன் சிறந்தோர்.
அப்பெரும் புகழுடம்பு இப்படி இன்றுஇதோ!
சுலபமாய் நுமக்கெதிர் அணுகலால், துதித்துப்
பலமுறை நுமது பாக்கியம் வியந்தோம்.
ஒழுக்கமற் றன்றுஅது வெனினும், உம்மேல்
அழுக்கா றும்சிறிது அடைந்தோம். நும்மோடு
இத்தினம் அடையும் இணையிலாப் பெரும்புகழ்
எத்தனை ஆயிரம் ஆயிரங் கூறிட்டு
ஒத்ததோர் பங்கே யுறும்எனக்கு எனவே
ஓடும்ஓர் நினைவுஇங் கதனால், வீரர்காள்!
நீடுபோர் குறித்துஇவண் நின்றோர் தம்முள்
யாரே யாயினுஞ் சீரார் தங்கள்
உயிருடம்பு ஆதிகட்கு உறும்அயர்வு உன்னிச்
சஞ்சலம் எய்துவோர் உண்டெனிற் சாற்றுமின்.
வஞ்சக மில்லைஎன் வார்த்தை ஈதுஉண்மை.
மானமோடு அவரைஇம் மாநக ரதனுள்
சேமமாய் இன்றுஇருத் திடுவம். திண்ணம்
உத்தம மாதர்கள் உண்டுமற்று ஆங்கே
எத்தனை யோபேர். இவர்க்குஅவர் துணையாம்.

**படைகள் :**

இல்லை! இல்லை! இங்கு அத்தகைப் புல்லியர்!

**சீவகவழுதி :**

நல்லதுஅப் படியேல், நாமே நும்சுய
நாட்டின்நல் லுரிமைபா ராட்டும் பெரிய
மேன்மையும் அதனால் விளைபுக ழதுவும்
மறுக்கிலம். பொறுக்குமின். வம்மின்! விஜய
இலக்குமி காத்திருக் கின்றாள்! அன்றியும்
ஒலிக்குநும் ஜயபே ரிகைகேட் டலதுமற்(று)
ஓய்கிலள் நோன்புநம் தாய்மனோன் மணியே.

**படைவீரர் :**

மனோன்மணிக்கு ஜே! ஜே! ஜே!

**யாவரும் :**

இளவரசிக்கு ஜே! ஜே! ஜே!

## அருஞ்சொற்பொருள்

வரி 10. உயிர்ப்பு எறிய - பெருமூச்சு உண்டாக. கண்பொறி பொறிய - கண்களினின்றும் நெருப்புப் பொறிகள் பறக்க. 14. பாண்டி - பாண்டிநாடாகிய தேவி. 15. விந்தம் அடக்கினோன் - விந்த மலையை அடக்கிய அகத்திய முனிவர். 19. உறுகண் - துன்பம். 23. வஞ்சியர் - சேரநாட்டார். செய - செய்ய; இடைக்குறை. 25. அரி - சிங்கம். 26. இறும்பூது - வியப்பு. 28. சீதம் - குளிர்ச்சி. 33. இந்தனம் - விறகு. 34. காயம் - புண். 40. இரந்து கோள்தக்கது - இரந்தாயினும் கொள்ளத் தக்கது. 46. என்பவோ - என்று சொல்லுவார்களோ. 47. உதும்பர தரு- அத்திமரம். 48. மசகம் - கொதுகு (கொசு).

## கேள்விகள்

1. "வந்தஇக் கயவர்நும் சிந்தையிற் கொளுத்திய
வெந்தழற்கு அவரே இந்தனம் ஆகுக"—இடஞ் சுட்டிப் பொருள் விளக்குக.
2. வானோர்க்கு உவப்பு—எத்தீ ?
3. வஞ்சியர் இரவில் செய்த தீச்செயல்கள் யாவை ?
4. தேயமாந் தேவிக்கு இழைத்த தீங்கை எண்ண எண்ணப் பாண்டிய வீரர்க்கு ஏற்பட்ட மெய்ப்பாடுகள் யாவை ?
5. இரந்தாயினும் கொள்ளத்தக்க புண் எது ?

## பயிற்சி

1. சீவக வழுதியின் சுதந்திர உணர்வு குறித்துச் சுருக்கிப் பதினைந்து வரிகள் எழுதுக.
2. 'இங்கு அத்தகைப் புல்லியர் இல்லை'—புல்லியர் யார் ? ஏன் எனக் காரணம் காட்டிக் கட்டுரையாக வரைக.
3. பிரித்து எழுதுக:—போர்க்கோலம், பூண்டிருந்த, கிளர்ந்தெழுந்து, அப்பாண்டி, சுதந்தரக்கேண்மை, குறும்பால், தினந்தினம், நுமக்கெதிர், போர்க்குறி.

# 2. திருவிளையாடற் புராணம்

## மாமனாக வந்து வழக்குரைத்த படலம்

இந்நூல், மதுரை ஆலவாயில் கோயில் கொண்டருளிய சோமசுந்தரர், தம் அடியவர்பொருட்டுச் செய்த அறுபத்து நான்கு திருவிளையாடல்களை யும் உணர்த்துவது. இதற்கு முதனூல் வடமொழியிலுள்ள ஆலாசிய மகாத்மியம் என்பர். இதனை ஆக்கியவர் பரஞ்சோதி முனிவர். இவர் சோழ நாட்டில் வேதாரணியம் எனப்படும் திருமறைக்காட்டில் சைவ வேளாளர் மரபில் பிறந்தவர். தந்தையார் மீனாட்சிசுந்தர தேசிகர்.

இவரது காலம் 300 ஆண்டுகளுக்குமுன் என்பர்.

இந்நூலில் மதுரைக் காண்டம், கூடற்காண்டம், திருவாலவாய்க் காண்டம் என்னும் மூன்று காண்டங்கள் உள்ளன. அவற்றுள் கூடற் காண்டத்தில் நம் பாடப் பகுதியாகிய மாமனாக வந்து வழக்குரைத்த படலம் உள்ளது.

### மதுரையில் வணிகர் குலத்தில் தனபதியும் சுசீலையும் வாழ்ந்து வருகின்றனர்

கன்னிநான் மாடக் கூடல் கடிநகர் வணிக மாக்கள்
தன்னின்மா நிதிக்கோன் அன்னான் தனபதி என்னும் பேரால்
மன்னினன் அனையான் கற்பின் மடவரல் சுசீலை என்பாள்
பொன்னினாண் முளரிச் சேக்கைப் புண்ணியத் திருவின் [அன்னாள். (1)

### பிள்ளையில்லாமையால் தன் தங்கையின் புதல்வனைப் பிள்ளையாகக் கொண்ட தனபதி, தன் மனைவி சொற்கேட்டுத் தன் தங்கையுடன் பூசல்விளைக்க அவள் வெகுண்டுரைத்தலும் அவன் தவஞ்செய்யப் போதலும்

பெருமிதம் உனக்கேன் பிள்ளைப் பேறற்ற பாவி நீயென்
அருமைநன் மகனால் அன்றோ இருமையும் அடைவாய் என்னப்
பெரிதுநாண் அடைந்து மேலைக் காயினும் பிள்ளைப் பேறு
தருதவம் புரிவேன் என்னாத் தனபதி தவமேற் செல்வான். (2)

### அவன் தவஞ் செய்யச் சென்ற காலத்துத் தன் தங்கை மகனுக்காக்கிய பொருளைத் தாயத்தார் வௌவுதல்

தன்பெருஞ் செல்வ மெல்லாம் மருமகன் தனக்கே ஆக்கி
அன்புகொள் மனைவி யோடும் அருந்தவ நெறியில் சென்றான்
பின்பவன் வரவு தாழ்ப்ப மருமகன் பெற்ற எல்லாம்
வன்பினால் வழக்குப் பேசி வௌவினர் தாய மாக்கள். (3)

### தனபதியின் தங்கையும், அவள் புதல்வனும் செல்வம் இழந்து ஆலவாய் இறைவனை அடைந்து வருந்துதல்

என்மகன் தன்னை மைந்தன் இன்மையால் எவருங் காணத்
தன்மக னாகக் கொண்டு தகுதியால் அன்றே காணி
பொன்மனை பிறவு நல்கிப் போயினான் என்முன் இப்பால்
வன்மையால் தாயத் தார்கள் அவையெலாம் வௌவிக்
[கொண்டார். (4)

ஒருத்திநான் ஒருத்திக் கிந்த ஒருமகன் இவனுந் தேருங்
கருத்திலாச் சிறியன் வேறு களைகணுங் காணேன் ஐய
அருத்திசால் அறவோர் தேறும் அருட்பெருங் கடலே எங்கும்
இருத்திநீ அறியாய் கொல்லோ என்றுபார் படிய வீழ்ந்தாள்.(5)

### வீழ்ந்தவள் சிறுதுயில் கொள்ள, இறைவன் அவள் கனவில் தோன்றிச் சொல்லுதல்

புலர்ந்தபின் தாயத் தோரைப் புரவலன் ஆணை ஆற்றல்
வலந்தரு மன்றத் தேற்றி மறித்தனை இருத்தி யாம்போந்(து)
அலந்தரும் அறிவால் மூத்தோர் அனைவரும் இசைய அந்தச்
சலந்தரு வழக்குத் தீர்த்துத் தருகுவம் போதி என்றார். (6)

### வணிகமகள் மறுநாள் தாயத்தாரை மறித்தல்

அட்டில்வாய் நெருப்பி டேலோ ரடியிடேல் அறத்தா றன்றிப்
பட்டிமை வழக்கால் வென்று போகொட்டேன் பலருங் கேட்க
இட்டனன் அரசன் ஆணை அறத்தவி சேறி ஆன்றோர்
ஒட்டிய படிகேட் டெங்கள் உரிப்பொருள் தந்து போமின். (7)

### வணிகமகளும், தாயத்தாரும் நீதிமன்றில் இருக்கும்போது இறைவன் தனபதி வடிவில் ஆங்கு வருதல்

அரசனிங் கில்லை கொல்லோ ஆன்றவர் இல்லை கொல்லோ
குரைகழல் வேந்தன் செங்கோல் கொடியதோ கோதில் நூல்கள்
உரைசெயுந் தெய்வந் தானும் இல்லைகொல் உறுதி யான
தருமமெங் கொளித்த தேகொல் என்றறத் தவிசிற் சார்வார். (8)

### வந்த இறைவன், வணிகமகளேயும் அவன் மைந்தனேயுங் கண்டு இரங்கி ஆறுதல் கூறுதல்

ஐம்படை மார்பிற் காணேன் சிறுசிலம் படியிற் காணேன்
மொய்ம்பிடை மதாணி காணேன் முகத்தசை சுட்டி காணேன்
மின்படு குழைகள் காணேன் வெற்றுடல் கண்டேன் அப்பா
என்பெறும் என்று பிள்ளேப் பணிகளும் கவர்ந்தார் என்ன.(9)
அனேவரும் இரங்க வாய்விட் டழுதவர் இளேயாள் தன்னேத்
தனேயனேக் கண்ணீர் மாற்றித் தடக்கையால் முதுகு தைவந்(து)
இனேயன்மின் என்முன் வேறென் றெண்ணன்மின் எண்ணு வஞ்ச
வினேஞர்வல் வழக்குச் சோர்ந்து விடுவது காண்மின் என்ன.(10)
நட்பிடை வஞ்சஞ் செய்தும் நம்பினுர்க் கூன்மா ருட்டத்(து)
உட்படக் கவர்ந்தும் ஏற்றேர்க் கிம்மியும் உதவா ராயும்
வட்டியின் மிதப்பக் கூறி வாங்கியும் சிலர்போல் ஈட்டப்
பட்டதோ அறத்தா றீட்டும் நம்பொருள் படுமோ என்ன. (11)

### இறைவன் ஆலவாயடிகளே நோக்கி முறையிட்டு நீதிமன்றத்தாரை நோக்கிக் கூறுதல்

மங்கல மாடம் ஓங்கு மதுரைநா யகனே நோக்கிச்
செங்கரஞ் சிரமேற் கூப்பி மாணிக்கந் தேற்றி விற்கும்
எங்குல வணிகர் ஏறே எம்மனேர் வழக்கை இந்தப்
புங்கவர் இடனுத் தீர்த்துத் தருகெனப் புலம்பி ஆர்த்தார். (12)
ஆவலித் தழுத கள்வர் வஞ்சரை வெகுண்டு நோக்கிக்
காவலன் செங்கோல் நுண்ணூல் கட்டிய தருமத் தட்டில்
நாவெனுந் துலேநா இட்டெம் வழக்கையு நமராய் வந்த
மேவலர் வழக்குந் தூக்கித் தெரிகென விதந்து சொன்னுர். (13)

### தாயத்தாரின் வழக்கு தவறுடையது எனக் கூறியபோது இவர் தனபதி அல்லர் என அத் தாயத்தார் மறுக்க, இறைவன் மெய்ப்பித்தல்

தந்தைதாய் மாமன் மாமி தாயத்தார் அவரை ஈன்ருர்
மைந்தர்கள் உடன்பி றந்தார் மனேவியர் கிளேஞர் மற்றும்
அந்தமில் குணங்கள் செய்கை ஆதிய அடையா ளங்கள்
முந்தையின் வழுவா வண்ணம் முறையினுல் மொழிந்தான் முன்னேன்.(14)

### தோல்வியுற்ற தாயத்தார் மறைதல்

இல்லினுக் கேகி மீள்வன் யான்என்றுங் குளத்திற் கேகி
ஒல்லையில் வருவேன் என்றும் ஒவ்வொரு வார்த்தை யிட்டு
வல்லெழு வனைய தோளார் அனைவரும் வன்கால் தள்ளச்
செல்லெழு முகில்போல் கூட்டஞ் சிதைந்தனர் ஒளித்துப் போனர். (15)

### மன்றத்தார், தனபதியின் பொருள் மைந்தனுக் குரியதென எழுதி வாங்கிக் கொடுக்க இறைவன் மறைதல்

அனையவர் போக நின்ற வறனவில் மன்றத் துள்ளோர்
தனபதி வணிகர் தந்த தனமெலாந் தத்த மைந்தற்கு
எனமனை எழுதி வாங்கி ஈந்தனர் ஈந்த எல்லை
மனமொழி கடந்த நாய்கர் மறைந்துதங் கோயில் புக்கார்.(16)

### அருஞ்சொற்பொருள்

1. கன்னி - அழியாத. நான்மாடக்கூடல் கடிநகர் - நான்மாடக்கூடல் என்னும் பெயருள்ள காவலையுடைய நகரம்; மதுரை. நிதிக்கோன் - குபேரன். பொன்னின் - பொன்போன்ற. நாள் முளரி சேக்கை - புதிய செந்தாமரை மலராகிய இருக்கை.

2. பெருமிதம் - செருக்கு. இருமை - இம்மை மறுமைப் பயன். மேலை - மறு பிறப்பு.

3. தாழ்ப்ப - காலந் தாழ்க்க. வன்பு - வலிமை. தாயமாக்கள்—பங்காளிகள்.

4. காணி - விளை நிலம். என்முன் - என் தமையன்.

5. தேர்தல் - நன்மை தீமைகளை ஆராய்தல். களைகண் - பற்றுக் கோடு. அருத்திசால் - அன்பு நிறைந்த. இருத்தி - இருக்கின்ருய். பார் படிய - நிலத்தில் பொருந்த.

6. புலர்தல் - விடிதல். புரவலன் ஆணை ஆற்ருல் - அரசன் ஆணை வழியால். மன்றம் - நீதிமன்றம். மறித்தனை - மறித்து; முற்றெச்சம். அலம் தரும் அறிவு - அமைந்த உணர்வு. சலம் - பொய். தருகுவம் - உன் பொருளைத் தருவோம். போதி - போவாயாக.

7. அட்டில்வாய் - சமைக்கும் இடம். பட்டிமை - பொய்மை. போகொட்டேன் - போக ஒட்டேன், விகாரம், அறத்தவிசு - தருமபீடம். உரிப்பொருள் - உரிமைப் பொருள்.

8. ஆன்றவர் - கல்வி கேள்விகளால் நிறைந்தவர். குரை கழல்-ஒலிக்கின்ற வீரக்கழல். அறத்தவிசு - நீதிமன்றம்.

9. ஐம்படை - காவற் கடவுளாகிய திருமாலின் சக்கரம், வில், வாள், தண்டு, சங்கு என்னும் ஐம்படைகளின் வடிவில் அமைக்கப்பெற்ற ஓரணி. இது குழந்தைகட்குக் காவலாக அணியப் பெறுவது. மொய்ம்பு - தோள். மதாணி - தோள்வளை. சுட்டி - நெற்றிச் சுட்டி. மின் - ஒளி. குழை - காதணி. பணி - அணிகலன். என்ன - என்றுகூறி.

10. தனையன் - புதல்வன். தைவந்து - தடவி. இனையன்மின் - வருந்தாதீர். வஞ்ச வினைஞர் - வஞ்சகச் செயலையுடைய பங்காளிகள்.

11. ஊன் மாறுட்டத்து உட்படக் கவர்ந்தும் - உயிர் மயங்கும்படி பொருளைக் கவர்ந்தும்; ஊன், உயிருக்கு ஆகுபெயர். படுமோ - அழியுமோ.

12. மாணிக்கம் தேற்றி - மாணிக்கங்களின் இலக்கணங்களைத் தெளிவித்து. புங்கவர் - உயர்ந்தவர்களாகிய நீதி மன்றத்தார். தருக என - எங்கள் பொருளைத் தருக என்று.

13. ஆவலித்து - வாய்புடைத்து ஆரவாரித்து. கள்வர் - பொய் வேடமுடைய இறைவர். துலை - துலாக்கோல். மேவலர் - பகைவர். தூக்கித் தெரிக - சீர்தூக்கி ஆராய்வீராக. விதந்து - தெளிவுபடுத்தி.

14. அந்தம் இல் - அளவிறந்த. முந்தையின் - முன்னுள்ளபடியே.

15. எழு - தூண். கால் - காற்று.

16. அறன் நவில் - அறங்கூறுகின்ற. தத்தமைந்தற்கு என - தத்துப் புதல்வனுக்கு உரியதென்று. மனை - உரிமைச் சாசனம். நாய்கர் - வணிகராய் வந்த சிவபெருமான்.

## கேள்விகள்

1. பரஞ்சோதியாருக்குத் திருவிளையாடற்புராணம் வரைய ஆதாரமாய் இருந்த நூல்கள் யாவை?

2. ஆலவாய் அடிகளை அடைந்து தளபதியின் தங்கை வருந்திக் கூறியன யாவை?

3. இறைவர் வணிக மகளது கனவில் தோன்றிக் கூறிய மொழிகள் யாவை?

4. தனபதியாக வந்த இறைவர் யாது கூறி அவைக்களம் அடைந்தார்?

5. தனபதி வடிவில் வந்த இறைவர் வணிக மகளுக்கு இரங்கிக்கூறிய ஆறுதல் மொழிகள் யாவை?

## பயிற்சி

1. இறைவன் அடியார்க்கு எளியன் என்பதை இக்கதை கொண்டு விளக்குக.

2. இக்கதையைச் சிவபெருமான் கூறுவதுபோல வரைக.

3. இதனை வணிக மகள் கூறுவதுபோல வரைக.

# 3. கம்பராமாயணம்

## சுந்தர காண்டம்

## காட்சிப்படலம்

கம்பராமாயணம், கம்பரது ராமாயணம் எனப் பொருள்படும். ராமாயணம் என்பது ராம அயநம் எனப் பிரியும். ராமனை அறிதற்கு இடம் என்பது இதன் பொருளாம். கம்பர் இந்நூலை இராமாவதாரம் எனக் குறிப்பிடுகின்ருர். இராமனது வரலாற்றைக் கூறும் இந்நூலை இயற்றிய கம்பரின் புலமை நலத்தைச் சொற்சுவை, பொருட்சுவை செறிந்த இந்நூற் பாடல்களே நன்கு புலப்படுத்துவனவாம். ' கல்வியிற் பெரியன் கம்பன் ' என நன்னூல் உறையில் உதாரணம் காட்டப்படுவதும், ' கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் ' என்னும் பழமொழியும், "விருத்த மென்னும் ஒண்பாவில் உயர் கம்பன்", "கம்பநாடன் கவிதையிற் போற் கற்ருேர்க்கு இதயங் களியாதே" என்னும் ஆன்ருேர் வாக்குகளும் இங்கே நினைக்கத் தக்கன.

இவர், சோழநாட்டுத் திருவழுந்தூர் ஆதித்தர் என்பவரின் புதல்வர் என்பர். இவருக்குக் கம்பர் என்னும் பெயர், நாடுபற்றி வந்ததென்றும் திருவழுந்தூர்க் காளிகோயிற் கொடிமரத்தடியிற் கிடந்ததால் வந்த தென்றும் காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனது பெயராகிய ஏகம்பர் என்பது மருவி வந்ததென்றும், வேறு பல காரணங்களால் வந்த தென்றுஞ் சொல்லப்படுகின்றது. இவர் குலம், உவச்சர் குலமென்றும், வேளாளர் குலமென்றுங் கூறுவர். இவர் காலம் கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டென்று ஒரு சாராரும், பன்னிரண்டாம் நூற்ருண்டின் பிற்பகுதி யென்று மற்ருெரு சாராரும் கருதுகின்றனர். இவர் தம்மைப் பேணிய திருவெண்ணெய்நல்லூர்ச் சடையப்ப வள்ளலைக் கம்பராமாயணத்திற் பல விடத்தில் பாராட்டுவதால் இவர்தம் நன்றி மறவா நல்லியல்பு விளங்கு கின்றது. சடகோபரந்தாதி, ஏரெழுபது, சரசுவதியந்தாதி என்பன இவர் இயற்றிய பிற நூல்களாகும்.

இந்நூல் வடமொழி வான்மீகி ராமாயணத்தைப் பெரும்பாலும் தழுவியது. இதன்கண் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம் என்னும் ஆறு காண்டங்கள் உள்ளன. அவற்றுள் சுந்தர காண்டத்தில் நம் பாடப் பகுதியாகிய காட்சிப்படலம் உள்ளது. இராவணனுல் அசோக வனத்தில் சிறைவைக்கப்பட்ட சீதையை அநுமன் கண்டு களித்தல் இப் படலத்தில் கூறப்படுகின்றது.

### அநுமனின் மனவுறுதி

மாடு நின்றவம் மணிமலர்ச் சோலையை மருவித்
தேடி யிவ்வழிக் காண்பெனேல் தீருமென் சிறுமை

ஊடு கண்டிலே னெனிற்பின்னர் உரியதொன் றில்லை
வீடு வேன்மற்றிவ் விலங்கன்மேல் இலங்கையை வீட்டி. (1)

### அசோகவனத்தில் சீதையின் நிலை

துயிலெனக் கண்கள் இமைத்தலு முகிழ்த்தலுந் துறந்தாள்
வெயிலிடைத் தந்த விளக்கென ஒளியிலா மெய்யாள்
மயிலி யற்குயில் மழலையாள் மானிளம் பேடை
அயிலெ யிற்றுவெம் புலிக்குழாத் தகப்பட்ட தன்னாள். (2)

விழுதல் விம்முதல் மெய்யுற வெதும்புதல் வெருவல்
எழுதல் ஏங்குதல் இரங்குதல் இராமனை எண்ணித்
தொழுதல் சோருதல் துளங்குதல் துயருழந் துயிர்த்தல்
அழுத லன்றிமற் றயலொன்றுஞ் செய்குவ தறியாள். (3)

துப்பி னாற்செய்த கைகொடு கால்பெற்ற துளிமஞ்(சு)
ஒப்பி னான்தனை நினைதொறு நெடுங்கண்க ளுகுத்த
அப்பி னனைந் தருந்துய ருயிர்ப்புடை யாக்கை
வெப்பி னாற்புலர்ந் தொருநிலை யுருதமென் துகிலாள். (4)

### சீதை இராமனை நினைந்து வருந்துதல்

அருந்து மெல்லட காரிட அருந்துமென் றழுங்கும்
விருந்து கண்டபோ தென்னுறு மோவென்று விம்மும்
மருந்து முண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென்று மயங்கும்
இருந்த மாநிலஞ் செல்லரித் திடவுமாண் டெழாதாள். (5)

மெய்த்தி ருப்பதம் மேவென்ற போதினும்
இத்தி ருத்துறந் தேகென்ற போதினும்
சித்தி ரத்தின லர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருக்கு முகத்தினை உன்னுவாள். (6)

ஆழ நீர்க்கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக் கெம்பிநின் தம்பிநீ
தோழன் மங்கை கொழுந்தி எனச்சொன்ன
வாழி நண்பினை உன்னி மயங்குவாள். (7)

நள்ளிரவில், சீதை, தனக்கு நிகழ்ந்த நிமித்தத்தினால்
யாதுபயன் விளையுமோ என்று திரிசடையினிடம் கூறி ஐயுறுதல்

நலந்துடிக் கின்றதோ நான்செய் தீவினைச்
சலந்துடித் தின்னமுந் தருவ துண்மையோ
பொலந்துடி மருங்குலாய் புருவங் கண்முதல்
வலந்துடிக் கின்றில வருவ தோர்கிலேன். (8)

முனியொடு மிதிலையின் முதல்வன் முந்துநாள்
துனியறு புருவமும் தோளு நாட்டமும்
இனியன துடித்தன ஈண்டும் ஆண்டென
நனிதுடிக் கின்றன ஆய்ந்து நல்குவாய். (9)

மறந்தனென் இதுவுமோர் மாற்றங் கேட்டியால்
அறந்தரு சிந்தையென் ஆவி நாயகன்
பிறந்தபார் முழுவதுந் தம்பி யேபெறத்
துறந்துகான் புகுந்தநாள் வலந்து டித்ததால். (10)

நஞ்சனை யான்வனத் திழைத்த நாளிடை
வஞ்சனை யால்வலந் துடித்த வாய்மையால்
எஞ்சல ஈண்டுதாம் இடந்து டித்ததால்
அஞ்சலென் றிரங்குதற் கடுப்பதி யாதென்றாள். (11)

திரிசடை நற்பயன் விளையும் என்று கூறித் தான் கண்ட
நன்னிமித்தத்தை எடுத்துக் காட்டுதல்

உன்னிறம் பசப்புற உயிரு யிர்ப்புற
இன்னிறத் தேனிசை இனிய நண்பினால்
மின்னிற மருங்குலாய் செவியின் மெல்லெனப்
பொன்னிறத் தும்பிவந் தூதிப் போயதால். (12)

ஆயது தேரினுன் ஆவி நாயகன்
ஏயது தூதுவந் தெதிர்தல் உண்மையால்
தீயது தீயவர்க் கெய்தல் திண்ணமென்
வாயது கேளென மறித்துங் கூறுவாள். (13)

திரிசிடை, பின்னும், அசோகவனத்தில் தான் அப்பொழுது கண்ட கனவைச் சொல்லுதல்

என்றனள் இயம்பிவே றிசைப்பக் கேட்டியால்
இன்றிவண் இப்பொழு தியைந்த தோர்கனு
வன்துணைக் கோளரி யிரண்டு மாறிலாக்
குன்றிடை உழுவையங் குழுக்கொண் டண்டியே. (14)

வரம்பிலா மதகரி உறையு மவ்வனம்
நிரம்புற வளைந்தன நெருக்கி நேர்ந்தன
குரம்பறு பிணம்படக் கொன்ற மாறிலாப்
புரம்புக இருந்ததோர் மயிலும் போயதால். (15)

ஆயிரந் திருவிளக் கமைய மாட்டிய
சேயொளி விளக்கதொன் றேந்திச் செய்யவள்
நாயகன் திருமனை நின்று நண்ணுதல்
மேயினள் வீடணன் கோயில் மென்சொலாய். (16)

பொன்மனை புக்கவப் பொருவில் போதினில்
என்னைநீ உணர்த்தினை முடிந்த தில்லென
அன்னையே அதன்குறை காணென் றுயிழை
இன்னமுந் துயில்கென இருகை கூப்பினாள். (17)

அரக்கியர் நடுவில் சீதையைக் கண்ட அநுமன் மகிழ்தல்

தொடற்கரும் அரக்கியர் காவல் சுற்றுளாள்
மடக்கொடி சீதையாம் மாத ரேகொலாம்
கடற்றுணை நெடியதன் கண்ணி னீர்ப்பெருந்
தடத்திடை இருந்ததோ ரன்னத் தன்மையாள். (18)

வீடின தன்றறன் யானும் வீகலேன்
தேடினென் கண்டனென் தேவி யேஎனு
ஆடினன் பாடினன் ஆண்டும் ஈண்டும்பாய்ந்(து)
ஓடினன் உலாவினன் உவகைத் தேனுண்டான். (19)

அருஞ்சொற்பொருள்

1. மாடு - பக்கம். மணி - அழகு. இவ்வழிதேடிக் காண்பனேல் என் சிறுமை தீரும் எனக்கூட்டுக. சிறுமை - துன்பம். ஊடு - சோலையின் உள். உரியது ஒன்று இல்லை - செய்தற்குரிய தொழில் வேறொன்றும்

இல்லை. இலங்கையை இவ்விலங்கல் மேல்வீட்டி வீடுவேன் எனக்கூட்டுக. விலங்கல்-மலை ; திரிகூடமலை. வீட்டி - அழித்து. வீடுவேன் - இறப்பேன்.

2. துயில் - உறக்கம். கண்கள் முகிழ்த்தலும் இமைத்தலும் எனக் கூட்டுக. முகிழ்த்தல் - மூடுதல். அயில் எயிறு - கூர்மையான பல்.

3. விம்முதல் - வாய்விட்டுப் புலம்புதல். ஏங்குதல்-மனங்கலங்குதல். துளங்குதல் - நடுங்குதல். உயிர்த்தல் - பெருமூச்சுவிடுதல். இங்கே சீதை யினிடத்து விமுதல் முதலான செயல்கள் ஒரே காலத்தில் நிகழ்ந்தனவாகச் சொன்னது கூட்டணியாம்.

4. துப்பு - பவளம். துளிமஞ்சு ஒப்பினுன்தனை - மழைத்துளிகளைப் பெய்கின்ற கருமேகத்தைத் தனக்கு ஒப்பாக உடைய ராமனை. அப்பு - நீர். புலர்ந்து - உலர்ந்து. இச்செய்யுளில் முதலடி இல்பொருளுவமை அணி.

5. மெல்அடகு-மென்மையான இலையுணவு. ஆர்இட-யாவர்படைக்க. அழுங்கும் - வருந்துவாள். செல் - கறையான். ஆண்டு - அவ்விடம்.

6. திரு - சிறந்த. பதம் - உலகாளும் பதவி. திரு - அரசாட்சிச் செல்வம்.

7. அம்பி கடாவிய - தோணியைச் செலுத்திய. வேடன் - குகன். மங்கை - சீதை. வாழி - அசை.

8. சலம் - கொடுமை. தருவது - துன்பத்தைத் தருவது. பொலம் - அழகு. துடிமருங்குலாய் - உடுக்கைபோன்ற இடையையுடைய திரி சடையே. வலம் துடிக்கின்றில - வலப்பக்கம் துடிக்கின்றன வில்லை. (இடப் பக்கம் துடிக்கின்றன).

9. முனி - விசுவாமித்திர முனிவன். முதல்வன் - இராமன். துனி - குற்றம். நாட்டம் - கண். ஆண்டுஎன - அப்பொழுது துடித்தாற்போல. நனி - மிகுதி. ஆய்ந்து - ஆராய்ந்து.

10. மாற்றம் - சொல். கேட்டி - கேட்பாய். ஆல், அசை. தம்பி - பரதன். கான் - காடு.

11. நஞ்சு அனையான் - நஞ்சுபோலக் கொடிய இராவணன். வனத்து இழைத்த நாளிடை-தண்டகாரணியத்தில் எனக்குத் தீங்கு செய்த காலத்தில். இரங்குதற்கு - என்னிடத்தில் இரக்கம் கொள்ளுமாறு.

12. உயிர்ப்பு உற - பிழைக்க. தேன் இசை - தேன் போன்ற பாட்டிசை. தும்பி - வண்டு.

13. தேரின் - ஆராய்ந்தால். ஏயது தூது - ஏவிய தூது. என்வாயது- என்னிடம் நிகழ்ந்ததை. வாய் - இடம். மறித்தும் - மீண்டும்.

14. ஓர் கனு இயைந்தது எனக்கூட்டுக. துணை - ஒன்றுக்கொன்று துணையான. கோளரி-வலிய சிங்கம். மாறிலா - ஒப்பிலாத. உழுவை-புலி.

15. மதகரி - மதத்தையுடைய யானை. குரம்பு - எல்லை. கொன்ற - கொன்றன; தெரிநிலை வினைமுற்று. புரம்புக - அச்சிங்கங்களின் நகரத்தை அடைதற்கு.

16. மாட்டிய - கொளுத்திய. நாயகன் - இராவணன். கோயில் - அரண்மனை.

17. பொருவில்போது - ஒப்பற்றபொழுது. உணர்த்தினை-துயிலெழுப்பினாய். முடிந்தது இல்-அக்கனா முடிந்ததில்லை. அதன் குறை-அக்கனாவின் எஞ்சிய பகுதியை. ஆயிழை - சீதை, அன்மொழித்தொகை.

18. மடம் - இளமை. கடல்துணை - கடல்போன்ற. தடம் - குளம்.

19. அறம் வீடினது அன்று - தருமம் அழிந்ததன்று. வீகலேன் - இறக்க மாட்டேன். முதற்பாட்டில் 'வீடுவேன்' எனக்கூறியது இங்கே நினைக்கத் தக்கது. தேவியே என்பதில் ஏகாரம் தெளிவுப் பொருளில் வந்துள்ளது.

## கேள்விகள்

1. அசோக வனத்தில் இருந்த சீதையின் நிலையைக் கம்பர் எவ்வாறு கூறுகின்றார்?

2. சீதை இராமனைப்பற்றி எவ்வெவ்வாறு எண்ணிக் கலங்கினாள்?

3. சீதைக்கு எவ்வெப்பொழுது என்னென்ன நிமித்தங்கள் தோன்றின?

4. திரிசடை கண்ட கனவு யாது?

5. அரக்கியர் இடையே சீதையைக் கண்ட அநுமன் எவ்வாறு மகிழ்ந்தான்?

## பயிற்சி

1. கம்பராமாயணம் பாடிய கம்பர் கவிப் பெருமையை நீங்கள் அறிந்தவரை வரைக.

2. இப்பாடப் பகுதியிலிருந்து நீங்கள் அறியும் சீதையின் பண்புகளை எழுதுக.

3. இப்பாடப் பகுதியின் செய்திகளைத் திரிசடை நமக்குக் கூறுவது போலக் கூறுக.

# IV. சிறு நூல்கள்

## 1. செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ்

இது செங்கழுநீர் விநாயகரைப் பற்றிய பிள்ளைத்தமிழ் என விரியும். செங்கழுநீர் விநாயகர் தொட்டிக்கலை என்னும் ஊரில் உள்ள விநாயகர். தொட்டிக்கலை என்பது செங்கற்பட்டு மாவட்டத்தில் திண்ணனூர் என வழங்கும் திருநின்றையூருக்கு அண்மையிலுள்ளது. பிள்ளைத்தமிழ் தொண்ணூற்றுறு வகைப் பிரபந்தங்களில் ஒன்று; இது பாட்டுடைத் தலைவரைக் குழந்தையாகக் கொண்டு பாடப் பெறுவது. இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். ஆண் பாற் பிள்ளைத் தமிழிற் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் என்னும் பத்துப் பருவங் களும் கூறப்படும். பெண்பாற் பிள்ளைத் தமிழில் மேற்சொல்லப்பட்ட பத்துப் பருவங்களில் இறுதி மூன்று பருவம் நீங்கலாகக் கழங்கு, அம் மானை, ஊசல் என்னும் மூன்று பருவங்களும் கூறப்படும்.

இதனை இயற்றியவர் சிவஞான முனிவர்; தென்பாண்டி நாட்டில் விக்கிரமசிங்கபுரத்தில் வேளாளர் மரபில் ஆனந்தக் கூத்தருக்கும், மயிலம் மைக்கும் அருந்தவப் புதல்வராகத் தோன்றியவர். இவர் வடமொழி, தென் மொழிப் புலமையிற் சிறந்தவர்; திருவாவடுதுறையை அடைந்து துறவு பூண்டு வேலப்ப தேசிகரிடம் உபதேசம் பெற்றவர்; உரைநடையிலும் செய்யுள் நடையிலும் பல நூல்கள் செய்துள்ளனர். இவர் கி. பி. 1735- ஆம் ஆண்டில் முக்தி எய்தினர்.

### சிற்றில் பருவம்

விருந்து விளிப்போம் எனக்கருதும்
வேலை யடிகேள் இவணீயே
விரும்பி வந்தாய் எனமகிழ்ச்சி
மீக்கூர் தலினல் செவ்வாயின்
முருந்து தோன்ற முறுவலித்தேம்
அல்லால் ஒருநின் கரிமுகம்போல்
முகமும் பூதப் பெருவயிறும்
முடங்குங் குறள்தாள் நகுநடையும்
இருந்த வாறு நோக்கிநகைத்
திட்டே மல்லேம் இடந்தோறும்
இருக்கு முழக்குந் தேவாரத்
திசையுந் துவன்றி ஓங்கவளந்

திருந்துங் கலைசைச் செங்கழுநீர்ச்
சிறுவா சிற்றில் சிதையேலே
தெள்ளித் தெளிந்தோர்க் கள்ளூறுஞ்
செல்வா சிற்றில் சிதையேலே.

அருஞ்சொற்பொருள்

பாட்டுடைத் தலைவராகிய விநாயகர் சிறுமியர் இழைத்த மணற்சிறு வீட்டைச் சிதைக்கும்போது 'சிதையேல்' என அச்சிறுமியர் வேண்டுதல் இப்பருவத்தில் கூறப்படுகின்றது.

விளிப்போம் - அழைப்போம். வேலை - காலம். மீக்கூர்தல் - மிகுதல். முருந்து - மயிலின் அடியிறகின் முள்போன்ற பல். முறுவலித்தேம் - சிரித்தோம். கரி - யானை. முடங்கும் - வளைந்த. குறள்தாள் - குறுகிய கால். நகுதல் - சிரித்தல். இருக்கு - வேதம். துவன்றி - நிறைந்து. சிதையேல் - அழியாதே. அள்ளூறும் - வாயூறும்.

## 2. அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழ்

இதனை இயற்றியவர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை. இவர் திரிசிரபுரத்துக்கு மேற்கே காவிரியின் தென்பாலுள்ள அதவத்தூரில் சைவ வேளாளர் மரபில் சிதம்பரம் பிள்ளைக்கும் அன்னத்தாச்சிக்கும் புதல்வராய் 6-4-1815-இல் தோன்றினர். இவர் தமிழ்ப்புலமையிற் சிறந்து விளங்கி, மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் முதலிய பலர்க்கு அருந்தமிழ் அறிவுறுத்தினர். நினைவாற்றலும், விரைந்து செய்யுள் இயற்றுந் திறனும் உடையவராய்ச் சிறந்த அகலக் கவியாக இருந்தனர். இவரால் இயற்றப் பெற்ற புராணங்களும், பிள்ளைத் தமிழ் முதலான பிரபந்தங்களும் பலவாகும்.

இவர் 1—2—1876-இல் இம்மண்ணுலக வாழ்வை நீத்தார்.

அகிலாண்ட நாயகி என்பது திருவானைக்காவில் உள்ள அம்மையின் திருப்பெயர்.

வருகைப் பருவம்

பொன்னே வருக மூவுலகும் பூத்தாய் வருக நாயேனைப்
புரந்தாய் வருக வழுதியர்கோன் புதல்வி வருக முகிற்கிளைய
மின்னே வருக மெய்ஞ்ஞான விளக்கே வருக மறைநான்கின்
விரிவே வருக பேரின்ப விளைவே வருக மிகுங்கருணை
அன்னே வருக அகநெகுவார்க் கணியே வருக அலர்மடவார்க்
கரசே வருக உரைப்பருஞ்சீர் அம்மேவருக அழற்கரத்து
மன்னோர் உடலம் பகிர்ந்தஇள மயிலே வருக வருகவே
மதமா தங்க வனத்துமட மானே வருக வருகவே.

### அருஞ்சொற்பொருள்

பாட்டுடைத் தலைவியாகிய அம்மையை 'வருக' என அழைத்தல் இப் பருவத்தில் கூறப்படுகின்றது. (வாரானை - வருதல்.)

பூத்தல் - தோற்றுவித்தல். வழுதியர்கோன் - மலையத்துவசபாண்டியன். முகிற்கு - கரிய மேகம் போன்ற திருமாலுக்கு ; முகில், உவமையாகு பெயர். அன்னே - தாயே. அலர்மடவார் - திருமகளும், நாமகளும். அழல் கரத்துமன் - நெருப்பைக் கையிலேந்திய சிவபெருமான். மாதங்க வனம் - திரு ஆனைக்கா ; மாதங்கம் - யானை.

## 3. முக்கூடற்பள்ளு

இது முக்கூடலில் கோயில்கொண்டிருக்கும் திருமாலைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பள்ளர் வாழ்க்கையைக் கூறுவது. முக்கூடல் என்பது திருநெல்வேலி மாவட்டத்தில் பொருநையாற்றின் வடகரையில் உள்ள ஒரு சிற்றூர். இது சித்திராநதி, கோதண்டராமநதி, பொருநைநதி ஆகிய மூன்று நதிகள் கூடுமிடத்தில் இருப்பதால் இப்பெயர் பெற்றது. இதற்கு இப்போது வழங்கும் பெயர் சீவலப்பேரி என்பது. சீவலப்ப மாறன் என்னும் பாண்டியனால் இவ்வூர் தோற்றுவிக்கப்பட்டமையின் இப்பெயர் பெற்றது என்பர். இங்கு எழுந்தருளியிருக்கும் திருமாலின் பெயர் அழகர் என்பது. இந்நூலை இயற்றிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இவர் தம்மைப் பேணிய காவை வடமலேந்திரனை இந்நூலில் பலவிடங்களில் பாராட்டியுள்ளார். காவை என்பது திருப்பரங்குன்றத்தை அடுத்துள்ளது. காவனூர் என்பது காவை என மருவி வந்தது. வடமலேந்திரனின் இயற் பெயர் வடமலையப்ப பிள்ளையன் என்பது. இந்நூலாசிரியர் காலம் கி. பி. 1676—1730 வரை என்பர்.

### குயில்

சீவலப் பேரிதமிழ் மூவகைக் கல்வியும்
செல்வமும் பெருகவே கூவாய் குயிலே
மாவளத் துடன்அழகர் தாவளக் குடிவாழ
மருதூரை வாழ்த்தியே கூவாய் குயிலே
பாவலர்க் குபகாரி காவையம் பலவாணன்
பலகிளையும் தழைக்கவே கூவாய் குயிலே
காவலர்க் குயர்பெருமை மேவுதேர்ப் பாலழகர்
கட்டளைகள் தழைக்கவே கூவாய் குயிலே. (1)

### மழை பெய்தல்

காவுக் கிறைவன் ஆகும் இந்திரன்
ஏவற் பணிகொண் டெழுந்தகார்
கடலிற் படிந்து திருவில் கோட்டி
அடல்முக் கூடல் அரியுமாய்ப்
பூவுக் குயர்ந்த கலைமின் னோடு
மேவிக் கமலத் தயனுமாய்ப்
புனலைத் தரித்து வரையி லேறிக்
கனலைத் தரித்த சிவனுமாய்த்
தாவிப் பறந்து பணிகள் பதுங்கக்
கோவித் தெழுந்த கருடனும்
தானே யாகி உலகுக் குரிமை
ஊனே யாகி உயிருமாய்க்
கோவிற் பெரிய வடம லேந்திரன்
மாவிற் கறுத்துப் பொழிந்தபின்
குளிரு கின்றது கோன்க முத்தினில்
வெளிறு கின்றது வானமே. (2)

### பயிர் விளைவு

பதிந்த நடப்பேறிப் பசப்பும் ஏறிப்
பசந்து குருத்துமென்மேல் பரந்து செறிந்து
முதிர்ந்த தமிழிசைக்கு முடிய சைக்கும்
முதல்வர் எனத்தழைத்து முதல்கு ழைந்தே
பொதிந்த பொதியைநீட்டிப் பூட்டிக் காட்டிப்
புறப்போர் பொன்இணங்குகை போல வணங்கி
எதிர்ந்த கதிர்முளைத்தே இடை பழுத்து
ஏற்ற விளைவுதோற்றந் தோற்றியதே. (3)

### அருஞ்சொற்பொருள்

1. இப்பாடல், பள்ளியர் குயிலை நோக்கிக் கூறுவதாகப் பாடப்பட்டுள்ளது. சீவலப்பேரி - முக்கூடல். தமிழ் மூவகை - இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ். தாவளக் குடிகள் - மருதநிலத்துக் குடிகள் ; தாவளம் - மருதநிலத்தூர். காவை அம்பலவாணர் - காவை வடமலையப்ப பிள்ளையனின் முன்னோர். தேர்ப்பாலழகர் - பார்த்தசாரதி.

2. கா - கற்பகச்சோலே. இந்திரன் மேகத்துக்குத் தலைவன் ஆதலால் மேகம் அவனது ஏவற்பணிகொண்டெழுந்தது. கார் - மேகம். திருவில் கோட்டி - வானவில்லை ஆகாயத்தில் வளைத்து. அரி - திருமால். கடலில் படிந்தமையாலும், வில்லை வளைத்தமையாலும் மேகம் திருமாலாயிற்று. கலைமின் - சரசுவதி, கலைகின்ற மின்னல். கலைமின்னோடு மேவியமையால் மேகம் பிரமனை ஒத்தது. பணி - பாம்பு. வடமலேந்திரன் - இந்நூலாசிரியரைப் பேணிய வள்ளல். வானம் வெளிறுகின்றது - மழை பெய்தபின் வானம் களங்கமற்றுக் காணப்படுகின்றது.

3. பசப்பு - பசுமை. முதல்வர் - திருமால். பொதி - கதிர்த்தொகுதி. பொன் இணங்கு கை - பொன் பொருந்திய கை. வணங்கி - வளைந்து. தோற்றம் - அழகு.

## கேள்விகள்

1. விநாயகர் பிள்ளைத் தமிழ் ஆசிரியர் விநாயகர் தோற்றத்தை எவ்வாறு வர்ணிக்கின்றார்?

2. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை வருகைப் பருவத்தில் அகிலாண்ட நாயகியை என்னென்ன கூறி 'வருக' என்று அழைக்கின்றார்?

3. முக்கூடற் பள்ளு ஆசிரியர் எவற்றைக் கருதிக் குயிலைக் கூவுமாறு வேண்டுகிறார்?

4. 'பயிர் விளைவு' எங்ஙனம் விளக்கப்பட்டுள்ளது?

## பயிற்சி

1. பிள்ளைத் தமிழ் ஆசிரியர்களுள் ஒருவர் வரலாற்றை வரைக.

2. 'முக்கூடற் பள்ளு'வைப் பற்றிப் பத்து வரிகள் எழுதுக.

3. வாக்கியங்களில் அமைத்துக் கூறுக: விளிப்போம், செவ்வாய், இடந்தோறும், தெளிந்தோர், மாதங்கவனம், மாவளம், மூவகைத் தமிழ், கறுத்து, தமிழிசை.

# V. புனைந்துரை

## 1. தாமரை

இப்பாடல் ந. பலராமையரால் இயற்றப்பெற்றது. இவர் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரிடம் கல்விபயின்றவர். கடலூர் உயர்நிலைப் பள்ளி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் முதலிய இடங்களில் தமிழாசிரியராக இருந்து சிறந்த தமிழ்ப்பணி புரிந்துள்ளார். சூளாமணி வசனம், தசகுமார சரித்திரம் முதலிய நூல்கள் இவரால் எழுதப்பெற்றுள்ளன. இவர் சில ஆண்டுகளுக்கு முன் இவ்வுலக வழ்ாவை நீத்தனர்.

தாமரையி னுண்மலரே தக்க நினதெழிலை
யேமுறயான் காண்டோறு மென்னுளத்தி னோகையெழூஉம்
பாமருவும் பல்கருத்துப் பண்பி னுதித்திடுமால்
காமருநின் தன்னையென்றுங் கண்ணிலொற்றிக் கொள்வலரோ.

அருஞ்சொற்பொருள்

நாள் மலர் - புதிய மலர். ஏம் - இன்பம்; இஃது ஏமம் என்பதன் கடைக்குறை. ஓகை - மகிழ்ச்சி. கொள்வல் - கொள்வேன், அரோ - அசை.

## 2. நினைவும் முடிவும்

இப்பாடல் கவிமணி திரு. சி. தேசிகவிநாயகம் பிள்ளையால் இயற்றப் பெற்றது. இவர் திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சார்ந்த சுசீந்திரத்திற்கு அண்மையிலுள்ள தேரூர் என்னும் சிற்றூரில் கி. பி. 1876-ஆம் ஆண்டில் பிறந்தவர். இவர் தந்தையார் சிவதாணுப் பிள்ளை; தயார் ஆதிலட்சுமி அம்மாள். இவர் ஆங்கிலமும் தமிழும் நன்கு கற்றவர். பல ஆண்டுகள் அரசாங்க அலுவலிலும், ஆசிரியத் தொழிலிலும் அமர்ந்து வேலைசெய்து 1931-ஆம் ஆண்டுமுதல் ஓய்வுபெற்று வருகின்றனர். இவர் பாடல்கள் தெளிவும் இனிமையும் வாய்ந்து சிறந்து விளங்குவன.

மாலைக்காலத்தில் குவிந்த தாமரைப்பூவினுள் அகப்பட்ட ஒரு வண்டின் நினைவும், முடிவும் வேறுபட்ட செய்தி இப்பாடலில் கூறப்படுகின்றது.

‘ இருளும் அகலும் இரவியும் தோன்றும் !
பொருவில்இத் தாமரைப் பூவும் மலரும் ;
மலரும் பொழுதிவ் வன்சிறை நீங்கி,
உலகில் எங்கும் உலவித் திரிந்து,

பூவெழு பற்பல புதுவனங் கண்டு,
நாவெழு சுவைதரு நறைமிக உண்டு
வாழ்குவன்' என்றொரு மதுகரம் இருப்பத்
தாழ்மத வேழமொன் றுய்கயம் இறங்கிப்
பாசிலைப் பூவெலாம் பறித்து
வீசி எறிந்து வெறிகொண் டதுவே.

அருஞ்சொற்பொருள்

வரி 1. அகலும் - நீங்கும். இரவி - சூரியன். 2. பொருவில் - ஒப்பில்லாத. 3. வன்சிறை - வலிய சிறைக்கூடம், என்றது வண்டு குவிந்த தாமரைக்குள் அகப்பட்டதைக் குறித்தது. 5. வனம் - காடு. 6. நறை - தேன். 7. மதுகரம் - வண்டு. 8. வேழம் - யானை. கயம் - நீர்நிலை. 9. பசுமை + இலை = பாசிலை.

## 3. கடல்

இப்பாடலை இயற்றியவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் ஆராய்ச்சிப் பகுதி விரிவுரையாளர் வித்துவான் கோ. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., பி. எல். இவர் சிந்துபூந்துறை என்னும் ஊரில் டி. எஸ். கோமதிநாயகம் பிள்ளை பி.ஏ. அவர்களுக்கும் உலகம்மாள் அவர்களுக்கும் புதல்வராய் 1906-ஆம் ஆண்டில் அக்டோபர் மாதத்தில் பிறந்தவர். இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆழ்ந்த தேர்ச்சியுடையவர். இவரது கேட்டாரைத் தம்வயப்படுத்தும் சொற்பொழிவு வன்மையைத் தமிழுலகம் நன்கறியும். இவர் திறம்பட உரைநடை எழுதும் ஆற்றலும் அமையப் பெற்றவர்.

எங்கும் ஒரேபரப்பாய்—நீரும்
        ஏங்கித் தயங்குது பார்.
பொங்கும் நுரைகளுடன்—அலையும்
        பொம்மென்று துள்ளுது பார்.
காலக் கடவுளாவான்—கடலைக்
        கண்டும் அறிந்திரானே
சாலப் புத்திளமை—கொண்டு
        சாயா துழைக்குது பார்.
தகதக என்று வந்து—தங்கத்
        தகடொன்று தோன்றுது பார்
முகநகப் பார்த்தாயானல்—நிலவும்
        முத்தொளி வீசுதுதேர்.

நீந்தக் கற்றுக்கொண்டு—கப்பலும்
நீளமாய் வைத்துக்கொண்டு
வேந்தர் ஆகி விட்டார்—வீர
வெள்ளை மனிதரெல்லாம்.
அச்சம்நீ கொள்ளாதிரு—அலையும்
அன்பாய் அழைக்குதுபார்
நிச்சயம் கப்பலேறு—நீயும்
நேயமாய் மேம்படலாம்.

### அருஞ்சொற்பொருள்

நிச்சயம் - உறுதி. நேயம் - அன்பு.

### கேள்விகள்

1. தாமரையைக் கண்டால் ஆசிரியர் உள்ளத்துத் தோன்றுவன எவை ?
2. தாமரை மலருள் வண்டு யாது நினைந்து இருந்தது ?
3. கடலைக் கண்டு ஆசிரியர் யாது கூறுகின்றார் ?

### பயிற்சி

1. ‘நினைவும் முடிவும்’ என்ற கவிதையால் நீவிர் அறிந்து கொள்வதை விளக்கி வரைக.

2. பிரித்தெழுதுக : நாண்மலர், பாசிலை, நினதெழில், என்னுளம், கண்ணிலொற்றி, இத்தாமரை, பூவெழு, புதுவனம், புத்திளமை, தகடொன்று.

3. கடலைப்பற்றி ஆசிரியர் கூறுவனவற்றைப் பத்து வரிகட்குள் எழுதுக ; அடுத்த பத்தியில் கடலைப் பற்றி நீங்கள் அறிந்தவற்றைப் பத்து வரிகட்குள் எழுதுக.

# VI. பல்சுவை

## 1. சீட்டுக் கவி

இச் சீட்டுக் கவி அந்தகக் கவி வீரராகவ முதலியாரால் சந்திர வாணன் என்பவனுக்கு எழுதி விடுக்கப்பட்டது. அந்தகக் கவி வீரராகவ முதலியார் செங்கற்பட்டு மாவட்டத்தில் பொன்விளைந்த களத்தூருக்கு அண்மையில் உள்ள புதூரில் பிறந்தவர். தந்தையார் வடுகநாத முதலியார். இவர் பழவினை வயத்தால் புறக்கண் இழந்தவராயினும் அகக் கண்ணுகிய கல்வி அறிவு சிறக்கப் பெற்றவர். தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் உள்ள மன்னர், பெருஞ் செல்வர் இவர்களைப் பாடிப் பல பரிசில் பெற்றவர். இவர் இயற்றிய நூல்கள் திருக்கழுக்குன்றப் புராணம், திருவாரூருலா, சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ் முதலியன. இவரது காலம் கி. பி. 16-ஆம் நூற்றுண்டு.

மின்னு மாளிகை அநந்தை யாதிபதி
சந்த்ர வாணமகி பாலன்முன்
வீர ராகவன் விடுக்கும் ஓலைதன்
விருப்பி ருல்வலிய வேயழைத்(து)
உன்னு காவிய மதிற்பெ ருத்ததொரு
கோவை யோதுகென ஓதினன்
ஓதி மாசமொரு மூன்று போகியொரு
நாலு மாச மளவாகவும்
இன்ன முந்தனது செவியில் ஏறவிலை
என்னில் என்னஉல கெண்ணுமோ
இராச ராசர்திறை கொள்ளும் என்கவிதை
இங்கு வந்துகுறை யாகுமோ
தன்னை என்சொலுவர் என்னை என்சொலுவர்
தான்தமிழ்க் குமணன் அல்லவோ
தன்பு கழ்க்குமிது நீதியோ கடிது
தானின் னேவருதல் வேணுமே.

அருஞ்சொற்பொருள்

சந்திரவாணனைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. அநந்தை என்பது அனந்தபுரம் என்பதன் மரூஉ. இவ்வூர் தென்னுற்காடு மாவட்டத்தில் விழுப்புரத்துக்கு அண்மையில் உள்ளது. உலகு என்ன எண்ணுமோ என மாற்றுக. சொலுவர் - சொல்லுவர் ; இடைக்குறை. கடிது - விரைந்து. இன்னே - இப்பொழுதே.

## 2. சிலேடை

இப்பாடல்களை இயற்றியவர் அழகிய சொக்கநாதப் பிள்ளை. இவர் திருநெல்வேலியில் வேளாளர் மரபில் தச்சநல்லூர் வள்ளியப்பப் பிள்ளையின் புதல்வர்; இராசவல்லிபுரம் முத்துசாமி பிள்ளையால் ஆதரிக்கப் பெற்றவர். இவர் காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ் முதலிய பல நூல்கள் இயற்றியுள்ளார். இவர் 65 ஆண்டுகளுக்குமுன் இருந்தவர்.

### சிவனுக்கும் தேங்காய்க்கும்

கல்லா லடியுறலால் கண்மூன் றிருப்பதனால்
எல்லோரும் பூசைக் கெடுத்திடலால்—வல்லோடு
கொள்ளுகையால் கங்கா குலமுத்து சாமிமன்னு
கள்ளிதழி யானிகர்தேங் காய். (1)

### சிவனுக்கும் வாழைப்பழத்துக்கும்

நஞ்சுந்தின் னப்பெறலால் நற்றோல் உரித்திடலால்
மிஞ்சுங் கனிதலை மேற்கொளலால்—விஞ்ச
உரமருவுஞ் சீர்ப்பணியால் ஓங்குமுத்து சாமி
பரமசிவன் வாழைப் பழம். (2)

### அருஞ்சொற்பொருள்

சிலேடை—பல பொருள்படப் பாடுவது

1. சிவனுக்கு :—கல்லாலடி - கல்லால மரத்தின்கீழ். வல் ஓடு - பிரமனது வலிய தலை ஓடு. தேங்காய்க்கு :—கல்லாலடியுறல் - கல்லில்அடித்து உடைக்கப்படுதல். கங்காகுலம் - வேளாளர் குலம். இதழியான் - கொன்றை மாலையையுடைய சிவபெருமான். நிகர் - ஒப்பாகும்.

2. சிவனுக்கு :—நஞ்சு-விடம். நல்தோல்-யானை புலிகளின் தோல். தோல் - யானையுமாம். கனி - கங்கை, இடைக்குறை. வாழைப் பழத்துக்கு :—நஞ்சும் - மிகக் கனிந்திருந்தும். கனிதல் - பழுத்தல்.

## 3. தொழில்

இப்பாடலை இயற்றியவர் தேசியகவி சுப்பிரமணிய பாரதியார். இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டயபுரத்தில் கி. பி. 1882-ஆம் ஆண்டில் பிறந்தவர். இவர் தந்தையார் சின்னசாமி ஐயர். தாயார் இலக்குமி அம்மையார். இவர் இளம் பருவத்திலேயே செய்யுளியற்றும் திறனுடையராய் விளங்கியவர்; தம் பலவகையான அருமைப் பாடல்களால் மக்கள் உள்ளத்

தில் நாட்டுப்பற்று, தாய்மொழிப்பற்று, உரிமையுணர்ச்சி முதலிய நற்பண்புகள் ஊன்றச் செய்தவர். இவர் கி. பி. 1921-ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வை நீத்தனர்.

இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே
யந்தி ரங்கள் வகுத்திடு வீரே
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே
கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயி ரந்தொழில் செய்திடு வீரே
பெரும்பு கழ்நுமக் கேயிசைக் கின்றேன்
பிரம தேவன் கலையிங்கு நீரே.

அருஞ்சொற்பொருள்

அரும்பும் - உண்டாகின்ற. இசைக்கின்றேன் - சொல்லுகின்றேன்.

## 4. ஈரடி இருநூறு

இந்நூலில் அமைந்த சொற்சுவை பொருட்சுவை செறிந்த எளிய இனிய குறட்பாக்களை இயற்றியவர் தஞ்சை மாவட்டத்தில் வண்டை நகருக்கு அடுத்துள்ள செம்பியன் குடியில் பிறந்த ஒரு பெரியார்.

நாட்டன்பு

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தன்னாட்டிற்(கு)
இன்னல் விளைக்கும் வினை. (1)

கடன்

மறந்தும் கடன்கொள்ளேல் மற்றதன் கேடு
இறந்தும் தனைவிடுதல் இல். (2)

கடல்அலையும் ஓயும் கடன்கொண்டார் நெஞ்சில்
படுங்கவலை ஓய்தல் இலை. (3)

எழுத்தாண்மை

எழுத்தாளன் ஆதல் எளிதாம் எழுதுமுன்
எண்ணம் திருந்தும் எனின். (4)

### தாய்மை

மக்கள் மனைசுற்றம் மற்றுள்ளோர் அன்பெல்லாம்
தக்கதோ தாயன்புக் கீடு. (5)

### கேள்விகள்

1. வீரராகவ முதலியார் விடுத்த ஓலைச்செய்தி யாது?
2. தேங்காய்க்கும் சிவனுக்கும் அமைந்த சிலேடைப் பொருத்தத்தை ஆராய்க.
3. பாரதியார் கூறும் தொழில்கள் எவை?
4. எழுத்தாளன் ஆதல் எப்பொழுது எளிது?
5. கடலால் வரும் கேடுகள் யாவை?

### பயிற்சி

1. பாரதியாரது வாழ்க்கை வரலாற்றைப் பற்றிப் பத்து வரிகள் எழுதுக.
2. 'சீட்டுக்கவி' என்பது பற்றிப் பத்து வரிகள் எழுதுக.
3. 'கைத்தொழில்' என்பது பற்றி ஒன்றரைப் பக்கத்தின் மிகாமல் ஒரு கட்டுரை வரைக.

# உரை நடை

## 1. திருக்குறள், உரைப்பாயிரம்

(பரிமேலழகர்)

### அறத்துப்பால்

இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமி லின்பத் தழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந் தர்க்கு உறுதியென உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட பொருள் நான்கு: அவை அறம், பொருள், இன்பம், வீடென்பன. அவற்றுள், வீடென்பது சிந்தையும் மொழியுஞ் செல்லா நிலைமைத்தாகலின், துறவறமாகிய காரணவகையாற் கூறப் படுவதல்லது இலக்கணவகையாற் கூறப்படாமையின், நூல் களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்.

அவற்றுள், அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூவகைப்படும்.

அவற்றுள் ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத் தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரியம் முதலிய நிலைகளி னின்று அவ்வவற்றிற்கோதிய அறங்களின் வழுவா தொழுகுதல்.

வழக்காவது ஒரு பொருளைத் தனித்தனியே எனதென தென்றிருப்பார் அதுகாரணமாகத் தம்முள் மாறுபட்டு அப் பொருள்மேற் செல்வது. அது கடன் கோடல் முதற் பதினெட்டுப் பதத்ததாம்.

தண்டமாவது அவ்வொழுக்க நெறியினும் வழக்கு நெறியினும் வழீஇயினரை அந்நெறி நிறுத்துதற்பொருட்டு ஒப்பநாடி அதற்குத்தக வொறுத்தல்.

இவற்றுள் வழக்குந் தண்டமும் உலகநெறி நிறுத்துதற் பயத்தவாவதல்லது ஒழுக்கம்போல மக்களுயிர்க்கு உறுதி பயத்தற் சிறப்பிலவாகலானும், அவைதாம் நூலானேயன்றி உணர்வு மிகுதியானும் தேயவியற்கையானும் அறியப்படுத லானும், அவற்றையொழித்து ஈண்டுத் தெய்வப் புலமைத்

திருவள்ளுவராற் சிறப்புடைய ஒழுக்கமே அறமென எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதுதான் நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறு பாடுடைமையின், சிறுபான்மையாகிய அச்சிறப்பியல்புகள் ஒழித்து, எல்லார்க்கும் ஒத்தலின் பெரும்பான்மையாகிய பொது இயல்பு பற்றி இல்லறம் துறவறமென இருவகை நிலையாற் கூறப்பட்டது.

### அருஞ்சொற்பொருள்

இறையவர் - தேவர். அந்தம் - முடிவு. எய்துதல் - அடைதல். சிந்தை - மனம். வீடு - மோட்சம். தண்டம் - தண்டனை. வழீஇயினர் - தவறினர். ஒறுத்தல் - தண்டித்தல்.

### கேள்விகள்

1. நூல்களால் கூறப்படும் மூன்று யாவை ?
2. நூல்களில் வீடு கூறப்படாதது ஏன் ?
3. அறத்தின் மூவகைகள் யாவை ?
4. தண்டமாவது யாது ?
5. எது அறமென எடுத்துக் கொள்ளப்பட்டது ?
6. இல்லறம், துறவறம் என்று அறம் இருவகை நிலையாற் கூறப் பட்டது ஏன் ?

### பயிற்சி

1. அறத்துப்பால் என்ற இப்பாடத்தின் கருத்தைச் சுருக்கிப் பத்து வரிகள் எழுதுக.
2. விளக்குக: ஒழுக்கம், வழக்கு, தண்டம்.
3. திருக்குறளின் சிறப்புக் குறித்து விளக்கி உங்கள் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

## 2. அன்னைக்கு எழுதிய கடிதம்

(டாக்டர் திரு. மு. வரதராசன், எம். ஏ., எம். ஓ. எல்., பிஎச். டி.)

அன்புள்ள அம்மா,

உன் கட்டளைப்படியே இதுவரையில் நடந்தேன். இன்று நடக்க முடியவில்லை.

" தமிழர்கள் உணர்ச்சி அளவில் ஊக்கம் மிகுந்தவர்கள்; வாய்ச்சொல் அளவில் வீரம் மிகுந்தவர்கள் ; இந்த இரண்டும் மட்டும் பெற்றவர்களால் ஒரு நாடு முன்னேற்றம் அடைய முடியாது. கடமை ஒழுங்கு ஒன்று வேண்டும். இந்த ஒன்று மட்டும் இருந்து, மற்ற இரண்டும் இல்லாதிருந்தாலும் கவலை யில்லாமல் தமிழ் நாடு எப்போதோ தலையெடுத்திருக்கும். நீ ஒரு தமிழன் ; பழங்காலப் பிற்போக்குத் தமிழனாக இருந்து வாயால் மட்டும் விளங்காதே, உணர்வால் மட்டும் உயராதே. செயலாலே சீர்ப்படு " என்று எனக்கு எழுதிய கடிதத்தை மறந்துவிடவில்லை. என் கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்து முற்போக்குத் தமிழன்தான் என்பதைக் காட்டப் போகிறேன் ; பாடங்களை நன்றாகக் கற்று முதல் வகுப்பில் தேறப்போகிறேன். ஆனாலும் நேற்றுவரையில் அமைதியாக இருந்ததுபோல், இன்று இருக்க முடியவில்லை. ஆகையால் தான் சில திங்கள் கழித்து இதுபோல் கடிதம் எழுதுகிறேன்.

அம்மா! நான் எப்படி இன்று அமைதியாக இருக்க முடியும்? உலகமே அழுகின்றதே! நான் மட்டும் புத்தக உலகத்தில் என்னை மறக்க முடியுமா?

உலகம் கண்ணீர் விடுகின்றது ; ஒரு வீடு, ஒரு நகரம், ஒரு நாடு கலங்கவில்லை; உலகம் கலங்கி உருகுகின்றது. வீடுதோறும் ஒவ்வொருவர் முகமும் வாடிச் சுருங்கிவிட்டதே!

அம்மா, இமயமலை தலைகீழாய்ப் புரண்டிருந்தாலும், இவ்வளவு பெரிய அதிர்ச்சி உண்டாயிருக்காது. பூகம்பம் உண்டானாலும், ஒவ்வொரு பகுதிதான் நடுங்கும். ஆனால் உலகத்தார் உள்ளமெல்லாம் அதிரும் அதிர்ச்சி இந்திய நாட்டிலே டில்லியிலே நடந்துவிட்டதே!

வாழ்ந்த நாளிலும் எல்லோருடைய வாழ்க்கையிலும் ஒவ்வொரு வகை மாறுதலை ஏற்படுத்தும் ஆற்றல் அந்தத்

தூய மெல்லிய உடலுக்கு இருந்தது. உணர்வற்று வீழ்ந்த நாளிலும் எல்லோரையும் ஒருசேரக் கலங்கவைக்கும் ஆற்றல் அந்த நல்லுடலுக்கு இருந்ததே!

புத்தர் வாழ்ந்தார்; அவர் வாழ்நாளில் லக்ஷக்கணக்கான மக்களின் வாழ்க்கையைத் திருத்த முடிந்தது. சாக்ரடிஸ் வாழ்ந்தார்; அவருடைய வாழ்நாளில் பதிஞயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் மாறுதலே விளேக்க முடிந்தது. ஏசுநாதரும் அவ்வாறே. ஆனல், வாழ்நாளிலேயே கோடிக் கணக்கான மக்களின் வாழ்க்கையில் மாறுதலே உண்டாக்கினவர் யார் அம்மா? **காந்தியடிகள்**—இந்தப் பெயரையும் நினைத்து, தம் மனத்தையும் தொட்டுப் பார்க்கட்டும்! அவருடைய பகைவரும் அவரிடமிருந்து கற்று வளர்ந்த புதிய முறைகள் சில உண்டு என்பதை உணர்ந்துகொள்வார்களே!

எல்லோரும் அரசியல் காந்தியை அறிவார்கள். அரசியலில் அவர் பெருந்தலேவர் என்பதே பெரும்பாலோர்க்குத் தெரிந்தது. ஆனல், இது முழு உண்மை அன்று; ஓரளவு தான் உண்மை. இன்னும் எண்ணிப் பார்த்தால், அவருடைய அரசியல் கொள்கையில் கருத்து வேறுபட்டவர்கள் எங்கும் இருக்கின்ருர்கள். அவருடைய அரசியல் கொள்கைகளுக்குச் செல்வாக்கு இருந்தாலும் உடன்படாமல் புறக்கணித்த தலேவர்களும் உண்டு; அறிஞர்களும் உண்டு; தொண்டர்களும் உண்டு.

ஆனலும், அவருடைய அரசியல் நெறியே இன்றுவரையில் பெற்றுள்ள வெற்றிக்கெல்லாம் காரணம். அவருடைய அறிவுரையே இன்று பல தலேவர்கள் உயர்வுக்குக் காரணம்; பல அறிஞர்கள் பெருமைக்குக் காரணம்; இந்தியாவின் தலே நிமிர்ந்த வாழ்வுக்கும் காரணம்.

அம்மா, மறக்க முடியவில்லே. நம் வீட்டில் நாம் பல நாள் காந்தியடிகளின் கொள்கைகளேப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த நாட்களே மறக்கமுடியவில்லே. அரசியலில் அவர் சொல்வதில் இதுமட்டும் சரி, அது சரியன்று என்று வாதாடினேம். ஆனல் ஒவ்வொரு நாளும் அவருடைய தொண்டு வாழ்வையோ, இயற்கை நெறியையோ, சமயக்கொள்கையையோ, அற ஒழுக்கத்தையோ, கடமை ஒழுங்கையோ முடிவில்

குறிப்பிட்டு அங்கே ஒப்பற்ற நிலையை வணக்கத்தோடு போற்றி அடக்கத்தோடு அமைதியடையவில்லையா ? அவரை விடப் பெரிய அரசியல் அறிஞர்கள் இருக்கலாம். ஆனால், அவர் வாழ்ந்த வாழ்வைவிடச் சிறந்த வாழ்வை—தூய வாழ்வைக் குறிப்பிட வாய் இல்லாமல் அடங்கிவிட்டோம் அல்லவா ?

" உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன் "

என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒரு தமிழன் எழுதிவிட்டுச் சென்றான். இந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக அந்த ஒரு குறளுக்கு எடுத்துக்காட்டு இல்லாமலிருந்தது. காந்தியடிகளின் வாழ்வுதான் ஒரே எடுத்துக்காட்டாக நின்றது. அன்று திருவள்ளுவர் உண்மையின் பெருமையினை உணர்ந்து உணர்வுலகத்தில் நின்று எழுதினார். எழுதிய அவரைப் பற்றியே தமிழகத்தில் பலருக்குத் தெரியாது. ஆனால், அவர் உணர்ந்து எழுதிய கற்பனை அது. அந்த உண்மை, கற்பனையாகவே நிற்கவில்லை; ஓர் அரிய வாழ்வாக மலர்ந்தது. அந்த மலர் வாடியது; சாம்பலானது. மதவெறியின் போர்வை போர்த்த அரசியல் வெறி அந்த அருமை மலரை கசக்கி எறிந்தது.

அந்த ஒரு குறள் மட்டும் என்ன? திருவள்ளுவரின் அறத்துப்பாலில் உள்ள ஒவ்வோர் எழுத்திற்கும் எடுத்துக்காட்டாக வாழ்ந்த வாழ்க்கை அல்லவா அது ?

எத்தனையோ நம்பிக்கைகள், எவ்வெவ்வாறோ தடுமாறும் நாட்கள் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் வருகின்றன. ஆனால், அறம் என்ற ஒன்று உலகத்தை ஆளும் சட்டமாக இருக்கிறது என்பதை என்றும் தளரா நம்பிக்கையாகக் கொண்டு வாழ்ந்த வாழ்க்கை, அன்று மாலை அடங்கிய அந்தப் பெருவாழ்வு !

இன்னொன்றும் இந்த நேரத்தில் எனக்குத் தோன்றுகிறது: அடிகள் பெரியவர், ஒப்பற்ற தலைவர் என்பதை உலகமெல்லாம் உணர்ந்துவிட்டது உண்மைதான். ஆனால் அவருடைய கொள்கைகளின் பெருமையை உணர்ந்தவர்கள் எத்தனை பேர், அம்மா ? அரசியலில் மட்டுமே அவர்

இன்னவர் என்பதைப் பொதுமக்கள் உணர முடிந்திருக்க லாம். இயற்கை, அறம், எளிமை, கடமை, ஒழுங்கு முதலிய வற்றில் அந்த ஞாயிறு வீசிய ஒளியால் பயனடைந்தவர்கள் மிக மிகச் சிலரே என்று எண்ணுகிறேன். அப்பா ஒரு நாள் கூறியதுபோல், காந்தியடிகளின் உயர்ந்த கொள்கைகள் பொதுமக்கள் அறிவுக்கு எட்டாதவைகளே. பசியில்லாமல் உணவுவிடுதிக்குச் சென்று உண்பதுபோல், கலையுணர்வு இல்லாமல் சினிமாவுக்குச் சென்று காண்பதுபோல், அன்பு இல்லாமல் திருமணத்திற்குச் சென்று ஆரவாரம் செய்வது போல், நாகரிகத்தின் பெயரால் கொள்கைகளை உணராமல் வாயால் புகழும் மக்கள் மிகுதியாக இருக்கின்றார்கள். அதனால்தான், அந்தத் தூய உடல் வாடிய அன்று இரவே, கொலையும் கொள்ளையும் தீயிடலும் துன்புறுத்தலும் தொடங்கச் சிலருக்கு மனம் வந்தது. ஆனாலும் அவர்களும் துயரக்கோலத்தோடு கண்ணீர் வடித்தார்கள் என்பதைக் கேட்கும்போது, அந்தக் கொடுமைகளுக்கு அவர்கள் காரண மல்லர்; நெடுங்காலமாக நிலவிவரும் வெறியே காரணம் என்பது தெரிகின்றது.

அம்மா! என்னென்னவோ நினைவுக்கு வருகின்றன. தென்னாப்பிரிக்காவில் அவர் தொடங்கிய இயக்கத்திற்குத் தமிழ் மக்கள் துணையாக நின்று அவருடைய அன்பையும் பெற்றார்கள். 'திக்கற்றவருக்குத் தெய்வமே துணை' என்னும் பழமொழியாலும், திருக்குறள் கருத்துக்களாலும் தமிழ் மொழி அவருடைய போற்றுதலைப் பெற்றது. தமிழ்ச் சிறுவர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் இல்லாதபோது அவரே தமிழாசிரியராக இருந்து தொண்டு செய்ததும் நினைவுக்கு வருகின்றது. இன்னொன்றை நினைக்கும்போது நெஞ்சம் நெக்குருகுகின்றது. தமிழர்கள் பண்பாடும், தமிழ்மொழியின் கருத்து வளமும் அவர் மனத்தைக் கவர்ந்தது போலவே, தமிழ்நாட்டு வறுமையும் அவருடைய கோலத்தையே மாற்றிவிட்டதே. சேலத்திற்குத் தெற்கே தமிழ் மக்கள்—ஆண்களும் பெண்களும் அரை நிர்வாண மாய் முழங்கால் வரையில் அரையாடை உடுத்து உழைப் பதைக் கண்ணால் கண்ட அன்றுதானே, அடிகளின்

தலைப்பாகையும் அகன்றது! நீண்ட அங்கியும் அகன்றது! பத்துமுழ வேட்டியும் அகன்றது? இவர்களுக்கு மானத்தை மறைக்கவும் கந்தல் போதவில்லை என்று கசிந்துருகித் தமிழ் நாட்டுக் குடியானவன் கோலத்தை அல்லவா அன்றுமுதல் மேற்கொண்டார்! அந்தக் கோலந்தானே உலகம் புகழ்ந்து வணங்கிய வறுமைத் திருக்கோலம்!

அம்மா! ஏதோ எழுதினேன், ஆறுதல் பெற.

அன்புள்ள மகன்,

எழில்

### அருஞ்சொற்பொருள்

தலையெடுத்து - முன்னேறி. திங்கள் - மாதம். கம்பம் - அசைவு. பூகம்பம் - நில அசைவு, நில நடுக்கம். நெறி - வழி.

### கேள்விகள்

1. 'அன்னை' தமிழர்களைப் பற்றிக் கூறியவை யாவை?
2. டில்லியில் நடந்த நிகழ்ச்சி யாது?
3. கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் மாறுதலை உண்டாக்கியவர் யார்?
4. 'இது முழு உண்மை அன்று'—எது?
5. காந்தியார் எந்தத் திருக்குறளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினர்?
6. தமிழ்மொழி காந்தியாரின் போற்றுதலை எவ்வாறு பெற்றது?

### பயிற்சி

1. காந்தியாரின் பெருமை குறித்துப் பதினைந்து வரிகள் எழுதுக.
2. "உள்ளத்தால்......உளன்" என்னும் குறளின் பொருளைக் காந்தியடிகள் வரலாற்றுடன் இணைத்துக் கூறுக.
3. 'எழில்' குறிப்பிடும் புத்தர் முதலிய பெரியவர்கள் செய்த உலகம் பாராட்டும் திருப்பணிகளைப் பற்றிப் பதினைந்து வரிகள் எழுதுக.

# 3. இந்தியாவின் பொருள்நிலை

## புதிய விவசாய முறைகள்

(டாக்டர் திரு. ஜே. எஸ். பொன்னையா அவர்கள், எம்.ஏ.,டி.லிட்.)

(1) விவசாயிகளின் புலங்களின் அளவு சிறியதாயிருப்பதினுலும், அவை சிதறித் துண்டு துணுக்குகளாகக் கிடப்பதனுலும், (2) அன்னவர் ஆடுமாடுகளின் தொகை தான் அதிகமேயொழிய அவை பெரிதும் பயனற்ற நிலைமையிலிருப்பதனுலும், (3) அளவுக்கு மிஞ்சிய கடனிழவுக்குட் கிடந்து ஏழைக் குடிகள் உழல்வதனுலும் நமது தேசத்தின் விவசாயம் பின்னடைந்த நிலையிலேயே இருக்கின்றது. அந்நிலையில் புதிய முறைகளைக் கையாளச் சொல்வது முடவனைக் கொம்புத்தேனை எடுக்கச் சொல்வதை ஒக்கும் என்பர் ஒரு சாரார். வேருெரு சாரார், பண்டைக்காலந் தொடங்கி அநுபவ முதிர்ச்சியாற் பற்பல விவசாய முறைகளையும் (இக்காலச் சாஸ்திர முறைகளைக் கற்றவர்களைவிடக்) கைதேர்ந்தவண்ணம் நம் குடிமக்கள் நடத்திவருவதால் மேனுட்டார் முறைகளைப் பின்பற்றுதல் அவசியமன்றென்றுங் கூறுவர். புதிய முறைகளினுல் மட்டுமே நம் விவசாயம் முன்னேற்றமடையாது; ஆயினும் அவற்றில் பல அவசியம் கையாள வேண்டுவனவாகவும் பயன் தரத்தக்கனவாகவும் இருக்கின்றன. அதற்குக் காரணங்கள் பலவுள.

ஆங்கில அரசாட்சி நிலையாக நிறுவப்படுமுன் நமது தேசத்தின் ஜனத்தொகை குறைவாகவும், விவசாயிகள் சிலராகவும் போதிய அளவில் நிலம் படைத்தவராகவும், கடன் பாரமில்லாதவர்களாகவும், சுயேச்சையான வாழ்வும் மன அமைதியும் பெற்றிருந்தவராகவும் இருந்தனர். ஒவ்வொரு கிராமமும் (போக்குவரவுச் சாதனங்கள் இக்காலத்தைப் போலில்லாமையால்) தனக்குரிய எல்லாப் பொருள்களையும் தானே விளைவித்துக் கொண்டு வந்தது. விவசாயப் பொருள்களில் பெருமிதமான வியாபாரம் இருந்ததில்லை. ஆனுல் சென்ற நூறு வருடங்களுக்குட் பொருளாதார நிலைமையில் ஏற்பட்ட மாறுதல்களினுல் ஜனப்பெருக்கம்

சென்னை-600 005

மேலிட்டது; விவசாயப் பொருள்கள் மேனுடுகளுக்குச் சென்றன; மேனுட்டாரின் செய்பொருள்கள் பல நம் நாட்டில் இறக்குமதியாக்கப்பட்டன.

இத்தகைய காரணங்களினுல் (1) ஜனங்களின் வாழ்வுக்குரிய உணவுப் பொருள்கள் மிகுதியான அளவில் விளைவிக்க வேண்டியிருக்கின்றன. ஆனுல் பண்படத்தக்க நிலத்தில் நூற்றுக்கு 35 பாகத்தில் 33 பாகம் வரையுஞ் சாகுபடியாகி வருவதால் இனி நிலத்தின் அளவை மிகுதிப்படுத்த இயலாது; அதிலிருந்து வரும் விளைவையே மிகுதிப்படுத்த வேண்டும். ஜனப்பெருக்கம் மிகுதியாக ஆக மிகுந்த அளவு நிலத்தில் வேளாண்மை செய்வதை, "அகன்ற வேளாண்மை" (Extensive cultivation) எனவும், அதேயளவு நிலத்தில் மிகுதியான விளைவை உண்டுபண்ணுவதை ஆழ்ந்த அல்லது "மிகுதி விளைவு வேளாண்மை" (Intensive cultivation) எனவுங் கூறுவர். இதில் குறிப்பிடத்தக்கவை பல உண்டு; அவை ஒவ்வொன்றும் கீழே விரித்துரைக்கப்படும். (2) இப்பொழுது நாம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யும் விவசாயப் பொருள்களிற் பெரும்பாலானவை—பருத்தி, சணல், எண்ணெய் வித்துக்கள்—செய்பொருள்களாக ஆக்கப்படுகின்றன. ஆதலின் அவை உயர்ந்த ரகமுள்ளனவாக இருத்தல்வேண்டும். ஏனெனில் அப்படிப்பட்ட பொருள்களையே அவர்கள் வாங்குகின்றனர்; உயர்ந்த விலையுங் கொடுக்கின்றனர். உதாரணமாக, இந்தியப் பருத்தியின் நிறமும் இழையும் (Colour and staple) குறைவாக இருப்பது பற்றி இங்கிலாந்தில் அது விரும்பப்படுவதில்லை. எண்ணெய் வித்துக்களிலும் கோதுமையிலும் பிறவற்றிலும் இவ்வாறு கவனிக்கப்படுவதனுல் பிறநாடுகளின் போட்டியை முறித்து நம் பொருள்களை நாம் விற்க வேண்டுமாயின் அவற்றின் வகையை (Quality) உயர்த்த வேண்டும். இதற்குச் சாத்திர பூர்வமான முறைகள், புதிய வித்துக்கள் முதலியவற்றைப் பயன்படுத்தல் தேவையாகின்றது. (3) கடைசியாக இக்காலத்தின் விவசாயத்தில் புதிய புதிய இயந்திரங்கள் பயன் படுகின்றன. தண்ணீர் இறைத்தல், உழுதல், போரடித்தல் முதலான வேலைகளுக்கும், கரும்புச் சர்க்கரை செய்தல்,

மா அரைத்தல் முதலான தொழில்களுக்கும் இயந்திரங்கள் மிகவும் உபயோகமானவை. அவை மிகுந்த இலாபத்தையுந் தருகின்றன. ஆதலின், இயந்திரங்களைப் பயன்படுத்தல் என்பது புதிய முறை விவசாயத்தில் ஒன்று.

நம் நாட்டு உழவர்கள் மேற்காட்டிய மூன்று செய்திகளிலும் கையாளத்தக்கனவற்றை எல்லாம் கையாள்வது இன்றியமையாதது. ஆழ்ந்த வேளாண்மையைப் பற்றி நம் முன்னோர் பல பழமொழிகளை அமைத்திருக்கின்றனர். "அகல உழுவதினும் ஆழ உழுவது நன்று" எனவும், "ஏரினும் நன்றாம் எருவிடுதல்" எனவும் ஆன்றோர் கூறியுள்ளனர். நன்றாகப் பொறுக்கியெடுத்துப் பரீட்சிக்கப்பட்ட விதைகளையே பயன்படுத்தல் வேண்டும். பருத்தி, கோதுமை, கரும்பு, நெல் முதலியவற்றிற்கு ஒவ்வொரு மாகாணத்திலும் விவசாய இலாகாக்கள் சிறந்த வித்துக்களை உற்பத்தி செய்து அவற்றை எளிதிற் பரப்ப நன்முயற்சி செய்துவருகின்றன. ஜனங்களின் அறிவின்மையும் மடமையுமே அம்முறைகள் விரைவிற் பரவாதிருப்பதற்குக் காரணம். நீர் பாய்ச்சும் முறைகளிலும், பசுந்தாள் உரமிடுவதிலும், ஒற்றை நாற்றாக நடுவதிலும், பயிர் வகைகளுக்கு ஏற்படும் பூச்சிகளையும் நோய்களையும் அழிப்பதற்குச் சர்க்கார் கண்டுபிடித்துள்ள முறைகளிலும் நம் குடியானவர்கள் பின்பற்ற வேண்டுவன பலவுள. மேலும் நெல் முதலான உணவுப் பயிர்களையே மேலும் மேலும் பயிரிட்டு வருகிற நதிக்கரைகளிலுள்ள வயல்களில் கரும்பு, வாழை, பழவகைகள், கிழங்குவகைகள் முதலான புதிய பயிர் வகைகளைச் செய்தல் நலம். அதற்கு நீர்ப்பாய்ச்சல் வசதிக்காகக் கிணறுகள் அமைத்துக் கொள்ளலும் வேண்டும்.

இனி இயந்திரங்களைப் பயன்படுத்துதலைப் பற்றிச் சிறிது கூறுவோம்: இயந்திரங்களைப் பயன்படுத்தலே இலாபமும் உசிதமும் என்று ஒரு சிலர் கூறுவர். ஒரு சிலர் அவை இந்நாட்டிற்குத் தேவையில்லை என்பர். இருக்கிற மனிதர்களுக்கு வேலை யுண்டுபண்ணிக் கொடுப்பதே கிராம வாழ்க்கையில் மிகவும் தேவையாயிருக்கிறதே தவிர, மனிதர்கள் வேலையை நீக்கி இயந்திரங்களைப் பெருக்குதல் தேசத்தில் வறுமையை

விளைவிக்கும் என்பர் வேறு சிலர். இரண்டிலும் உண்மை அடங்கியிருக்கிறது; விவசாயிகளின் புலங்கள் சிறியன வாகவும் துண்டுதுணுக்குகளாகச் சிதறியுங் கிடப்பதால் பெரிய இயந்திரங்களைப் பயன்படுத்தல் தேவையற்றதாக இருக்கும். ஆயினும் தண்ணீர் இறைத்தல், உழுதல், போரடித்தல் முதலிய பல வேலைகளுக்கும், கரும்புச் சர்க்கரை செய்தல் முதலிய குடிசைத் தொழில்களுக்கும், கூட்டுறவு முறையில் இயந்திரங்களைப் பெரிதும் பயன்படச் செய்யலாம். மேலும் விவசாயச் செலவுகளும் சுருங்கும். பெருங் காடுகளாக அல்லது கரடுமுரடாகவுள்ள நிலங்களைப் பண் படுத்தவும், பெரிய மிராசுதார்களின் நிலங்களைச் சாகுபடி செய்யவும் இயந்திரங்கள் பயன்படும். எனவே, இயந்திரங் களைப் பயன்படுத்தல் தேவை என்பதையும் சாத்தியமானது என்பதையும் நாம் அறிகின்றோம்.

ஆனால் நம் நாட்டு உழவர்கள் புதிய முறைகளைக் கையாளுவதற்கும் இயந்திரங்களைப் பயன்படுத்தற்கும் பல இடர்ப்பாடுகள் உள்ளன. கடன்பட்டுள்ள சிறு குடியான வர்கள் பெருந்தொகை போட்டு எங்ஙனம் இயந்திரங்களை வாங்க முடியும்? அவைகளைப் பயன்படுத்தற்குப் போதிய அறிவு கிடையாது; பழுது நேரிட்டால் எளிதிற் செப்ப னிடவும் அவர்கள் அறியார். இங்ஙனமாக உள்ள இடர்ப் பாடுகள் பல. எல்லாவற்றிற்கும் மேலாக அன்னவரது பிற்போக்கான எண்ணமும் துணிபின்மையுமே பெரிய இடர்ப்பாடுகள். இரும்புக் கலப்பையை அவர்கள் மாடு இழுக்காதென்பர்; அம்மாடுகளையே இழுக்கச் செய்து காட்டினாலும் நம்பார்கள்; நல்ல விதையை வாங்கி உபயோகிக்கச் சொன்னால் விலை அதிகமென்பர்; அதிகப் பலனை அளிக்குமாதலால் அதுவே மட்டமான விதையைக் காட்டிலும் விலை குறைந்தது என்று எடுத்துக் காட்டினாலும் அஃது அவர்கள் மனத்திற் பதியாது. பயிர்த் தொழில் இலாக்காவின் புதிய முறைகளைக் கையாளச் சொன்னால் அவை ஏழைக் குடிகளுக்கு ஆகா என்பர்; அரை ஏக்கரில் கோடி ரூபாய் லாபம் வந்துவிடுமோ வென்று விகடம் பேசு வார்கள். அம்முறைகளைப் பின்பற்றினாலும் மழைக் குறை

னல் அல்லது பிற காரணங்களினால் விளைவு குன்றி விட்டால், நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கானாற் போல அம் முறைகளின் மேல் குறை கூறிப் பிறரையும் அவற்றைப் பின்பற்றவிடார்கள். இவ்வாறு பல வழிகளிலும் பிற்போக்கான எண்ணமுள்ள விவசாயிகளின் மனோ நிலையை மாற்றினாலொழியப் பெரும்பயன் விளையாதென்பது திண்ணம். நாம் இங்கு எடுத்துக்காட்டிய பல புதிய முறை களைக் கையாண்டால், வியவசாயம் சிறிது சிறிதாக வளர்ந் தோங்க இடமுண்டு.

### அருஞ்சொற்பொருள்

பாரம் - சுமை. நிறுவப்படும் - ஏற்படுத்தப்படும். ஏற்றுமதி × இறக்குமதி. சாகுபடியாதல் - பயிராதல். முறித்து - பிற்படச் செய்து. எளிது - சுலபம்.

### கேள்விகள்

1. வியவசாயம் பின்னடைந்த நிலையிலிருப்பதற்குரிய காரணங்கள் யாவை?

2. 'அகன்ற வேளாண்மை' எனப்படுவது யாது?

3. வியவசாயத்தில் அமைந்த புதிய முறை யாது?

4. குடியானவர்கள் பின்பற்ற வேண்டும் புதிய முறைகள் யாவை?

5. இயந்திரங்களைப் பயன்படுத்தும் முறைபற்றி ஆசிரியர் கூறுவன யாவை?

6. எம்முறைகளைக் கையாண்டால் வியவசாயம் வளர்ந்தோங்க இடமுண்டு?

### பயிற்சி

1. வியவசாயத்தின் மேன்மை குறித்து ஒரு கட்டுரை வரைக.

2. உழவுத் தொழிலைப் பற்றி வழங்கப்படும் பழமொழிகளைத் தொகுத்து வரைக.

3. நம் உழவர் பயிர்த்தொழிலில் மேற்கொள்ளவேண்டும் புதிய முறைகளும் அவற்றின் பயன்களும் பற்றி விளக்கி ஒரு கட்டுரை எழுதுக.

# 4. டேவிட் லிவிங்ஸ்டன்[1]—I

(சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்)

நாடுகண்டறிவதில் வணிகர்களே யன்றி, [2]கிறித்தவ சமய இயக்கத்தார்களும் மேனாட்டில் முனைந்தார்கள். டேவிட் லிவிங்ஸ்டன் கிறித்தவ சமய இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர்.

டேவிட் [3]ஸ்காட்லாந்தில் பிறந்தார். பத்தாண்டு நிரம்பு முன்னரேயே வயது வந்தவர்கள் ஏற்க வேண்டிய குடும்பப் பொறுப்பு அவரை வருத்தலாயிற்று. அவரை யொத்த சிறுர்கள் அங்கும் இங்கும் ஆடிக்கொண்டிருந்த பிள்ளைப் பருவத்தில் டேவிட் தம் குடும்பத்துக்கு ஊதியந் தேட வேண்டியவரானர்; பொழுது புலருமுன் உறக்கந் தெளிந்து, வான் வெளுக்கு முன்னேயே உடுத்திக்கொண்டு தாம் வேலை செய்த பஞ்சாலைக்குப் போய்விடுவார். அப்பஞ்சாலை அவரது பள்ளியு மாயிற்று; அஃது ஒரு சிறந்த பள்ளியே! அவருடைய ஊழியம் காலை ஆறு மணிக்குத் தொடங்கும். பஞ்சாலையில் வேலை செய்துகொண்டே [4]லத்தீன் மொழியின் இலக்கணத்தை மனப்பாடஞ் செய்வார் அவர்.

அவர் இரவு எட்டு மணிக்குத் தமது இலக்கணப் புத்தகத்தை மூடிவைத்து ஓர் இரவுப் பள்ளிக்குப் போய்விடுவார்; அங்கே பத்துமணி வரையில் படிப்பார். அவருக்கு மிக விருப்பமானது [5]தரைநூல். தரைநூலில் கூறப்படும் ஒவ்வொன்றும் அவருக்கு ஒரு விந்தையாகவே இருந்தது. தரைநூலில் கூறும் இடங்களை எல்லாம் போய்ப் பார்ப்பதாகவும், உலகின் அழகு அனைத்தையும் கண்ணுரக் காண்பதாகவும் அவர் தம்முடைய மன உலகில் மகிழ்ந்தார். அவ்வாறு தரைநூல் கற்கையில் உலகப் படத்தில், சில இடங்களில் "[6]கண்டறியப் படாதது" என ஆங்காங்குக் குறிப்பிட்டிருந்ததை அவர் கண்டார். அவ்வாறு எழுதியிருந்தது அவருக்கு மிகுந்த ஆத்திரத்தை விளைவித்தது.

---

[1] David Livingstone. [2] Missionaries, [3] Scotland [4] Latin. [5] Geography. [6] Unexplored.

அவ்வாறு குறிப்பிட்டிருந்த இடங்களுள் [1]**ஆப்பிரிக்காவும்** ஒன்று. அதுபற்றி டேவிட் மிகவும் மனம் துடித்தார்.

"ஆப்பிரிக்கா ஏன் அறியப்படாதிருக்கவேண்டும்? அதை இருள் சூழ்ந்து இருப்பானேன்? அங்கு எத்தகைய மக்கள் வாழ்கின்றார்கள்? என்னைப்போல் உடல் வளம்பெற்ற இளைஞர் வேலை செய்துகொண்டே லத்தீன் படிக்கக் கூடிய தொழிற்சாலைகள் அங்கு உளவோ!'' என்றெல்லாம் டேவிட் எண்ணமிடலானார்.

இந்த எண்ணங்களால் அவருடைய மனத்தில் மகிழ்ச்சி தோன்றியது. ஏன்? தாம் ஆப்பிரிக்காவுக்குப் போவதென முடிவு செய்தார்.

ஆப்பிரிக்கா பெரும்பாலும் ஒருவராலும் அறியப்படாத நாடாகவே இருந்தது. வாஸ்கோட காமா முதலியவர்களுடைய முயற்சியால் ஆப்பிரிக்காவின் கடற்கரையோரங்களில் மக்கள் குடியேறினார்கள். ஆயினும், அக் குடியேற்ற நாடுகள் எல்லாம் பெருங் கடலில் சிறு திவலைகள் போன்றே இருந்தன. மனஉறுதி படைத்த சிலர் ஆப்பிரிக்காவுக்குள் துணிந்து போனதும் உண்டு. அவர்களுள் [2]**மங்கோ பார்க்கும்** ஒருவர். ஆனால் அவர் உயிருடன் திரும்ப வில்லை. ஆப்பிரிக்கா வெள்ளையரின் கல்லறையாகவே தோன்றியது.

டேவிட் லிவிங்ஸ்டன் 1841-ஆம் ஆண்டு ஆப்பிரிக்காவின் தென் முனையில் உள்ள கேப் டவுனில் இறங்கிய பொழுது அவருக்கு அதுவரை ஆப்பிரிக்காவைக் கண்டறியச் சென்றவர்கள் பட்டபாடுகள் யாவும் தெரியும். ஆயினும் அவருக்கு அதுவரையில் தெரியாத புதுமை யொன்றை அவர் அங்குக் கண்டார். அஃது அவருடைய மனத்தை முறித்தது! அவருடைய கண்கள் கலங்கின! அதுதான் [3]**அடிமை வாணிகம்.** நாள்தோறும் விலங்கிட்ட அடிமைகள் வரிசை வரிசையாகக் காட்டிலிருந்து கொண்டுவரப்பட்டார்கள். ஆண்கள், பெண்கள், குழந்தைகள்கூட அவ்வாறு அடிமைகளாக விலைப்பட்டார்கள். அவர்களை, விலைப்படுத்தியவன்

---

[1] Africa. [2] Mungo Park. [3] Slave Trade.

அவர்களுடைய தலைவன். அவன் அவர்களை என்னவேண்டுமானாலும் செய்யலாம். கேட்பாரில்லை! நம் நாட்டில் ஆடு மாடுகளை நாம் பயன்படுத்துவது போல அக்காலத்தில் அங்கே அடிமைகளைப் பயன்படுத்தினார்கள். அவ்வாறு அடிமைகளைப் பிடித்து விற்பது சட்டத்துக்கு முரண்பட்டது. ஆதலால், அடிமைகள் நிறைந்த கப்பல்களை அரசினர் தொடர்வதாகத் தெரியவந்தால், அடிமை வணிகர்கள், அக் கப்பல்களை அப்படியே நீருக்குள் மூழ்கடித்து விடுவார்கள். என்னே கொடுமை! பல்வகைக் கொடுமைகளிலிருந்தும் அடிமைகள் தப்பும் வழி ஒன்றுதான் இருந்தது. அதாவது, அவர்கள் நோயடையவேண்டும்; நோயடைந்தால் அவர்கள் பயன்படமாட்டார்கள். ஆதலால் அவர்களுடைய தலைவர்கள் அவர்களைக் கடலில் எறிந்து விடுவார்கள். இவற்றை யெல்லாம் காணவும் கேட்கவும் லிவிங்ஸ்டனுடைய மனம் புழுங்கியது; நடுக்கமுற்றது. அதனால் அவர் அடிமைத் தொழிலை ஒழிக்கத் தம்மால் இயன்றதைச் செய்யத் துணிந்தார்.

லிவிங்ஸ்டன் கேப் டவுனிலிருந்து புறப்பட்டு வடக்கே சென்றார். [1] பெச்சுவானா நாட்டில் [2] குருமான் என்னுமிடத்தில் [3] டாக்டர் மாபெட் என்பவருடைய [4] சமய நிலையத்துக்கு வந்து சேர்ந்தார்; அங்கே மக்கள் நோயடைந்து வருந்துவதையும் அநாகரிகத்தில் அவர்கள் மூழ்கியிருப்பதையும் கண்டார்; ஆயினும் அவர்களிடம் மனத் தூய்மையும் அறிவு வளமும் நன்னடத்தையும் இயல்பாகக் குடிகொண்டிருந்ததை டாக்டர் லிவிங்ஸ்டன் கண்டார். அவர்களுக்குக் கல்வி கற்பித்து அவர்களைச் சீர்திருத்தினால் அவர்கள் மேன்மையடைந்து விடுவார்கள் என்று எண்ணினார்; அங்கே பற்பல இடங்களுக்குச் சென்று சமயபோதனை செய்துகொண்டும், நோயாளிகளுக்கு மருந்து கொடுத்துக் கொண்டும் அந்நாட்டு மொழியைப் பயின்றார்; அங்குள்ள மரம் செடி வகைகளையும் விலங்கினத்தையும் பற்றி ஆராய்ந்து அவைபற்றிய விவரங்களை அறிந்துகொண்டார்;

---

[1] Bechuanaland. [2] Kuruman. [3] Doctor Moffat.
[4] Mission Station.

நாட்டு மக்களுடன் இனிய சொற்கள் பேசி அவர்களுடைய பயிர்த் தொழிலைப் பெருகச் செய்தார்.

அங்கே பிறர்பணி யாற்றிக்கொண்டு இரண்டு ஆண்டுகள் கழித்தார்; 1844-ஆம் ஆண்டில் டாக்டர் பாஸட்டின் மகளான மேரியை மணந்துகொண்டார்.

லிவிங்ஸ்டனுடைய கண்காணிப்பில்[1] ஹாடெண்டோட்கள் என்னும் அவ்வினத்தார் பெருநன்மைகளைப் பெற்றார்கள். அவருடைய தொண்டுகளில் அவர்கள் மனம் மகிழ்ந்தார்கள். அவர்கள் லிவிங்ஸ்டனை "ஐயா", "ஐயா" என்று அழைத்தார்கள். அவர்களுடைய அன்பு எல்லாம் உருண்டு திரண்டு அந்த ஒரு சொல்லாக வெளிப்பட்டது. லிவிங்ஸ்டன் தாம் அவர்களுடைய தோழனேயொழிய எவ்வகையிலும் அவர்களுக்கு மேம்பட்டவரல்லர் என்று எவ்வளவு சொல்லியும் அவர்கள் அவரை ஒரு தலைவராகவே மதித்துப் பணிவும் பரிவும் காட்டினார்கள்.

லிவிங்ஸ்டன் தம்முடைய பணிகளை இன்னும் தொடர்ந்து நடத்த வடக்கு நோக்கிச் செல்ல விரும்பினார். அதை யறிந்த ஹாடெண்டோட்கள் அமைதி யிழந்தார்கள்; அச்சமும் அடைந்தார்கள். அவர்கள் லிவிங்ஸ்டனை அணுகி, "ஐயாவே, எங்களுடனேயே தங்கிவிடுங்கள். வடக்கில் உள்ள பெச்சுவானா மக்கள் மிகக் கொடியவர்கள். அவர்கள் உங்களுக்குத் தீங்கு இழைப்பார்கள்," என்று சொன்னார்கள்.

லிவிங்ஸ்டன் வருத்தத்துடன் தமது தலையை அசைத்துத் தாம் அவர்கள் கருத்துக்கு உடன்படாமையைத் தெரிவித்தார். அதைக் கண்ட அவர்கள், "நீங்கள் இங்கே தங்க மறுத்தால் எங்களுட் சிலர், உங்களுக்குத் துணையாக உங்களுடன் வருவோம். நாங்கள் எங்கள் உயிரைக் கொடுத்தும் உங்களைக் காப்பாற்றுவோம்," என்றார்கள்.

அதற்கு லிவிங்ஸ்டன் உடன்பட்டார். நூறு கல் தொலை கடந்து லிவிங்ஸ்டனும் கூட்டத்தாரும் பெச்சுவானா இனத்தார் வாழ்ந்த ஊருக்கு வந்தார்கள். அங்கு அவ்வூர்த் தலைவனுடைய மகள் தீராத நோய் அடைந்திருந்தாள். அவ்வூர் மருந்துகளும் மந்திரங்களும் மூலிகைகளும் நோயைத்

[1] Hottentots

தீர்க்கவில்லே. லிவிங்ஸ்டன் மருந்து கொடுக்கவே, நோய் தீர்ந்தது. தன் மகள் உடல் நலமடைந்ததைக் கண்ட அத் தலேவன் லிவிங்ஸ்டனுக்கு மிகுந்த நன்றி பாராட்டினன்.

### அருஞ்சொற்பொருள்

சிருர்கள் - சிறுவர்கள். புலருமுன் - விடியுமுன். தரைநூல் - பூகோளம். அணுகி - நெருங்கி. இழைப்பார்கள் - செய்வார்கள்.

### கேள்விகள்

1. லிவிங்ஸ்டனின் இளமைப் பருவம் எங்ஙனம் கழிந்தது?

2. மாணவராக இருந்த டேவிட் ஆப்பிரிக்காவைப் பற்றி என்ன எண்ணினர்?

3. ஆப்பிரிக்கா வெள்ளேயரின் கல்லறையாகத் தோற்றமளித்தது எவ்வாறு?

4. அடிமை வாணிகம் குறித்து லிவிங்ஸ்டன் யாது எண்ணினர்?

5. பெச்சுவானு நாட்டில் லிவிங்ஸ்டன் செய்த தொண்டுகள் யாவை?

### பயிற்சி

1. லிவிங்ஸ்டனின் இளமைப் பருவத்தை நினேவிற் கொண்டு அவருடைய உயர்வுக்கு ஊக்கமே காரணமாயமைந்தது என்பதை விளக்குக.

2. லிவிங்ஸ்டன் கற்ற 'தரைநூலே' நாடு காணும் வேட்கைக்கு அடிப்படையாய் அமைந்தது என்பதைப் பற்றி ஒரு சிறு கட்டுரை எழுதுக.

3. 'ஆப்பிரிக்காவில் அடிமை வாணிகம்' என்பது பற்றி ஒரு சிறு கட்டுரை எழுதுக.

# 5. டேவிட் லிவிங்ஸ்டன்—II

(சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்)

பெச்சுவானு நாட்டுக்கு வடக்கே [1]கலஹாரி பாலை நிலமும் அதற்கப்பால் [2]ஸுலூ மக்கள் நாடும் இருந்தன. லிவிங்ஸ்டன் அவர்கள் ஊருக்குப் போய்த் தமது பணிகளைச் செய்ய விரும்பினர். ஆனல், பெச்சுவானுத் தலைவன் அவரைப் பார்த்து, "நீங்கள் ஸுலூ ஊருக்குப் போகலாகாது. அவர்கள் மிகக் கெட்டவர்கள்," என்றான். லிவிங்ஸ்டன் ஹாடெண்டோட்களுக்குக் கூறியது போலவே பெச்சுவானுத் தலைவனுக்கும் கூறித் தாம் ஸுலூ நாட்டுக்குக் கட்டாயம் போய்த்தீரவேண்டுமென்று முடிவாகச் சொல்லிவிட்டார்.

ஒரு நாள் லிவிங்ஸ்டனுக்கு ஸுலூத் தலைவரிடமிருந்து அழைப்பு ஒன்று வந்தது. உடனே அவர் ஸுலூ நாட்டுக்குப் போகப் புறப்பட்டார். தெரியாத நாடுகளின் வழியாகப் பாலை நிலத்தைக் கடந்து, பகைவர்கள் இருந்த இடங்களைத் தாண்டி லிவிங்ஸ்டனும் துணைவரும் பயணம் செய்ய வேண்டியிருந்தது. சிற்சில இடங்களில் அவர்களுக்குத் தண்ணீர் கிடைப்பதும் அரிதாயிற்று.

இத்துணை இடையூறுகளிடையே லிவிங்ஸ்டனும் கூட்டத்தாரும் வழி நடந்துகொண்டிருந்த காலத்தில், ஸுலூ மக்களின் தலைவனான [3]ஸெபுச்சுவேன் என்பவன், லிவிங்ஸ்டனுடைய வருகையைக் கேட்டறிந்து, அவரை வரவேற்க நூறு கல் தொலைவுக்குமேல் பயணஞ்செய்து எதிர்கொண்டான். அவன் அதற்கு முன்னரே தன் ஆட்களை அனுப்பி லிவிங்ஸ்டன் தங்குவதற்கு ஓர் இடத்தை ஆயத்தஞ் செய்திருந்தான். லிவிங்ஸ்டன் தென் ஆப்பிரிக்காவின் மாபெரும் வீரனான ஸெபுச்சுவேனைக் கண்டபொழுது, அவனுடைய ஏற்பாடுகளைக் கண்டு திகைத்துப் போனர்.

லிவிங்ஸ்டனுடைய ஆப்பிரிக்க நண்பர்கள் அவரை மிகவும் மேன்மையாக மதித்து நன்கு நேசித்தனர். அவர்

---

[1] Kalahari desert. [2] Zulus. [3] Sebituane.

கள் அவரை வழிபடக்கூட ஆயத்தமாயிருந்தார்கள். அவருடைய பெயரும் புகழும் மின்னொளிபோல ஆப்பிரிக்காவின் மூலை முடுக்குகளில்கூடப் பரவியது. "டாக்டர் லிவிங்ஸ்டன், ஆப்பிரிக்கா" என்று முகவரியிட்டு எழுதினாலே போதும். கடிதம் அவரிடம் சேர்ந்துவிடும்.

இவ்வாறு லிவிங்ஸ்டன் ஆப்பிரிக்காவில், அதற்கு முன் வெள்ளையர் எவருமறியாத இடங்களை எல்லாம் பார்த்து அறிந்துகொண்டே போனார்; பார்த்த இடங்களின் படக் குறிப்புக்களை எழுதிக்கொண்டும், புத்தம் புதிய காட்சிகளையும் இடங்களையும் தேடிக்கொண்டும் இருந்தார்.

ஒரு நாள் லிவிங்ஸ்டனும் அவருடைய துணைவர்களும் ஓர் ஆற்றைக் கண்டார்கள். அதன் பெயர் [1]ஸாம்பெஃஸி என்று ஸுலு மக்களின் தலைவன் சொன்னான். அந்த ஆற்றைக் கண்டதும் அதன் போக்கைக் கண்டறிய ஆவல் கொண்டார். உடனே படகுகளில் அவர்கள் ஆற்றை எதிர்த்துப் போனார்கள். அதன் இருகரைகளிலும் பூங் கொடிகள் தரையை மூடிக்கொண்டிருந்தன. வானை அளாவிய பனைமரங்களும் இதர மரங்களும் நிறைந்திருந்தன. அந்தக் காட்சிகளை எல்லாம் பார்த்துக்கொண்டே ஆற்றின் எதிர்ப்புறமாக அவர்கள் போய்க்கொண்டிருந்தார்கள். அங்கு ஓரிடத்தில் ஐந்து வரிசைகளில் நீராவி வானை நோக்கிச் செல்வது போன்றிருந்தது. ஒரு பேரொலி அவர்கள் காதில் கேட்டது. அந்நாட்டு மக்கள் அதை "[2]ஒலிப்புகை" என அழைத்தார்கள்.

லிவிங்ஸ்டன் மெதுவாக அந்த இடத்துக்குச் சென்றார். அஃது ஒரு நீர்வீழ்ச்சி. அதுதான் ஸாம்பெஃஸி பிறப்பிடம். அங்கே ஆறாயிரம் அடி உயரத்திலிருந்து செங்குத்தான அருவியாக அவ்வாறு விழுவதைப் பார்த்தார்; அதற்கு அக் காலத்து இங்கிலாந்து அரசியாரான விக்டோரியாவின் பெயரை இட்டு, '[3]விக்டோரியா நீர்வீழ்ச்சி' என அழைத்தார்.

இவ்வாறு நெடுநாள் பயணம் செய்தமையால் லிவிங்ஸ்டனுடைய உடல் உரங் குன்றி அடிக்கடி காய்ச்சல் கண்டது.

---

[1] Zambezi. [2] The "smoke that sounds." [3] Victoria falls.

அவருடைய துணைவர்கள் அவரை இங்கிலாந்துக்குச் சென்று ஓய்வெடுத்துக் கொள்ளும்படி வேண்டினார்கள். எனவே, 1856-இல் லிவிங்ஸ்டன் தம்முடைய தாய்நாடு திரும்பினார்.

நலிந்தோர் நலனையும், தாய்நாட்டினரின் சிறப்பையும் இலக்குகளாகக்கொண்டு பேரிடையூறுகளைப் பொருட்படுத்தாது பிறநாட்டிற் பல்லாண்டு பணியாற்றிய லிவிங்ஸ்டனைக் கண்ட இங்கிலாந்து நாட்டினர் மாண்டவர் மீண்டதுபோற் களிப்படைந்தனர். கல்லூரிகளிலிருந்தும் பேரூர்களிலிருந்தும் அவருக்கு அழைப்புகள் வந்து குவிந்தன. அறிஞர்கள் அவரைக் கண்டு அளவளாவ மிகவும் விழைந்தனர். நாட்டிறைவியாம் விக்டோரியா பேரரசியும் அவருடன் அளவளாவினார். [1]இறையவையைச் சார்ந்த குழுவினர் அவருக்கு ஒரு பொற் பதக்கத்தைப் பரிசிலாக வழங்கினார்கள். இலக்கிய மன்றங்களில் அவர் பேசியபொழுது ஆணும் பெண்ணும், வறியரும் செல்வரும், முதியோரும் இளைஞருமாகத் திரண்டு ஆப்பிரிக்கா நாட்டைப் பற்றி அவர் வெளியிட்ட கருத்துக்களை ஊன்றிக் கேட்டார்கள்.

இரண்டாண்டுகள் கழிந்தன. நாட்டில் தமக்கு ஏற்பட்ட பெருமையினால் லிவிங்ஸ்டன் உள நிறைவு பெற்றாரில்லை. "அரசியாற் போற்றப்பட்டு நான் ஒருவன் நல்வாழ்வு வாழ்ந்து என்ன பயன்? ஆப்பிரிக்காவின் பெரும் பரப்பு இன்னும் கண்டறியப்படாததாகவே இருக்கிறது. அரேபியருடைய அடிமை வாணிகம் அற்றுப் போக வில்லை. அறியாமை நிறைந்த ஆப்பிரிக்காக் குடிகளும் அறிவொளி பெற்றாரில்லை. இந்நிலையில் நான் மேற்கொண்டுள்ள பணி செவ்வனே நிறைவேறும் வரையில் நான் வாளாவிருத்தல் பெருங்குற்றம்," என்று அவருள்ளம் அவருக்கு அறிவுறுத்தியவண்ணமே இருந்தது. ஆதலால், அவர் தமது அகத் துடிப்பைத் தம் நண்பர்களுக்குக் கூறி, மீண்டும் ஆப்பிரிக்கா செல்வதற்கான முயற்சியில் ஈடுபட்டார். அரசினரும் 5,000 பொற்காசுகள் நன்கொடை யளித்து லிவிங்ஸ்டனை ஊக்கினார்கள். ஆற்றிற் செல்லக்கூடிய கலமொன்றைச்

[1] Royal Geographical Society.

சமைத்துக்கொண்டு மானுமியொருவரையும் [1] **பயிர் நூல் அறிஞ ரொருவரையும் [2]அமைப்பறிஞ ரொருவரையும், [3] ஒரு சித்திரக்காரரையும்** மற்றும் மூன்று அறிஞர்களை யும் தமக்குத் துணையாக அழைத்துக்கொண்டு லிவிங்ஸ்டன் 1858-இல் புறப்பட்டு ஆப்பிரிக்கா வந்து சேர்ந்தார்.

ஆங்காங்கு லிவிங்ஸ்டன் அராபிய வணிகக் குழுவின ரையும், அவர்களாற் கொடுமைப்படுத்தப்பட்டு நலிந்து நின்ற உள்நாட்டுக் குடிகளையும் கண்டு வருந்த நேர்ந்தது. அன்றியும் லிவிங்ஸ்டன் சென்ற வழியைப் பின்பற்றி அவரறி யாமல் அராபியர் சென்று உள்நாட்டில் இருந்த மக்களைக் கொடுமைப்படுத்தலாயினர். அச்செய்தியறிந்த லிவிங்ஸ்டன் எவருடனும் கலகமிடுவதில்லை எனத் தாம் கொண்டிருந்த கொள்கையைக் கைவிட்டு, அராபியரைக் கண்டவிடத்தில் தாக்கி அடிமைகளை விடுவிக்கும் நெறியைக் கைக்கொண் டார். ஆதலால், அராபியருக்கும் லிவிங்ஸ்டனுக்கும் பகை ஏற்பட்டது.

அவ்வாறு பலகாலம் அலைந்ததனால் உடல் மெலிந்த லிவிங்ஸ்டன் இங்கிலாந்துக்குத் திரும்பினர்; அங்குச் சில காலம் தங்கினர்; உடல் சற்று நலம்பெற்றதும் மீண்டும் தம் பயணத்தைத் தொடங்கினர். அவருடைய நண்பர்கள் அவ ருடைய மூப்பைக் கருதி அவரைச் செல்லாமல் தடுக்க முயன் றது வீணாயிற்று. அரசினரால் லிவிங்ஸ்டனுக்குத் துணைவ ராக அனுப்பப்பட்டவருள் ஒரு சிலரும் அவரைக் கைவிட்டுத் திரும்பினர். லிவிங்ஸ்டனை உள்நாட்டுக் குடிகள் கொலை செய்துவிட்டதாக அவர்கள் புனைவுரை புகன்றனர். ஆங்கில நாட்டினர் அதனை ஏற்கவில்லை. நன்றியறிவு மிக்க ஆப்பி ரிக்க நாட்டினர் தங்கள் நலனுக்காக அல்லும்பகலும் அல்லற் பட்டுழைத்த லிவிங்ஸ்டனைக் கொல்ல நினைப்பதும் செய்யார் என்பதை ஆங்கிலேயர் அறிந்திருந்தனர். அவர் எங்கேனும் ஓர் இடத்தில் உள்நாட்டு மக்களோடு உள மகிழ்வோடு அள வளாவிக்கொண்டிருப்பாரென்றும், மூப்பு மேலிட்ட அவரை எவ்வாறேனும் மீட்டுக் கொண்டுவந்து நல்வாழ்வு வாழவைக்க

---

[1] Botanist. [2] Engineer. [3] Artist.

வேண்டுமென்றும், அரசியலாரும், நண்பரும், உறவினரும் கருதினர். அதன்படி அவர்கள் [1] நியூயார்க் ஹெரால்ட் செய்தித்தாளின் [2]அறிக்கையாளர் [3]ஹென்றி ஸ்டான்லி என்பவரைத் தேர்ந்தெடுத்து லிவிங்ஸ்டனை அழைத்துவரப் பணித்தனர்.

பேரிடையூறுகளைப் பொறுத்துக்கொண்டு பொறுமையோடு காடும் கானுறுங் கடந்துசென்று ஸ்டான்லி இறுதியில் [4]உஜிஜி என்னுமிடத்தில் லிவிங்ஸ்டனைக் கண்டு நாட்டிற்குத் திரும்பி வரும்படி அழைத்தார். நாட்டிற்கு நண்பரோடு மீண்டு நாட்டினரைக் கண்டு களிப்பதை லிவிங்ஸ்டன் விரும்பினு ரெனினும், பல்லாயிர மக்கள் பதைத்திருப்பதைக் கண்ட பிறகும் அவர்கள் துயரை வேரோடு களையாமல் நாடு மீள நினைத்தாரில்லை. "என்று அடிமை வாணிகம் அறவே அழிகின்றதோ அன்றுதான் தாய் நாடு திரும்பமுடியும்" என்று உறுதியாய்க் கூறித் தம் நண்பரைத் திருப்பியனுப்பி விட்டனர். ஸ்டான்லி தாய்நாடு திரும்பியதும் லிவிங்ஸ்டனுக்கு உதவும்படியாக உணவுப் பொருள்களையும் துணைவர்களையும் அனுப்பிவைத்தார். லிவிங்ஸ்டன் அவர்களைச் சேர்த்துக்கொண்டு [5]தங்கனிகா ஏரியைக் கண்டுபிடித்தார். அப்பொழுது வயிற்றுப்போக்கு அவரை வாட்டத் தொடங்கியது. எனினும், அதைப் பொருட்படுத்தாமல் தம் துணைவர்களின் உதவியால் மேற்செல்லத் தொடங்கினர்.

கடைசியில் [6]சித்தம்போ என்னுமிடத்தை அடைந்தார். ஓயாத உழைப்பால் நலிவடைந்திருந்த அவர் 1873-இல் மே முதல் நாள் இறையடி சேர்ந்தார். எழுந்திருக்கமுடியாத நிலையிலிருந்த அவர் தமது இறுதி நாள் வந்துற்றதை யறிந்து முழந்தாளிட்டு இறைவனை வணங்கி, "அடிமைத்தளை அற வேண்டும்; ஆப்பிரிக்க நாட்டினர் ஆக்கமுற வேண்டும்," என்று வேண்டியவாறே உயிர் நீத்தாராம்! என்னே அப் பெரியாரின் தந்நலமற்ற தன்மை!!

லிவிங்ஸ்டனுடைய வேண்டுகோள் வீணுகவில்லை ; அவர்

---

[1] New York Herald. [2] Reporter. [3] Henry Stanley. [4] Ujiji [5] Lake Tanganyika. [6] Chitambo.

எழுதிய நூல்கள் பிற்காலத்தில் ஆப்பிரிக்க நாட்டை ஆராய்ந்த அவர் நண்பர் ஸ்டான்லிக்கு மிகவும் உதவி புரிந்தன. ஆங்கில நாட்டாரும் அடிமை வாணிகத்தை ஒழிக்குமாறு சொல்லி அரேபிய அரசருக்கு ஆள் விடுத்தனர். நாளடைவில் அடிமை வாணிகம் ஒழிந்தது. அடிமை மக்களும் துயர் நீங்கிக் களித்தனர்.

### அருஞ்சொற்பொருள்

நலிந்தோர் - வருந்தியோர். இலக்கு - குறி. இறைவி - தலைவி, அரசி. அவை - சபை. உளநிறைவு - உள்ள நிறைவு. வணிகம் - வியாபாரம். சற்று - ஓரளவு. மூப்பு - வயோதிகம். புனைவுரை - கற்பனை உரை.

### கேள்விகள்

1. 'ஒலிப்புகை' என்று ஸுலு மக்கள் எதனை அழைத்தனர்?
2. லிவிங்ஸ்டன் எதனை 'விக்டோரியா நீர்வீழ்ச்சி' என்று அழைத்தார்?
3. இங்கிலாந்து நாட்டினர் எப்பொழுது மாண்டவர் மீண்டது போலக் களிப்படைந்தனர்?
4. லிவிங்ஸ்டன் இரண்டாம் முறையாக ஆப்பிரிக்கா செல்ல விழைந்ததேன்?
5. லிவிங்ஸ்டனுக்கும் அராபியர்க்கும் பகை ஏன் ஏற்பட்டது?
6. தம்மை அழைத்தேக வந்த ஸ்டான்லிக்கு லிவிங்ஸ்டன் கூறிய மறுமொழி யாது?

### பயிற்சி

1. லிவிங்ஸ்டனின் பிற்கால வாழ்வு பற்றிப் பதினைந்து வரிகள் வரைக.
2. 'பெருமையும் சிறுமையும் தான்தர வருமே' என்ற பழமொழியை மனத்தில் வைத்து, லிவிங்ஸ்டன் வாழ்க்கையுடன் அது தொடர்புகொண்ட வகையை விளக்குக.
3. 'லிவிங்ஸ்டன் ஆப்பிரிக்க மக்களுக்குச் செய்த தொண்டுகள்' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.
4. லிவிங்ஸ்டன் பல்லாண்டுகள் ஆப்பிரிக்காவில் இருந்தமையால் சிறப்பாக ஆங்கிலேயரும் பொதுவாக உலகத்தாரும் அடைந்த நலன்களை விளக்கி எழுதுக.

# 6. மின்னலும் இடியும்*

(திரு. என். கே. வேலன், பி. ஏ.)

'மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை' என்னும் பழமொழி ஒன்று வழங்கி வருகின்றது. மின்னலுக்கும் மழைக்கும் அல்லது மேகத்திற்கும் ஏதேனும் தொடர்பு உண்டா என்பது ஈண்டு ஆராயப்படும். வானத்திற் கரிய மேகங்களின் இடையே பளிச்சுப்பளிச்சென்று மின்னல் தோன்றிக் கண்ணைப் பறிக்கின்றது. கண்ணை மூடித் திறப்பதற்குள் வானமும் நிலமும் கிடுகிடுக்கும் வண்ணம் இடியோசை கேட்கின்றது. சில வேளைகளில் மின்னல் தோன்றிமறைந்தவுடன் மரங்கள் ஒடிந்து சாய்வதையும் கரிந்து போவதையும் காணலாம். இடியினால் ஆடுமாடுகளுக்கும் ஏனைய உயிர்களுக்கும் சேதம் ஏற்படுவதும் உண்டு.

மின்னல், இடி இவற்றின் தன்மைகளை நன்கு ஆராய்ச்சி செய்வதற்கு முன்னர் மக்கள் இவ் வியத்தகு நிகழ்ச்சிகளைப் பற்றிப் பல வேறு கதைகளைக் கட்டியிருந்தனர். மின்னற் கொடி என்னும் தேவ அணங்கினை இடி என்னும் அசுரன் துரத்திச் செல்வதாகச் சிலர் எண்ணி இருந்தனர். மற்றும் சிலர் மேகங்களை இந்திரன், வருணன் முதலிய தேவர்களின் ஊர்திகளென்றும், மின்னல்கள் அவர்கள் வீசி எறியும் வாள்களென்றும் கூறிப் போந்தனர். மேகங்களுக்கு அரசனான இந்திரனுக்குப் பிள்ளையெனக் கூறப்படும் அருச்சுனனுடைய பெயரைச் சொன்னால் இடி நிலத்தில் விழாதெனச் சிலர் நம்பி வந்தனர், இதனாலேதான் இடி இடிக்கும்பொழுது 'அருச்சுனா', 'அருச்சுனா' என்று சொல்வது இன்னும் சில இடங்களில் வழக்கமாக இருக்கின்றது.

மின்னல், இடி இவற்றின் தன்மைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்தவர் பெஞ்சமின் ஃபிராங்க்ளின் (Benjamin Franklin) என்னும் அமெரிக்க நாட்டு அறிஞர். மின்சாரக் கருவியில் உண்டாகும் நீளமான சுடர்கள் எல்லாவகையிலும் மின்னலை ஒத்திருப்பதை அவர் கண்டார். மின்னல் என்பது மிகப்

---

* இது, 'செந்தமிழ்ச் செல்வி' சிலம்பு 18-இல் வெளிவந்தது.

பெரிய மின்சாரச் சுடராக இருக்கலாம் என்பது அவருக்குத் தோன்றிற்று.

மின்சாரச் சுடர் நேராய்ப் பாய்வதில்லை. அது நெளிந்து நெளிந்து ஓடும். மின்னலும் இங்ஙனமே பாய்கின்றது. கூரிய முனையையுடைய பொருள்கள் மின் ஆற்றலைத் தம்மிடம் இழுக்கின்றன. இங்ஙனமே மின்னலும் மலை, மரம், கோபுரம், புகைபோக்கி இவற்றின் உச்சிகளைத் தாக்கு கின்றது. தனது ஆற்றலை எளிதில் கடத்தும் பொருள் களையே மின்சாரம் தேடிச் செல்கின்றது. மின்சாரம் போதிய ஆற்றலுடையதாக இருந்தால் உயிர்களைக் கொன்றுவிடும். மின்னலும் ஆடு மாடு முதலிய உயிர்களைக் கொல்லுந் தன்மையதாக இருக்கின்றது. மின்சாரச் சுடரில் சடசட வென்னும் ஓசையுண்டாகும். மின்னல் தோன்றும்போது உண்டாகும் இடியோசையும் இதைப்போன்றதே. மின்னலும் இடியோசையும் ஒரே இடத்தில் தோன்றினும் மின்னலின் ஒளியை முதலில் காணுகின்றோம். சற்றுப் பின்னரே இடியோசை நமக்குக் கேட்கின்றது. ஒலி அலைகளைவிட வெளிச்சம் விரைந்து செல்லும் தன்மையுடையது. இதனாலேதான் மின்னலின் ஒளி இடியோசைக்கு முன் விரைந்து வந்து நம்மைச் சேர்கின்றது.

மேகங்களில் மின் ஆற்றல் நிறைந்திருக்க வேண்டு மென்றும், இல்லையேல் அவற்றின் இடையில் மின்னல் தோன்றுவதற்கு வழியில்லை என்றும் பெஞ்சமினுக்குத் தோன்றியது. இவர் மேகங்களிலுள்ள மின் ஆற்றலைக் கீழே இறக்குவதற்குப் பல வழிகளைத் தேடினார். முடிவில் ஒரு காற்றாடியைப் பறக்கவிட்டு அதன் வழியாக மின்னலைப் பூமிக்குக் கொண்டுவர இவர் முயன்றார்; பட்டுத் துணியினால் ஒரு காற்றாடி செய்து அதில் கூர்மையான இரும்புக் கம்பி ஒன்றை வைத்துப் பொருத்தினார்; இக் காற்றாடியைச் சணற் கயிற்றால் கட்டி மின்னலும் இடியும் தோன்றும் வேளை பார்த்து உயரத்தில் பறக்கவிட்டார்; சணற் கயிற்றின் மற்றொரு முனையில் இரும்புச் சாவி ஒன்றைக் கோத்தார்; மின் ஆற்றல் பூமியில் ஒழுகிவிடாது இருக்கும்பொருட்டுச் சணற் கயிற்றில் ஒரு பட்டு நாடாவைக் கட்டி அதனைப் பிடித்

துக்கொண்டார். ஏனெனில், பட்டுத் துணியில் மின் ஆற்றல் எளிதிற் பாய்வதில்லை. காற்றுடியின் அருகில் ஒரு மேகம் வந்தது. உடனே அதன் வாலும் கயிறும் விறைத்து நின்றன. பெஞ்சமின் ஒரு கையில் பட்டு நாடாவைப் பிடித்துக்கொண்டு மற்றொரு கையை இரும்புச் சாவியின் அருகில் கொண்டுபோனார். சாவியிலிருந்து மின் ஆற்றல் சுறுக்கென்று அவர் கையில் பாய்ந்தது. ஆகவே மேகத்தில் மின் ஆற்றல் நிறைந்திருப்பது உறுதியாயிற்று. மின்னலும் மின்சாரச் சுடரும் ஒரே தன்மையுடையன என்பது இதனால் விளங்கும்.

மின்னலின் சுடர் மேகத்திலிருந்து நிலத்திற் பாய்ந்தால் அதனையே இடி விழுந்தது எனக் கூறுகின்றோம். இது மரத்தின்மேல் பாய்ந்தால் மரம் பட்டுப்போகும். கட்டடங்கள்மீது விழுந்தால் அவை இடிந்துபோம். பொருள்களை இடிப்பதால் இதனை ‘ இடி ’ என்று சொல்லுகிறோம். உயிர்களின் மேல் விழுந்தால், அவ்வுயிர்கள் இறந்துபடுகின்றன. இங்ஙனம் விழும் இடி தனித்து நிற்கும் பொருள்களையே நாடிச் செல்கிறது. அடர்ந்த காடுகளையும், நெருக்கமாய்க் கட்டப்பட்ட கட்டடங்களையும் இடி தாக்குவதில்லை. மின்னல் உண்டாவதற்கு நேர்மின்சாரம் (Positive Electricity), எதிர் மின்சாரம் (Negative Electricity) என்னும் இருவகை மின்சாரம் வேண்டும். மின்சார அழுத்தம் மிகுதியாக இருந்தால் மட்டுமே மின்சாரம் வெள்ளம் போலப் பாயும். அடர்ந்த காடுகளில் ஆயிரக்கணக்கான மரங்கள் இருப்பதால் மேகத்திலுள்ள மின் ஆற்றல் ஒவ்வொரு மரத்தின் வழியாகவும் சிறிது சிறிதாக ஒழுகி நிலத்திற் போய்ச் சேர்ந்துவிடுகின்றது. வீடுகள் நெருங்கிய பட்டணங்களிலும் இங்ஙனமே நேர்கின்றது. தனித்த கோபுரங்களையும் தனித்த மரங்களையுமே மின்னல் தேடிச்சென்று அழிக்கின்றது.

கட்டடங்களின்மேல் இடி விழாமல் பாதுகாப்பதற்கு ‘ இடி தாங்கிகள் ’ உதவுகின்றன. செம்பினாலாகிய கம்பி அல்லது வட்டையை ‘இடி தாங்கி’ எனக் கூறுவர். இக் கம்பியின் ஒரு முனை கட்டடத்திற்குமேல் கூர்மையாக நீட்டிக்

கொண்டிருக்கும். கம்பியைச் சுவரின் வெளிப்புறமாகக் கீழே இறக்கி அதன் மற்றொரு முனையைத் தரையில் ஆழமாகப் புதைத்துவிடவேண்டும். இக்கம்பி தன் கூரிய முனையின் வழியாய் மின் ஆற்றலைச் சிறிது சிறிதாய் இழுத்து அதன் அழுத்தத்தைக் குறைத்துவிடும். இதனால் அக்கட்டடத்தில் மின்னல் பாய்வதில்லை. அப்படிப் பாய்ந்தாலும் மின் ஆற்றல் கம்பியின் வழியாய் நேரே நிலத்துக்குள் போய்விடுகின்றது. ஆகவே, இடியினால் அக்கட்டடத்திற்காவது சுற்றுப் பக்கங்களிலுள்ள பிற கட்டடங்களுக்காவது யாதொரு தீங்கும் நேருவதில்லை.

இயற்கையில் மின் ஆற்றல் எங்கும் மலிந்து கிடக்கின்றது. பொருள்கள் ஒன்றோடொன்று உராய்வதால் மின் ஆற்றல் உண்டாகிறது. அரக்குக் கோலைக் கம்பளித் துணியில் தேய்த்து அதனைக் கிழிந்த மெல்லிய காகிதத் துண்டுகளின் அருகில் கொண்டுவந்தால் அத்துண்டுகள் குதித்து அரக்குக் கோலிற்போய் ஒட்டிக்கொள்ளுகின்றன. அரக்குக் கோலைத் தேய்ப்பதனால் உண்டாகும் மின் ஆற்றலே காகிதத் துண்டுகளைக் கவர்கின்றது. இங்ஙனமே கண்ணாடிக் கோலைப் பட்டுத்துணியில் தேய்த்தால் கண்ணாடிக் கோலில் மின் ஆற்றல் ஏறுகின்றது. பெரிய அளவில் மின் ஆற்றலை உண்டாக்குவதற்கு இரண்டு முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. பெட்ரோல் எண்ணெயை ஆவியாக மாற்றி அதனை வெடிக்கச் செய்து அதன் உதவியால் மின்சாரப் பொறியைச் சுழலும்படி செய்வார்கள். சில இடங்களில் நீர்வீழ்ச்சியின் உதவியால் உருளைகளைச் சுழற்றி மின்சாரம் எடுக்கப்படுகின்றது.

மின்சாரம் கரந்துறைவதாகவும், எங்கும் நிறைந்ததாகவும் ஆற்றல் மிகுந்ததாகவும் இருக்கின்றது. இதன் தன்மையை முற்றும் அறிந்தவர் எவருமில்லை.

அருஞ்சொற்பொருள்

ஈண்டு – இங்கு. அணங்கு – பெண். ஊர்தி – வாகனம். கரந்து – மறைந்து. சடசட, கடகட, தளதள என்று இவ்வாறு ஒன்றைவிட்டு ஒன்று பிரிக்கமுடியாத நிலையில் வரும் இரட்டைச் சொற்கள் இரட்டைக் கிளவி எனப்படும். மின் – மின்சாரம். ஆற்றல் – சக்தி. பொறி – இயந்திரம்.

## கேள்விகள்

1. மின்னல், இடி இவைபற்றி நாட்டில் வழங்கிய கதைகள் யாவை?

2. பெஞ்சமின் பிராங்க்ளின் கண்ட புதுமை யாது?

3. மின்னலின் ஒளி இடியோசைக்குமுன் எவ்வாறு விரைந்து வருகிறது?

4. மின்னல் எவற்றைத் தேடிச் சென்று அழிக்கும் ஆற்றல் பெற்றது?

5. 'இடிதாங்கிகள்' எவற்றுக்குப் பயன்படுகின்றன?

6. மின்சாரம் எவ்வாறு எடுக்கப்படுகின்றது?

## பயிற்சி

1. பெஞ்சமின் பிராங்க்ளின் கண்ட புதிய.செய்திகள் பற்றி எழுதுக.

2. வாக்கியங்களில் அமைத்து எழுதுக: வழங்கி, கிடுகிடு, அணங்கு, ஆற்றல், நீர்வீழ்ச்சி, சுழலும்படி.

3. பிரித்து எழுதுக: மின்சாரச்சுடர், வழியில்லை, இரும்புக்கம்பி, நிலத்திற்பாய்ந்தால், மற்றொரு, பாய்வதில்லை.

# 7. மலையமான் திருமுடிக்காரி

(திரு. சிவ. குப்புசாமி பிள்ளை)

## காட்சி 2

உறுப்பினர் : மலையமான், கடியநெடுவில்லி, புலவர் மலாடுடையார் அம்பலநாதர், அமைச்சர், தூதுவர்—வீரவேண்மா, காவலன்.

இடம் : திருக்கோவலூர் மலையமான் கோயில்.

காலம் : முற்பகல்.

[இராயசூயம் வேட்ட சோழன் பெருநற்கிள்ளியின் தூதுவன், மலையமான் காரியிடம் படைத்துணை வேண்டல்]

கடியநெடுவில்லி :—பகைவரஞ்சுமாறு தோள்வலி பெற்ற பெரும ! வணக்கம். இன்று நம் தமிழ் நாட்டில் தொன்று தொட்டு வருகின்ற மூவேந்தர்கள் தம்முள் நட்பின்றி ஒருவரை யொருவர் பகைத்தும், ஒருவர் தாழ்விற்கு மற்றவர் மகிழ்ந்து நின்றும், அவை நிமித்தம் அறநெறி யல்லாதனவற்றைக் கைக்கொண்டும் நாட்டைப் பாழாக்கிவருகின்றனர் ; அன்றியும், புலவர் பெருமக்களைக்கூட வேவுகாரர்களென்றும், ஒற்றர்களென்றும் ஐயுற்று அவர்களைத் துன்பத்திற்குள்ளாக்கவும் கருதிவிட்டனர் ; இன்னும் நம்போன்ற குறுநில மன்னர்களின் கொடை, ஆட்சி நலம், மேன்மை இவற்றால் அழுக்காறுகொண்டு, வாய்ப்பு நேர்ந்தவிடத்துப் போர் செய்யவும் தலைப்பட்டிருக்கின்றனர். இவற்றை எல்லாம் நன்கு ஆய்ந்தே, நமது குதிரைப்படை, தேர்ப்படை ஆய இவற்றிற்கு உயர்ந்த பயிற்சிகளைத் தந்தும், யானைப்படை, காலாட்படை இவற்றை முன்னிருந்ததை விட மிகுதியாக்கியும் நமது படை வலியைத் தங்கள் ஆணையை எதிர்நோக்கிப் பெருக்கியுள்ளேன். மேலும், நமக்கு மேற்பா லண்மையிலுள்ளவனும் வீரருட் சிறந்த வள்ளலுமாகிய அதிகமான், நம் நாட்டின் வளத்தை நாளும் பேசுகின்றனனும். அதனையுணர்ந்த நாம் என்றும் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பது எவரானும் வலியுறுத்தப்படுவ

தன்றே? ஆதலால் தாங்கள் எனது செயலை ஏற்றருளு மாறு வேண்டுகின்றேன்.

**மலையமான் :**—படை முதல்வ! நம் நாட்டின் உயர்வு காண வும், நம் குடிகள் பகைப்புறத்துற்ற தீமையால், பசி, பிணி முதலியவற்றால் துவண்டு மாளாது அமைதியும் நல் வாழ்வும் பெறுதற்குரியவகையிலும், நீவிர் முன்னேற் பாடாகப் படையினைப் பெருக்கி, நாட்டின் பாதுகாப்பிற் காகச் செய்துள்ள நுமது தொண்டினைப் பாராட்டு கின்றேம். புதிதாக அமைந்துள்ள படைகட்குத் தக்க முறையில் பயிற்சியளித்துப் போர்க்களத்தில் வாகை சூடுமாறு அவர்களது உள்ளத்தில் திட்பமும், உடல் வலியில் ஒட்பமும் தோன்றச் செய்க.

**புலவர் மலாடுடையார் :**—வீரர் மரபின் விளக்காயமைந்த வேந்தே! நம் நாட்டிற்போல வீரப்பெண்மணிகளைப் பிற நாடுகளிற் காண்பதரிது. நம்மவர் கொண்டுள்ள உறுதியைக் கூறுகின்றேன், கேண்மின்: 'ஆண் பிள்ளைகளைப் பெற்று வலிமையுள்ளவர்களாகக் காப்பது பெற்ற தாயாகிய என்னுடைய கடமையாம்; தன் குலத் துக்குரிய படைக்கலப் பயிற்சியாகிய கல்வி, அதற்குரிய அறிவு, செயல்கள் ஆகிய இவற்றால் அவனை நிறைந்த வனாகச் செய்து தன் பிள்ளையின் உயர்வு மிகுமாறு செய்தல் தந்தையின் கடமையாம்; போர்க்கருவிகளாய வேல், வாள் இவற்றைச் செம்மையாகக் கூர்மை செய்து தந்து அவனை ஊக்குதல் கொல்லனின் உரிமைச் செயல் ஆகும். அரசனே, அவ்விளைஞனின் நற்பண்புகளும் நல்வினைகளும் நாளும் பெருகுமாறு புரத்தல் செய்யின், அக் காளையன்னான் மாற்றரசர் போரிலே ஒளிமிக்க வாட்படை கொண்டு, பகைவர்களைக் கொன்று அவர்களது யானையைப் பிளந்து குவித்து, வெற்றி மாலையுடன் வருவதையே தனது உற்ற கடமை களாகக் கொள்வான்'. இங்ஙனம் மிக்க வலிமை கொளுத்தும் வீரமொழி புகலும் நம் வீரத் தாய்மார்க ளிருக்க, நாம் எற்றிற்கு அஞ்சுவது?

**அம்பலநாதர் :**—தமிழ்மொழி பேணுந் தகைமையோய்!

எங்கள் தாய் போன்ற மன்ன! எனது வணக்கம் உரிய தாகுக! இன்று நமது நாட்டின் குடிமக்கள், தங்கள் பாற் கொண்டுள்ள அன்பு தாங்கள் அறியாததன்று. ஆயிரம் சிறுமீன்களின் நடுவில் அவற்றைப் புரக்கும் தாய்மீன் நின்று காப்பதுபோல, தாங்கள் எங்களை அல்லும் பகலும் ஓம்பி வருதலை யாங்கள் மறக்க வியலுமோ? எத்துணை மன்னர்கள் கூடிலென்? மிக்க எண்களோடு கூடிய நால்வகைப் படைகளுங்கொண்டு மாபோர் தொடுத்து வந்தாலென்? யாங்கள் அனைவரும் எங்கள் படை முதல்வர் வகுத்த நெறியிலே யமர்ந்து, அரச கடமையைக் கழித்தல் என்ற வகையில் நில்லாது, உடல்களாகிய எங்கட்கு உற்ற உயிராகும் தங்களது வென்றியையே ஒருமுகமாக நாடிப் போர் புரியும்போது, அவர்களால் என்ன ஆகும்? பெரும! வலிய எலிகள் மிகப்பல கூடி யொலிப்பினும், ஒரு சிறு கருநாகம் சீறி உயிர்த்தால், அவை சிதறி ஓடிப்போமன்றோ?

**மலையமான்** :—அன்புமிக்க புலவர் பெருமானே! அம்பல நாதரே! தாங்கள் எம்மாட்டுக்கொண்டுள்ள பேரன் பினைப் போற்றுகின்றேம். தங்களைப் போன்ற தக்கார் இனத்தேமாகிய எம்மைச் செற்றார் எவர்தாம் எது தான் செய்ய வியலும்? தங்கள் போன்ற ஆன்றோர்கள் துணைகொண்டு வாழும் எமக்கு, எத்தகைய இடர்ப்பாடும் இவ்வுலகிலில்லை எண்பது திண்ணம். (காவலன் முன் வந்து பணிதல்) ஏடா, காவலா! யாது செய்தி?

**காவலன்** :—மலாடுடைய கோவே, நமது நெடுமணிமாட நீடுயர் வாயிலில் பொன்னி நன்னுடாம் புகழ்ச் சோழ நாட்டின் உறந்தை நகரிலிருந்து 'சென்னியின் தூதர்' என ஒரு வீரர் போந்து, தங்கள் ஆணை நோக்கிக் காத்திருக்கின்றார்.

**மலையமான்** :—நன்று, காவல! விரைவில் தக்க விருது களுடன் அத்தூதரை உள்ளே அழைத்து வருக. (காவலன் வெளிச் செல்லுதல்) பெருமக்களே! எச் செய்திகொண்டு சோழரின் தூதுவர் இவண் வருகின்றார் என அறிகிலேம். யாம் அறிந்த வரையில் அவர்

நம்மிடம் ஏதேனும் ஒரு துணையையே நாடுவர் எனக் கருதுகின்றோம். (தூதுவர் நுழைதல்)

**தூதுவர் வீர வேண்மா :**—முட்போன்ற கூரிய பற்களுற்ற பாம்பு, இடியொலி யென மருண்டு அஞ்சுமாறு போர் முரசஞ் செய்து வீரர் நடுவே வெற்றிச் சமர்புரியும் கொற்றவ! மலாடுடைய கோவே!

செந்தமிழ் நாட்டின் சீர்நிறை செல்வனும்
செம்மணி முடியுடை மூவருள் ஒருவனும்
கன்னிப் பொன்னியாம் கவின்பெறு காவிரி
தன்வளங் கொண்டு தனிப்பெரு நலங்கொள்
சோர்விலார் மிக்க சோழர்தம் நாட்டின்
ஊரெனப் புகழ்பெறும் உறையூ ரதனைத்
தலைமையாக் கொண்டு தன்புகழ் பரப்பிக்
கலைநலன் கொடைத்திறன் காவல் நேர்மை
அறநெறி இன்சொல் ஆன்றோர் தொடர்பு
மறம்பயில் போர்த்தொழின் மாண்புறப் பெற்றே
உற்றநின் நண்பன் கொற்றக் கோமகன்
எயில்மூன் றெரித்த இறையடி தொழுவோன்
ஒருதனி மகன்பால் உறுசிறு பிழைக்கு
மறுவிலா அவன்மேல் மாத்தேர் ஊர்ந்தே
அறநெறி வழாஅது அரசு செலுத்திய
மறைபுகழ் மன்னன் மனுநீதி மரபினன்.

ஆய சோழன் பெருநற்கிள்ளியது திருவடி தொழூஉம் அடியேன், தூதுவன் வீர வேண்மா, இங்குத் தங்களைப் பணிகின்றேன்.

**மலையமான் :**—பொன்னி நன்னாட்டுச் சென்னியின் தூதரே! உமது வருகை எமக்கு நல்வரவாகுக! நும் நாட்டுப் பெருங்கோ மன்னன் சோழன் பெருநற்கிள்ளி நலன்தானா? அவர் எமக்கு விடுத்த செய்தி யாதோ?

**தூதுவர் வீர வேண்மா :**—தெண்ணீர்ப் பெண்ணையின் திருக்கோவலூரின் தேவே! எம்மன்னர் கோமான், சோழன் பெருநற்கிள்ளி நலமே. ஆயினும் அவருடன் அவரது பகைவனாகிய சேரநாட்டு மன்னன் மாந்தரஞ் சேரல் இரும்பொறை இதுபோது தக்க படையுடன் போர் தொடுத்து நிற்கின்றான். தங்களது போர்த் திறனும், தங்கள் படையின் நற்பயிற்சியும் எமது

மன்னர் நன்கு உணர்ந்தவராதலால், தங்கள் படையுடன் அவரது செலவில் அவண் போந்து துணைபுரியுமாறு தங்களை வேண்டிக் கொள்கின்றார். நாள் மிகவும் அண்மைத்தாக இருப்பதால், தவக்கமின்றித் தாங்கள் இன்னே அங்கு வரவேண்டுமெனவும் பலகால் வேண்டுகின்றார். இதுவே எனது தூதுமொழியாகும்.

**மலையமான் :**—நன்று. தூதுவரே! நாம் அதுபற்றி எம் அமைச்சர், படை முதல்வர், பெருமக்கள் இவர்களுடன் கலந்த பின்னர் விளம்புவேம். அதுவரையில் நீவிர் ஈண்டுத் தங்குவீராக.

**தூதுவர் வீர வேண்மா :**—அவ்வாறே, பெரும!

**மலையமான் :**—அமைச்சரே! நமது கோப்பெரு மன்னர், சோழர் பெருநற்கிள்ளியின் தூதுவர் வீரவேண்மாவிற்கு வேண்டும் வசதிகள் யாவும் விரைந்து புரிக. யாமும் இன்று மாலையே கூடி, நம் வேந்தர்க்குத் துணை போதற்குறித்துச் சூழ்ந்து ஆவன புரிவோம்.

**காவலன் :**—மலையர்கோவன்—மாபெருங்காரி வாழ்க!

**யாவரும் :**—வாழ்க! வாழ்கவே!!

### அருஞ்சொற்பொருள்

ஆணை - கட்டளை. மாளாது - இறவாது. வாகை - வெற்றி. ஒட்பம் - அறிவு. விளம்புவோம் - கூறுவோம். குறுநில மன்னர் - சிற்றரசர். அண்மை - சமீபம். வள்ளல் - கொடையாளி. திட்பம் - உறுதி. சென்னி - சோழன். கிள்ளி - சோழன். செற்றார் - பகைத்தவர். ஆன்றோர் - கல்வி, கேள்வி, ஒழுக்கங்களிற் சிறந்தவர். உறந்தை - உறையூர்.

### கேள்விகள்

1. படையினைப் பெருக்கியமைக்கக் கடியநெடுவில்லி கூறும் காரணங்கள் யாவை?

2. புலவர் மலாடுடையார் நம் நாட்டுப் பெண்மணிகளைப்பற்றி யாது கூறினார்?

3. அம்பலநாதர் மலையமானை நோக்கிக் கூறியன யாவை?

### பயிற்சி

1. புலவர் மகளிர் சிலர் சிறந்த அறிஞர்களாய் விளங்கினர் என்பதை உங்கள் பாடப்பகுதிகொண்டு விளக்குக.

2. நீங்கள் அறிந்த வேறு ஒரு வள்ளலைப்பற்றிப் பதினைந்து வரிகள் வரைக.

3. இப்பாடச் செய்தியைச் சுருக்கி 25 வரிக்குள் ஒரு கட்டுரையாக எழுதுக.

## 8. வியாபாரம்

(திரு. கே. சந்தானம், எம்.ஏ., பி. எல்.)

பிறரை ஏமாற்றி இலாபம் சம்பாதிப்பதே வியாபாரம் என்று சிலர் எண்ணுகிருர்கள். இது முற்றிலும் தவறு. சாமான்களை உற்பத்தி செய்துவிட்டால் மட்டும் போதாது. அவைகளைத் தேவையுள்ளவர்களுக்குக் கொண்டுபோய்க் கொடுப்பதும் உற்பத்தி செய்வதைப் போலவே மிகவும் அவசியமான தொழிலாகும். செல்வ வளர்ச்சிக்கு நன்கு நடத்தப்படும் வியாபாரம் இன்றியமையாதது.

வியாபாரத்தை மூன்று கிளைகளாக வகுக்கலாம். சாமான்களை உபயோகிப்பவர்களுக்கு நேரில் விற்கும் பொழுது அதைச் சில்லறைக் கடை வியாபாரம் என்று சொல்லுவார்கள். அதனுல் சிறிய வியாபாரம் என்று எண்ணவேண்டா. கிராமங்களில் பத்து ரூபாய் சாமான் கள்கொண்ட கடைகளைக் காணலாம். பெரிய நகரங்களில் லக்ஷக்கணக்கான முதல்போட்டுத் தினசரி பல ஆயிரம் ரூபாய்களுக்கு வியாபாரம் செய்யும் சில்லறைக் கடைகளும் உண்டு.

உற்பத்தி ஸ்தலங்களிடமிருந்து சாமான்களை மொத்த மாக வாங்கிச் சில்லறைக் கடைகளுக்கு விற்பதை மொத்த வியாபாரம் என்று சொல்லலாம். இதற்கு அதிக முதல் வேண்டும். வாங்கும் சாமான்களுக்கு முன்னதாகவே அச்சாரம் கொடுக்க வேண்டியிருக்கும்; சில்லறைக் கடை வியாபாரிகளுக்குக் கடனுக்கு விற்க வேண்டியும் இருக்கும். சாமான்களை வாங்கிக் கிடங்குகளில் ஸ்டாக் (Stock) செய்யவும் வேண்டியிருக்கும். ஆதலால், இயந்திர சாலை களைப்போல் மொத்த வியாபாரத்தையும் கம்பெனிகள் அமைத்து நடத்துவது வழக்கமாகி வருகிறது.

மூன்ருவது, வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதும், அங்கிருந்து இறக்குமதி செய்து மொத்த வியாபாரிகளுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் விற்பதும் ஆகும். இதை வெளி நாட்டு வியாபாரம் என்று கூறலாம். இதற்குப் பெரும்

முதல் வேண்டும். சாமான் வாங்குவதற்கும், விற்றுக் கொள்முதல் ஆவதற்கும் இடையில் பல மாதங்களாகலாம். சாமான் சப்ளே (Supply) வேண்டிய காலத்திற்குப் பல மாதங்களுக்கு முந்தியே ஒப்பந்தம் செய்தாக வேண்டும். இடையில் விலை மாறுவதால் அதிக இலாப நஷ்டங்கள் உண்டாகலாம். நாணய விகிதங்களின் மாறுபாடுகளாலும் இலாப நஷ்டங்கள் சம்பவிக்கக் கூடும். இவற்றை யெல்லாம் சமாளிப்பதற்குச் சக்தி வேண்டும். பெரிய முதலாளிகளால்தான் இது சாத்தியமாகும். அவர்களுக்குக்கூட வெளிநாடுகளிலிருந்து பணம் வசூலிப்பதற்கும், மற்ற நாட்டு முதலாளிகளின் போட்டிகளைத் தடுப்பதற்கும் அரசாங்கத்தின் உதவி வேண்டும். ஆதலால், வெளிநாட்டு வியாபாரிகள் பெரிய இயந்திரசாலை முதலாளிகளைப்போலவே சர்க்காரின் செல்வாக்கைப் பெற முயலுகின்றனர்.

தேவைக்கேற்பச் சாமான்களைச் சேகரித்துக் கொடுப்பது வியாபாரத்தின் நியாயமான வேலை. ஆனால், சாமான்களை வாங்கி வைத்துக்கொண்டு அவற்றினிடம் ருசி உண்டாக்குவது தற்காலத்திய வியாபார தந்திரமாகிவிட்டது. இதற்குச் சாதனம் விளம்பரம். இக்காலத்தை விளம்பர சகாப்தமென்று சொல்வது சரியாகும். எங்கே போனாலும் ஒரே விளம்பரமாக இருக்கிறது. பத்திரிகைகள் பெரும்பாலும் விளம்பரத்திலிருந்து தம் வருமானத்தின் பெரும் பகுதியைச் சம்பாதிக்கின்றன. விளம்பரத் தந்திரங்களில் நிபுணர்களுக்கு ஆயிரக்கணக்கான சம்பளங்கள் கொடுக்கப்படுகின்றன. இதை ஒரு கலையாகப் பாவித்து இதில் பயிற்சி அளிப்பதற்குத் தனிக் கலாசாலைகளும் பெரிய கலாசாலைகளில் தனி வகுப்புக்களும் அமெரிக்கா முதலிய நாடுகளில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

மற்றொரு முறையும் அதிகமாகக் கையாளப்பட்டு வருகிறது. சாமான்கள் வாங்கக் கையில் பணம் இல்லாதவர்களுக்குப் பத்து, இருபது, முப்பது தவணைகளில் கட்டும்படி ஒப்பந்தம் செய்வித்து விற்றுவிடுகிறார்கள். தவணை கட்டி முடியும்வரையில் சாமான்கள் வியாபாரிகளின் சொத்தாக இருக்கும். நடுவில் தவணை கட்டத் தவறினால்

சாமானை எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். இதனால் ஏழைகளும், நடுத்தர நிலைமையில் இருப்பவர்களும் தங்கள் சக்திக்குமேல் செலவு செய்யும்படி தூண்டப்படுகிறார்கள். பத்து ரூபாய் கட்டிவிட்டு ஒரு சைகிளையோ தையல் மிஷினையோ வாங்கி வரும்பொழுது சந்தோஷமாக இருக்கிறது. அப்படியே மாதம் இருநூறு ரூபாய் சம்பளமுள்ள ஓர் உத்தியோகஸ்தன் ஐந்நூறு ரூபாய் கட்டி ஒரு மோட்டார் வாங்கி வந்து தன் குடும்பத்தோடு உல்லாசமாகப் போக நினைக்கிறான். ஆனால், மாதாமாதம் தவணை கட்டும்பொழுது கஷ்டம் தெரிகிறது. தவணை கட்டாமல் கட்டின தொகைகளையும் இழந்துவிட நேருகிறது.

விளம்பரச் செலவிற்கும், கடன் வசூலாகாமல் போகும் நஷ்டத்திற்கும் சாமான்களின் விலையை உயர்த்தி வசூல் செய்கிறார்கள். இக்காரணத்தால் சாமான்கள் உற்பத்தியாகுமிடத்தில் உள்ள விலைக்கும், உபயோகிப்பவன் கொடுக்கும் கிரயத்திற்கும் பெரிய வித்தியாசம் இருக்கின்றது. மோட்டார் போன்ற சாமான்களின் விலை இரண்டு, மூன்று மடங்காகி விடுகின்றது.

சில முதலாளிகள் சாமான்களை வாங்கிச் சேகரித்து வைத்துக்கொண்டு அவற்றின் விலையை இஷ்டப்படி உயர்த்தி இலாபம் சம்பாதிப்பதுண்டு. உற்பத்தி செய்கிறவர்கள் சிலராகவும், அவர்களே மொத்த வியாபாரம் செய்பவர்களாகவு மிருந்தால் இது சுலபம். மண்ணெண்ணெய் வியாபாரம் இதற்கு நல்ல உதாரணமாகும்.

அதிகமாக வெளிநாட்டு வியாபாரம் ஆகும் சரக்குகளின் பேரில் கடன் பத்திரங்களைப் போலவே பெரிய சூதாட்டம் நடக்கிறது. பம்பாய்ப் பருத்தி வியாபார நிலையத்தில் (Bombay Cotton Exchange) தினம் லக்ஷம் ரூபாய் தோற்பதும், ஜெயிப்பதும் சாதாரண அனுபவம். இவர்கள் பஞ்சு, பருத்தி வாங்குவதில்லை. வாங்குவதாகவும், விற்பதாகவும் ஒப்பந்தம் செய்துகொள்ளுகிறார்கள். விலைகள் மாறும் பொழுது இலாப நஷ்டங்களைக் கணக்குப்போட்டு நஷ்டமடைந்தவன் செலுத்த, இலாபமடைந்தவன் வாங்கிக் கொள்ளுகிறான். முதலாளித்துவம் பெருகி நிற்கும்

எந்த முறையிலும் இவ்விதச் சூதாட்டத்தைத் தடுக்க முடியாது.

வியாபாரம் சரியாக நடப்பதற்குப் பாங்கிகள் மிகவும் தேவை. ஒவ்வொரு சமயமும் சில்லறை வியாபாரி சாமான்களை விற்று மொத்த வியாபாரிக்குச் செலுத்தியும், சில்லறை வியாபாரியிடமிருந்து வசூலித்த மொத்த வியாபாரி உற்பத்தி செய்வோர்களுக்குப் பணம் செலுத்தியுமே வியாபாரம் நடக்கவேண்டுமாயின், அஃது அடிக்கடி நின்றேபோகும். இவர்களுக்கெல்லாம் சாமான்களின் அடகின்பேரிலும், வியாபாரிகளின் சொந்த ஜாமீன்பேரிலும் குறுகிய தவணைக் கடன் கொடுத்துப் பாங்கிகள் உதவுகின்றன.

வியாபாரிகள் அடிக்கடி தகாத இலாபம் வைத்து விற்பதைத் தடுத்துச் சரக்குகளைச் சரசமாகக் கொடுப்பதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல சாதனங்களாகின்றன. சாமான்களை உற்பத்தி செய்வதற்கும், பாங்கிகள் நடத்துவதற்கும் கூடக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தலாம். நமது நாட்டில் பணம் கடன் கொடுக்கும் சங்கங்களே பெரும்பான்மையாக இருக்கின்றன. ஆயினும், வியாபாரத் துறையில்தான் இச்சங்கங்கள் மிகவும் நன்றாகவும், சுலபமாகவும் வேலை செய்ய முடியும் என்பது மற்ற நாடுகளின் அனுபவம். சாதாரணமாக இச்சங்கங்கள் நல்ல சாமான்களை வாங்கி மற்ற கடைகள் விற்கும் விலைக்கே விற்பது வழக்கம்; ஆனால் இதில் வரும் இலாபத்தை அங்கத்தினர்களுக்குச் சாமான் வாங்கின ஈவுப்படி திருப்பிக் கொடுத்துவிடுகின்றன.

அதிக இலாபம் சம்பாதிப்பதற்குச் சாமான்களின் விலையை உயர்த்துவது ஒரு வழி. ஆனால் போட்டியிருக்கும்போது இது சாத்தியப்படாது. இதற்காக நல்ல சரக்குகளையும், மட்டச் சரக்குகளையும் கலந்து சரசமாக விற்பது வழக்கம். நெய், பஞ்சு முதலிய சரக்குகளில் இவ்விதக் கலப்பு சேர்ப்பதே தனித்தொழிலாக ஏற்பட்டுவிட்டது. இதைத் தடுக்கச் சட்டங்கள் செய்யப்படுகின்றன. உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இவற்றால் ஏமாற்றுவோர்களின் சாமர்த்தியம் வளருகின்றதே ஒழியக் கலப்புக் குறைவதாகக் காணப்படவில்லை. சுயநலம் ஒரு

பெரிய சக்தி. அதைத் தடுப்பது சுலபமன்று. கூட்டுறவுச் சங்கங்கள் வளர்ந்து மொத்த வியாபாரம் சில்லறை வியாபாரம் ஆகிய இரண்டையும் எடுத்துக்கொண்டாலொழிய மட்டச் சரக்குகளால் ஏமாற்றும் வழக்கம் அடியோடு தொலையாது. பல தனி வியாபாரிகளுக்கு நடுவில் கூட்டுறவுச் சங்கங்கள்கூட மட்டச் சரக்குகளையும், கலப்புச் சரக்குகளையும் வைத்து வியாபாரம் செய்யவேண்டிய நிலைமை அடிக்கடி ஏற்படுகிறது. விலை சரசத்தை விரும்பி, உண்மையறிந்த ஜனங்கள்கூடத் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்ளத் தயாராக இருக்கின்றனர்.

## செலவும், மிச்சமும்

சாதாரணமாக ஒரு மனிதன் தனவந்தனாக வேண்டுமானால் செலவைக் குறைத்து, பணத்தை மிச்சம் செய்ய வேண்டும். ஒரு தேசத்தை எடுத்துக்கொண்டால் இஃது ஓரளவுதான் உண்மையாகும். மிச்சம் பிடிப்பது எப்பொழுதும் நன்மையாகாது. சிலவேளை உற்பத்திக்கு மேல் செலவு செய்வதுகூட நன்மை பயக்கலாம். அதாவது வருங்கால உற்பத்திச் சக்தியை வளர்க்கக்கூடிய காரியங்களுக்கு வெளிநாடுகளிலிருந்து கடன் வாங்கியும் செலவு செய்வது இலாபகரமாக இருக்கலாம்.

ஒரு நாட்டின் மக்களில் பெரும்பாலோர் அதிக மிச்சம் செய்வதால் அந்நாட்டிற்கு எப்பொழுதும் இலாபம் கிடைக்காது. பல சமயங்களில் நஷ்டமும் உண்டாகும். தாராளமாகச் செலவு செய்வதால் சாமான்களின் உற்பத்தி பெருகும். அதனால் தொழில்கள் வளரும். வேலையில்லாத் திண்டாட்டம் குறையும். இதற்கு மாறாகப் பணக்காரக் கூட்டங்கள் அதிக மிச்சம் செய்வதால் தொழில் குறைந்து போகலாம்.

ஒரு நாட்டிலுள்ள மக்கள் ஒரு சமயத்தில் தங்களிடம் உள்ள உழைப்புச் சக்தியையும், முன் உழைப்பால் செய்யப்பட்ட பொருள்களில் மிச்சமாக இருப்பவைகளையும் மூன்று விதங்களில் செலவிடலாம். உடனே உபயோகிக்கக் கூடிய வழிகளில் பிரயோகித்து உண்டு களிக்கலாம்; அல்லது

முதலாகப் பாவித்து, வருங்காலத்தில் செல்வ விருத்தி செய்யக்கூடிய இயந்திரசாலைகளை ஸ்தாபிக்கவும், நிலத்தின் விவசாயம் வளரக்கூடிய சாதனங்களுக்காகவும் செலவு செய்யலாம்; மூன்றாவதாக நேரில் புதிய வருமானத்தைக் கொடுக்காமற் போனாலும் பொதுநலத்தைப் பெருக்கும் ஜல வசதிகள், சுகாதாரம், நல்ல ரஸ்தாக்கள், புத்தக சாலைகள், கலாசாலைகள் முதலிய சமூகப் பொதுக் காரியங்களில் செல விடலாம்.

இம்மூன்று துறைகளில் ஒவ்வொன்றிலும் எவ்வளவு பகுதி செலவு செய்யவேண்டுமென்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. அது கால தேச வர்த்தமானத்தைப் பொறுத் திருக்கிறது. ஆனால் பொதுவாகச் சில நியமங்களைக் கூறலாம்; மிகவும் ஏழையாக இருக்கும் தேசங்களுக்கு முதல் சேர்த்துத் தொழில் விருத்தி செய்வதே முதல் கடமை. செலவைக் குறைத்துப் பாங்கிகளின் மூலம் மிச்சப்படும் பணத்தைத் தொழில்களுக்கு முதலாகக் கொடுக்கும் பழக் கத்தை அபிவிருத்தி செய்யவேண்டும்.

தொழில் விருத்திக் கடுத்தபடியாக, பொதுநலங்களை அதிகரிக்கச் செய்வது அவசியமாகும். ஏனெனில், அவற்றால் சமூகத்தில் உள்ள எல்லோருக்கும் வித்தியாசமின்றி சௌகரியமும், சுகமும் கிடைக்கும்; ஆரோக்கியம் வளரும்; கல்வி விருத்தியாகும்; நாகரிகம் உயரும். இவ்வாறு பொது நலங்களை விருத்தி செய்வதற்குக் கருவியாயிருப்பது வரி. ஆனால் வரியினால் ஒரு நாட்டு மக்களுக்கு நஷ்டம் உண் டாகிறதென்பது தப்பெண்ணமாகும். வரியை வாங்கி, எதேச்சாதிகாரமுள்ள அரசாங்கங்கள் விரயம் செய்து வந்திருக்கும் காரணத்தால் இந்த அபிப்பிராயம் வேரூன்றி வந்திருக்கிறது. வரிகளைச் சரியாக உபயோகிக்கும் சமூகத் தில் வரி அதிகமாவதால் சமூக நன்மையும் பெருகும்.

தொழில் விருத்தியும், சமூகச் செலவும் போதிய அளவு ஏற்பட்டுள்ள நாடுகளில் ஜனங்கள் அதிகமாக மிச்சம் செய்வதால் தீமையே விளையும். அந்நிலைமையில் தாராள மாகச் செலவு செய்வதே தருமமாகிறது. உலக மகாயுத்தம் ஆரம்பமாவதற்கு முன் இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும்,

பொருளாதார நிபுணர்களும், இராஜதந்திரிகளும் பணத்தை அதிகமாக மிச்சப்படுத்தாமல் செலவழிப்பதன் அவசியத்தைப் பற்றியே தீவிரப் பிரசாரம் செய்தார்கள். இதற்குக் காரணம், பணக்கார வகுப்பார்களே அதிக மிச்சம் செய்யக் கூடுமாதலால் அவர்கள், அனுவசியமாகத் தொழிற்சாலைகளைக் கட்டிவிடுவதும், அல்லது மற்ற நாடுகளுக்கு மூலதனத்தை ஏற்றுமதி செய்து ராஜீயச் சிக்கல்களை உண்டாக்கிவிடுவதுமாகும்.

அதிகமாக மிச்சம் செய்வதால் வேறு தீமைகளும் உண்டாகின்றன. வட்டி குறைந்து சர்க்காரும், கம்பெனிகளும், தனி ஆசாமிகளும் எளிதில் கடன் வாங்கி வீண்செலவு செய்ய வசதியுண்டாகிறது. இதைத் தடுப்பதற்கு ஒரு நல்ல யுக்தியுண்டு. இக்காலங்களில் தொழிலாளிகளின் கூலிகளையும், கீழ்த்தர உத்தியோகஸ்தர்களின் சம்பளங்களையும் உயர்த்திவிட்டால், முதலாளிக் கூட்டங்களின் இலாபம் குறைந்து, தொழிலாளிகளின் சுகமும் பெருகிச் சமூகமும் செழிக்கும். ஆனால் இம்மாதிரி செய்வதற்கு முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் நடுவில் பட்சபாதமில்லாத வல்லமை பெற்ற அரசாங்கம் வேண்டும்.

செலவிற்கும் மிச்சத்திற்கும் சரியான பாகத்தை நிர்ணயிப்பது சிரம சாத்தியமானதாலும், அப்படி நிர்ணயிப்பினும் அமுலுக்குக் கொண்டுவருவது அதைவிடக் கஷ்டமானதாலும் முதலாளித் தத்துவ சமுதாயங்களில் அடிக்கடி பெரிய பொருளாதாரக் குழப்பங்கள் நேரிடுகின்றன. ஒரு சமயம் மிச்சம் அதிகமாகிப் பணம் மலிவாக இருக்கிறது. அதை வாங்கிப் புதிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தி அனுவசியமாகச் சரக்குகளை உற்பத்தி செய்து குவித்துவிடுகிறார்கள். அதனால் சரக்குகளின் விலை குறைந்து இலாபமும் குறைந்து பல தொழிற்சாலைகளில் நஷ்டமுண்டாகிறது. அவை சில காலம் நஷ்டத்தில் நடந்து மூடப்படுகின்றன. கம்பெனி பங்குகளின் விலைகளும், சர்க்கார் கடன் பத்திரங்களின் மதிப்பும் குறைந்துவிடுகின்றன. சரக்கு உற்பத்தியும், வருமானமும் குறுகிவிடுகின்றன. இந்த நிலைமையைப் பொருளாதார மந்தம் என்று சொல்லலாம். இந்த மந்தம் சில காலம் நீடித்திருந்தால், சரக்கு, பணம் இரண்டிற்கும்

கிராக்கி அதிகரிக்க ஆரம்பிக்கின்றது. மந்த காலத்தில் மூடப்படாத தொழிற்சாலைகளின் லாபம் பெருகுகிறது. அப்பொழுது தப்பிய பணக்காரர்களின் பத்திரங்களும், பங்குகளும் விலையுயர்கின்றன. எங்கும் அதிகப் பரபரப்பு உண்டாகிறது. இதைப் பொருளாதார ஏற்றம் என்று சொல்லுவார்கள். இம்மாதிரி ஓயாமல் பொருளாதாரம் பெருகியும், குறுகியும் ஊசலாடிக் கொண்டிருக்கும். தனி முதலாளிகளால் சமூகத்தின் செல்வத்தின் பெரும்பாகம் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும் எந்த நாட்டிலும் இந்த ஊசலாட்டத்தைத் தடுக்க முடியாது. பொது உடைமையின் அவசியத்திற்கு இதை ஒரு முக்கிய காரணமாக அபேதவாதிகள் கூறுகின்றனர். 1930-32-இல் ஏற்பட்ட பெரிய பொருளாதார மந்தம் முதலாளி சமுதாயங்கள் எல்லாவற்றையும் பாதித்து வேலையில்லாத் திண்டாட்டமும் ஏழைகளின் கஷ்டமும் அதிகரிக்கச் செய்தபொழுது ருஷியாவில் மட்டும் மந்தம் ஏற்படவில்லை. இதை அவர்கள் ஓர் உதாரணமாகச் சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்த வாதத்தை ஆட்சேபித்து முதலாளி சமுதாய வாதிகள் இவ்விதம் பொருளாதாரம் பெருகியும், குறுகியும் வருவதே அவ்வப்போது சமூக நிலை தகுந்தவாறு சீரடைவதற்குப் பெரிய சாதனமென்றும், அதனால் ஏற்படும் தீமைகளுக்கு எளிதில் பரிகாரம் செய்துவிடலாமென்றும் சொல்கிறார்கள். எப்படித் தேகநிலை பாதிக்கப்பட்டால் அதை நிர்ணயிக்கத் தர்மாமீட்டர் (Thermometer) உபயோகப்படுகின்றதோ, அவ்விதமே பொருளாதார நிலையை நிர்ணயிப்பதற்கு இந்த ஊசலாட்டம் பயன்படுகிறதென்று கூறுகிறார்கள். இந்த ஊசலாட்டம் இல்லாத பொது உடைமைச் சமுதாயத்தில் முதல் எவ்வளவு வேண்டும், செலவு எவ்வளவு செய்யலாம், தொழிற்சாலைகள் சரியாக நடக்கின்றனவா என்பவைகளை நிர்ணயித்தல் இயற்கை வழிகளின்றி இராஜதந்திரிகளின் மனப்போக்குக்களையே பொறுத்திருக்குமென்றும், அதனால் சமூகத்திற்கு அனர்த்தம் உண்டாகுமென்றும் வாதிக்கிறார்கள்.

உண்மை அனுபவத்தால் தெரியவரும்.

### அருஞ்சொற்பொருள்

கிளை - பிரிவு. அச்சாரம் - முன்பணம். ஸ்டாக் - சேமிப்பு. சாதனம் - உதவி. சகாப்தம் - பெரிய கால அளவு. கிரயம் - விலை. சம்பவிக்க - உண்டாக. விரயம் - வீண். அபேதவாதிகள் - பொதுவுடைமைக்காரர்.

### கேள்விகள்

1. வியாபாரத்தை எவ்வளவு கிளைகளாகப் பிரிக்கலாம்? அவை யாவை?

2. இதை எந்தச் சகாப்தம் என்று கூறலாம்? ஏன்?

3. வியாபாரத்தில் பாங்குகள் எந்த அளவு பங்கு கொள்கின்றன?

4. கூட்டுறவுச் சங்கங்களால் ஏற்படும் நன்மைகள் யாவை?

5. ஒரு நாட்டு மக்கள் தங்கள் உழைப்புச் சக்தியையும் மிச்சமான பொருளையும் எவ்வெவ் வழிகளில் செலவிடலாம்?

6. தொழிலில் விருத்தி அடைந்துள்ள நாடுகளில் மக்கள் அதிகமாக மிச்சம் செய்வதால் ஏற்படும் தீமைகள் யாவை?

7. பொருளாதார மந்தம், பொருளாதார ஏற்றம் என்பவை யாவை?

### பயிற்சி

1. இக்கால வியாபாரம் பழையகால வியாபாரத்திலிருந்து எவ்வாறு மாறுபட்டுள்ளது என்பதை விளக்கி வரைக.

2. சிறு குறிப்பு வரைக: அபேதவாதம், விளம்பரம், முதலாளி, சமுதாயவாதிகள்.

3. இப்பாடத்தில் உள்ள ஒவ்வொரு பத்தியையும் படித்து அதற்கு ஏற்ற தலைப்புத் தருக.

# 9. தஞ்சைப் பெரிய கோவில்

(திருவாட்டி ஆர். எஸ். ருக்குமிணி, எம். ஏ.)

## 1. இராஜராஜனது உளக்கோயில்

பதினோராம் நூற்றாண்டின் தொடக்கத்தில், ஒரு நாள் மாலைப் பொழுதில், தஞ்சை நகருக்குத் தென்மேற்கில், சுமார் ஏழு மைல் தூரத்தில் உள்ள வல்லத்தில் அரண் சூழ்ந்த நந்தவனத்தின் மத்தியில் அமைந்திருந்த சோழ மன்னரின் பழைய மாளிகையின் பூமுகத்தில் சோழ மன்னன் இராஜராஜ சோழன் தன் தமக்கை குந்தவ்வை, மக்கள் இராஜேந்திரன், குந்தவ்வை யாகியவர்களோடு உரையாடிக் கொண்டிருந்தான். அப்பொழுது இராஜராஜனது முகத்தில் கவலைக் குறிகள் தோன்றின. அவன் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். அவனது நிலையை உணர்ந்த தமக்கை குந்தவ்வை இராஜராஜனை நோக்கி, "அருண்மொழி! உன் மனத்தை வருத்துவது யாது? அதனைக் கூறுவாயெனில் அதனை ஒழிக்க ஒரு வழிகண்டு உரைப்பேன்," என்றாள். அதனைக்கேட்ட இராஜராஜன் தமக்கையை நோக்கி, "தங்களிடம் கூறுவதற்குத் தடையொன்றும் இல்லை; எனினும், என் உள்ளத்தை வருத்துவது யாதென எனக்கே புலப்படவில்லை; சில நாட்களாக எனது உள்ளத்தில் நமது பெற்றோரைப்பற்றிய சிந்தனைகள் அடிக்கடி எழுகின்றன; அவர்கள் இருவரும் தில்லை நடராசப் பெருமானுக்குத் தொண்டாற்றி அவனது அடியவர்களாக வாழ்ந்திருந்து, மண்ணுலகை நீத்து விண்ணுலகெய்தினர். பொன்னம்பல வாணனுடைய அடியவராக வாழ்ந்துவந்த நம் முன்னோர் வீற்றிருந்த அரியாசனத்தில் யானும் பதினெட்டு ஆண்டு களாக அமர்ந்திருந்தேன். இப் பதினெட்டு ஆண்டுகளின் பெரும்பகுதியும் போர்க்களத்திலே கழிந்தது. பாண்டியரை யும் சேரரையும் வென்று மும்முடிச் சோழன் என்ற விருதுப் பெயரும் பெற்றேன்; போர்க்களந்தோறும் வாகை மாலைகளே சூடினேன்; சளுக்கியரைப் போரில் புறங்கண்டேன்; எண்திருவும் எனக்குப் பணிவிடை ஆற்றுகின்றனர்;

எனினும், என் உள்ளத்தில் அமைதி கண்டிலேன்,'' என விழிகளில் நீர் ததும்பக் கூறினன். அப்போது குந்தவ்வை இராஜராஜனை நோக்கி, ''அருண்மொழி! நடராசப் பெருமானை உளக்கோயிலில் நிறுத்தி இடைவிடாமல் அவன்பால் அன்பு பாராட்டுவாயாயின், உனது உள்ளம் அமைதி காணும்,'' என்றாள்.

இதனைச் செவியேற்ற இராஜராஜன் சிறிது ஆலோசனை செய்து குந்தவ்வையை நோக்கி, ''தமக்கையே! யான் சிறுவனாக இருந்தபொழுது நம் தந்தையார் எனக்குக் கூறியது ஒன்று நினைவிற்கு வருகின்றது; அதாவது, 'குழந்தாய்! தில்லைக் கூத்தனுக்குத் தொண்டு புரிவதினும் சாலச் சிறந்த இன்பம் விண்ணுலகினும் இல்லை; நீ பெரியவனாகுங்கால், நடராசப் பெருமானுக்குத் தொண்டு புரிதலையே கடமையாகக் கொள்வாயெனில், யான் சிவபதம் அடைந்த பின்னரும் உன்னை மறவேன்; சோழகுலத்தில் உதித்தவர் அனைவரும் சிவன் அடியார் என உலகம் புகழுமாயின் அதனினும் சிறந்த பேறு வேறு உளதோ?' என்றார். அப்பொழுது யானும், 'தந்தையே! ஆடல் வல்லானுடைய அன்பனாகவே நான் வாழ்வேன்', என்றேன். என் வாய் மொழிகேட்ட தந்தை என் சிரமிசைத் தம் கரம் வைத்து வருடி, 'அப்பா! நீ தமிழுலகு போற்றும் வீரனாக விளங்குவை; நடராசப்பெருமான் என்றும் உனக்கு அருள்புரிவார்,' என்று ஆசி கூறினார். யான் தந்தைக்கு அளித்த சொல்லை இன்றளவும் நிறைவேற்றாது இருக்கின்றேனே என்னும் எண்ணமே என் உள்ளத்தை வருத்துகின்றது,'' என்றான்.

''அருண்மொழி! நீ ஏன் வருந்த வேண்டும்? சிதம்பரத்திலே நிலையான திருப்பணிகள் பல செய்திருக்கின்றனையே; தில்லை மூவாயிரவர் உனக்கு 'ராஜராஜன்', 'சிவபாதசேகரன்' என்ற விருதுப் பெயர்களெல்லாம் வழங்கி இருக்கின்றனரே; சிவபெருமானுக்குத் தொண்டு புரிவதில் குறைவு ஒன்றும் செய்திலையே?'' என்று குந்தவ்வை ஆறுதல் கூறினாள். இராஜராஜன், ''தமக்கையே! யான் செய்தன எல்லாம் பயனற்றன; ஆடல்வல்லானுக்கு அன்பனாக இருக்கவில்லையே என்ற துயரம் என்னை இடைவிடாது வருத்து

கின்றது,'' என்று கூறினன். ''அருண்மொழி! தில்லை நடேசனுக்கு நமது தஞ்சைத் தலைநகரிலேயே ஒரு கோயிலை எழுப்பினுல் என்ன? அத் திருப்பணியில் நாம் அனைவரும் ஈடுபடுங்கால் நம் உள்ளம் மகிழுமே,'' என்றுள் குந்தவ்வை.

இராஜராஜனும் அன்றே நடராசப் பெருமானுக்கு மிகப் பெரிய கோயில் ஒன்றை அமைக்கவேண்டுமெனத் தீர்மானித் தான். சில நாட்களுள் தமிழகத்திலுள்ள புகழ்பெற்ற சிற்பிகள் தஞ்சைமாநகரில் கூடிவிட்டனர். கோயில் திருப் பணியை விரைவிலே முடிப்பதற்காக இடைவிடாமல் அரசனின் ஆணைகள் பிறந்துகொண்டிருந்தன; மன்னனது மனம், கோயிலைச் சிறப்பாகக் கட்டவேண்டும் என்பதிலேயே நாட்டமாக இருந்தது.

செங்கழுநீரும் சேதாம்பலும் செந்நெல்லிடையே மலர்கின்ற சோழநாட்டிலே மிகப்பெரிய கோயில் கட்டுவதற்கு ஏற்ற பெருங்கற்கள் அண்மையில் கிடைத்தில. கற்கள் யாவும் நெடுந்தூரத்தினின்றே வரவேண்டும். சிற்பிகள் குறித்த அளவிலே கல் தச்சர்கள் பெரிய பாறைகளைப் பிளந் தெடுத்தனர். பல யானைகள் அவற்றை நெடுந்தொலைவி லிருந்து தஞ்சை நகருக்கு இழுத்து வந்தன. அரசனது உள்ளத்தில் குடிகொண்ட ஆசைப்பெருக்கின் அளவிலே பெரிய கோயில் ஒன்றைக் கட்ட ஆயிரக் கணக்கான வேலை யாட்கள் உழைத்துவரலாயினர். தமிழகம் எங்கும் இராஜ ராஜன் கட்டத் தொடங்கிய கோயிலைப்பற்றியே யாவரும் பேசலாயினர். இராஜராஜன் அகத்தே கொண்ட பெரிய கோயில் தஞ்சையில் உருவாகிவந்தது.

## 2. தஞ்சைக் கோயில் திருப்பணி

தஞ்சையில் சிவகங்கைச் சிறுகோட்டையின் தென் பகுதியில் பிரகதீச்சுவரர் கோயிலுக்கு அஸ்திவாரம் இடத் தொடங்கினர். இருநூற்றுப்பதினுறு அடி உயரமுடைய கோபுரத்தோடு அமையவேண்டிய பெரிய கோயிலுக்கு இடும் அஸ்திவாரம் எவ்வளவு ஆழமும் அகலமும் பெற்றிருக்க வேண்டும் எனச் சிற்பநூல் வல்லார் கணக்கிட்டுக் கடைக்கால் வெட்டுவித்தனர். தேர்ந்த சிற்பிகள் பலர் இந்த வேலையில்

ஈடுபட்டிருந்தனர். இவர்களுக்குத் தலைவனாக விளங்கிய சிற்பி காஞ்சி மாநகரிலிருந்து வந்தவன் எனக் கூறுவர்.

அஸ்திவாரம் இட்டு முடிந்ததும், மூலத்தானங்களுக்கு உரிய அறைகளையும் அவற்றைச் சூழத் திருச்சுற்றுக்கள் முதலியவற்றையும் சிற்பிகள் கட்டத் தொடங்கினர். தென்னாட்டில் பொதுவாகக் கோபுரங்களை மூலத்தானத்திற்கு எதிரே தனியாக அமைக்கின்ற வழக்கமே நெடுங்காலமாக இருந்துவந்தது. இவ்வழக்கத்திற்கு மாறாக, தஞ்சைப்பெரிய கோயிலைக் கட்டிய சிற்பியோ மூலத்தானத்தின் மேலேயே கோபுரத்தை எழுப்பலாயினன்.

இக்கோயிலும் கோபுரமும் யாவும் கருங்கல்லால் ஆனவை. அக்காலத்துச் சிற்பிகள் கல்லைக் கல்லோடு சேர்த்தற்கு ஒருவகை மருந்தை ஆக்கினர். அது "அட்டபந்தன மருந்து" என்னும் பெயரோடு வழங்கியது; கீழ்க்கல்லில் துளையும், மேற்கல்லின் கீழ்ப் பொருத்தும் அமைத்து, இடையில் மருந்திட்டுக் கல்லைக் கல்லோடு சேர்ப்பர்; கற்களின் அளவு திட்டம், ஒவ்வொரு கல்லிலும் செதுக்குதற்குரிய சிற்ப வேலைப் பகுதிகள் முதலியவற்றையெல்லாம் முன்னரே தீர்மானம் செய்துவிடுவர்; பின்னர் மிகச் சிறியவற்றையும் தவறின்றி நிதானமாக ஆய்ந்து செய்யத் துணிவர்.

சிற்பிகளின் தலைவன் வகுத்துக் கொடுத்த அளவிலும் வடிவத்திலும், துணைச்சிற்பிகள் கற்களைச் செதுக்கிச் செப்பனிட்டு மெருகிடுவர். கோயில் எழுப்பக் குறித்திருந்த இடத்தைச் சூழக் காலை முதல் மாலை வரை கல்லுளிகளின் ஓசையும், கற்களைச் சுமந்துசெல்லும் கூலியாட்களின் ஏலப் பாட்டும், மிகவும் பாரமான கற்களை இழுத்துச் செல்லும் யானைகளின் பிளிற்றொலியும், பணியாளர்க்கு மோர் விற்கும் ஆய்ச்சியர் கூவும் பண்டமாற்றொலியும், மற்றும் பலவகை ஒலிகளும் முழங்கிக்கொண்டிருந்தன.

தொண்ணூற்றாறு அடி அளவில் நாற்சதுரமான அடித்தளத்தின்மீது மூலத்தானமும், அதைச் சூழ்ந்த திருச்சுற்றும் முடிவுற்றன. மூலத்தானத்திற்கு எதிரில் நூற்றுத் தொண்ணூற்றிரண்டு அடி நீளமும் தொண்ணூற்றாறு அடி அகலமும் உடைய மண்டபம் அதற்குரிய பல உறுப்புக்

களோடு முடிவுற்றது. மூலத்தானத்திற்காகக் குறித்திருந்த நாற்சதுரமான அடித்தளத்திலும், அதற்கு முன் எழுப்பிய மண்டபத் தளத்திலும் நிறுத்தவேண்டிய தூண்கள், எடுக்க வேண்டிய சுவர்கள் யாவும் தத்தமக்குரிய இடங்களில் அமைந்தவுடன், பணியாளர் கட்டி முடிந்த அளவிற்கு மணலைக் கொட்டி மூடிச் சாரம் அமைத்தனர். கட்டடம் வளர வளரச் சாரமேடும் வளர்ந்தது.

மூலத்தானத்தின் முன்மண்டபத்தைக் கல்லால் மூடிச் சாந்து பூசியதும், அதனையும் மணல் மேடு மூடியது. மூலத்தானத்திற்கு மேல் கோபுரம் ஒன்றே நாடோறும் வளர்ந்து வந்தது; அது பதின்மூன்று மாடிகளையுடைய கோபுரமாய் ஓங்கியது. மேலே செல்லச் செல்லக் கோபுரத்தின் சதுர அளவு குறைந்து கூம்பி எழுந்தது. கோபுரத்தின் பக்கங்களில் புராண வரலாறுகளைச் சித்திரித்துக் காட்டும் பிரதிமைகள் யாவும் நுண்ணிய வேலைப்பாடுகளோடு விளங்கின; அவை கற்களாலேயே ஆனவை; சிற்ப நூலில் தேர்ந்தவர்தம் திறமைகளை விளக்குபவை.

கோபுரத்தின் கடைசி மாடி முடிவுற்றது. அக்கடைசி மாடியின் மேல்தளத்தைப் பிரமரந்திரத்தளம் என்பர். இதனை மூட ஒரே கல் இருபத்தைந்தரை அடிச் சதுரத்தில் கிடைக்க வேண்டும். இந்த அளவில் ஒரே கல்லை எங்கிருந்து கொண்டு வரலாம் என்று அரசனும் சிற்பிகளும் ஆலோசனை செய்ய லாயினர். பிரமரந்திரத்தளக் கல்லைப்பற்றிப் பல கதைகள் உண்டு. ஒரு கிழவி, விமான வேலை நடந்தபொழுது சிற்பிகளுக்கு உணவு நீர் முதலியன கொடுத்து உதவினள். அவள் பெயர் அழகி. சிற்பிகள் அவளுடைய பணிவிடையைப் பாராட்டக் கருதி, அவளது வீட்டிலிருந்த ஒரு கல்லைக் கொண்டுவர ஏற்பாடு செய்து அதனையே பிரமரந்திரக் கல்லாக உபயோகித்தனர் என்பர்.

பிரமரந்திரத்தளக் கல்லைப்பற்றி வழங்கும் மற்றொரு கதையும் உளது: ஒரு நாள் இராஜராஜனின் கனவில் சிவபெருமான் தோன்றி, ''நாம் கிழவி தரும் கல்நிழலிலே மகிழ்ந்திருப்போம்'' எனப் புகன்றனராம். மறுநாள் உதயத்தில் அரசன் தான் கனவில் கண்ட கிழவி யார் என்று அறியப்

பலரிடம் வினவினன். முடிவிலே சிற்பிகள் அழகி என்னும் கிழவியின் பக்தியைப் புகழ்ந்து பேசக் கேட்ட பின்பு, அவளை அழைப்பித்து விசாரித்தபோது, அவள் தன் வீட்டு முற்றத்தில் தச்சர் குறித்த அளவிலே கல் ஒன்று கிடப்பதாகக் கூறினள். அரசன் அதை எடுத்துவர யானைகளையும் ஆட்களையும் அனுப்பினன்.

தஞ்சாவூரில் நாட்டாண்மைக் கழகப் பனகால் கட்டடத்திற்குப் பக்கத்திலே 'அழகி குளம்', 'அழகி தோட்டம்' என்னும் குளமும் தோட்டமும் இன்னும் இருக்கின்றன. இவற்றை இராஜராஜனே தீர்வையின்றி அக்கிழவிக்குப் பதிவு செய்துகொடுத்தனன் எனவும் கர்ணபரம்பரை வரலாறுகள் கூறுகின்றன.

* * *

கதைகள் எவ்வாறு இருப்பினும், ஏதோ ஒரு வகையிற் பிரமரந்திரத்தளக் கல் கிடைத்தது. கோபுரம் வளர வளரச் சாரமேடும் வளர்ந்தது. தஞ்சாவூர் ஜில்லாவில் சாரப்பள்ளம் என்று வழங்கி வருகின்ற ஊர் உள்ளது. இவ்வூர் வரைக்கும் சாரமேடு நீண்டது. அரசனது யானைகள் அக்கல்லை உருளைகளின்மேல் வைத்து உருட்டிச் சாரப் பள்ளம் வரைக்கும் கொண்டுவந்து சேர்த்தன. பின்பு யானைகள் பின்னிருந்து மேட்டின்மேல் உந்த, முன்னே சில யானைகள் இழுக்கப் பிரமரந்திரக்கல் கோபுரத்தின் உச்சியை அடைந்தது. சிற்பிகள் அக்கல்லைச் சரியான நிலையில் பொருத்தித் தளம் இட்டனர். கணிதநூல் வல்லார் அக் கல்லின் நிறை எண்பது 'டன்' என மதிப்பிடுகின்றனர்.

சிற்பிகள் மூலைக்கு இரு நந்திகளாகப் பிரமரந்திரத் தளக் கல்லின் நான்கு மூலைகளிலும் எட்டு நந்திகளை எழுப்பி வைத்தனர். இவை தனித்தனியே ஆறரை அடி நீளமும் ஐந்தரை அடி அகலமும் உடையன. இதே அளவில் செய்த நந்தியொன்று இன்றைக்கும் உமாபரமேச்வரியின் சந்நிதிக்கு எதிரில் உள்ளது.

சிற்பிகள் பிரமரந்திரத்தளக் கல்லின்மீது பாதிப் பந்து வடிவமான கல் கட்டுமானமும், அதன்மீது தூபிக் குடமும் அமைத்தனர்; தூபிக் குடத்தைச் செம்பினால் செய்தனர். இச் செப்புக் குடத்திலுள்ள செம்பு 3083 பலம் நிறை உடையது.

குடத்தைச் செய்த பிறகு, அரசர் அதைப் பொன் தகட்டால் பொதியப் பணித்தனர். குடத்தைப் பொன்னால் மூடுவதற்கு $2926\frac{1}{2}$ கழஞ்சு பொன் செலவாயிற்று.

இக்கோயிலின் மூலத்தானத்தில் எழுந்தருளப் பண்ணியிருக்கும் சிவலிங்கத்தின் உயரம் மிகப் பெரியது. இதனை நருமதை ஆற்றின் கரையில் உள்ள கரும்பாறையில் செதுக்கிக் கொண்டுவந்தனர் எனக் கூறுவர். சிவலிங்கத்திற்கு எதிரே தனியாக எழுப்பிய மண்டபம் ஒன்றில் சிற்பி, சிவபெருமானின் ஊர்தியாகிய நந்தியை ஒரே கல்லில் அடித்து வைத்தனன். ஒரே கல்லினால் ஆன இந்நந்தியின் உயரம் முன்பக்கத்தில் பீடத்தினின்றும் தலைவரை பன்னிரண்டு அடி இரண்டு அங்குலம் எனவும், நடுவில் பீடத்தினின்றும் முசுப்புவரை பத்து அடி நான்கு அங்குலம் எனவும், அதன் பிற்பாகத்தின் உயரம் ஏழு அடி ஐந்து அங்குலம் எனவும், அதன் மூக்கு நுனி முதல் பிற்பாகம் வரை பதினாறு அடி நீளம் எனவும், முதுகின் குறுக்களவு ஏழு அடி எனவும் பண்டைப் பொருளாராய்ச்சி வல்லார் கணக்கிட்டுக் குறித்திருக்கின்றனர். இத்தகைய நந்தியின் உருவத்தைத் தஞ்சைக்கு நானூறு மைலுக்கப்பால் உள்ள ஓரிடத்திலிருந்து கருங்கல்லில் செதுக்கிக் கொண்டுவந்தனர் என்பர். மூலத்தானத்தில் உள்ள சிவலிங்கத்தின் உயரமும் நந்தியின் உயரமும் ஒரே அளவு எனவும், இரண்டும் சமமட்டத்தில் இருப்பவை எனவும் கூறுகின்றனர். இவ்வளவு சிறப்புடன் அமைந்த கோவிலுக்குப் 'பெரிய கோவில்' என்னும் பெயர் வழங்குகின்றது.

இக்கோபுரம் இராஜராஜனது மனத்தகத்தே கற்பனை செய்யப்பெற்று இன்று வானளாவி நிற்கின்றது. இது, பண்டைக் காலத்தில் தமிழகத்தே கலையிலும் கைத்தொழிலிலும் கைவன்மை பெற்றிருந்தாரது தொழில் நலத்தையும் சிற்ப நுட்பங்களையும் பிற்காலத்தவருக்கு நினைப்பூட்டும் ஞாபகச் சின்னமாகவும், இராஜராஜன் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தமைக்கு அடையாளமாக விளங்கும் வெற்றி நிலையமாகவும், அவன் சிவபெருமான் பால் கொண்டிருந்த பக்திக்கு எடுத்துக்காட்டாகவும் இன்றும்

நின்று நிலவுகின்றது. இக்கோபுரம் 216 அடி உயரமுடையது. தென்னாட்டில் பண்டைத்தமிழரசர்களால் பற்பல காலங்களில் கட்டப்பெற்ற கோபுரங்களிளெல்லாம் அமையப்பெறாத உயரிய சிற்ப நுட்பம் ஒன்று இக்கோபுரத்தின்பால் அமைந்திருப்பது பண்டைத் தமிழகத்தின் சிற்பக் கலைக்கே ஒரு பெருஞ் சான்றாகும். சூரியன் கீழ்த் திசையினின்று எழும்போதும், மேல்திசையிற் சென்று படியும்போதும் இக்கோபுரத்தின் நிழல் பூமியில் சாயாமல் கோபுரத்திலேயே படிந்துவிடும் என்பதாம். இத்தகைய அரும்பெரும் சிற்ப நுட்பங்களில் வல்ல தலைசிறந்த சிற்பிகளைக் கொண்டு விளங்கியது, நம் பண்டைத் தமிழகம் என்பது இதனால் விளங்கும்.

### அருஞ்சொற்பொருள்

வல்லம் - தஞ்சைக்கு ஆறு கல் தொலைவில் உள்ள சிற்றூர். நீத்து - பிரிந்து. சேதாம்பல் - செவ்வல்லி. பிளிற்றொலி - யானை ஒலி. தீர்வை - நிலவரி. கைவன்மை - கைத்திறம்.

### கேள்விகள்

1. சோழன் பெற்ற வெற்றிகள் யாவை ?

2. இராஜராஜன் சிறுவனாக இருந்தபொழுது அவன் தந்தை அவனுக்குக் கூறியது யாது ?

3. அக்காலத்தில் சிற்பிகள் கல்லைக் கல்லோடு எப்படிச் சேர்த்தனர் ?

4. 'பிரமரந்திரத்தளம்' என்பது யாது ?

5. 'தூபிக் குடம்' என்பது யாது ? பெரிய கோவில்' தூபிக் குடத்தின் அளவு முதலியன யாவை ?

### பயிற்சி

1. அழகியைப் பற்றி வழங்கும் கதையை 15 வரிகளில் எழுதுக.

2. இராஜராஜன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயில் அதற்கு முன்பு இருந்த கோயில்களில் எவ்வகையில் மாறுபட்டுள்ளது என்பதை விளக்கி வரைக.

3. இராஜராஜன் பெருவீரனாக இருந்ததுடன் சிறந்த கலைஞனாகவும் விளங்கினான் என்பதைச் சான்றுடன் விளக்குக.

4. பழந்தமிழ்ச் சிற்பக்கலை மிக்க பண்பட்ட ஒன்று என்பதைத் தஞ்சைப் பெரிய கோவிலைக் கொண்டு விளக்கி வரைக.

# 10. கப்பல் பிரயாணம்

## (குயின் எலிசபத்)

(திரு. சோம. லெ. இலக்குமணன் செட்டியார், பி. ஏ.)

எனது ஆறுமாத கால ஆழி சூழ் உலகச் சுற்றுப்பிரயாணத்தில், மிக முக்கியமானதும், உற்சாகமானதும், உல்லாசமானதும் ஆறு நாட்கள் அட்லாண்டிக் கடலில் 'குயின் எலிசபத்' கப்பலில் கழித்ததே யாகும்.

1948-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30-ஆம் தேதி (தீபாவளியன்று) இரவு ஏழு மணிக்கு லண்டன் வாட்டர்லூ புகை ரத நிலையத்துக்கு வந்தேன். 'குயின் எலிசபத்' கப்பலில் அமெரிக்காவுக்குச் செல்லும் பிரயாணிகட்கென அக் கப்பலின் உரிமையாளர்களான 'குனர்ட் வயிட் ஸ்டார்' கம்பெனியார் தனி 'புல்மன்' ரயில் ஏற்பாடு செய்திருந்தனர். அந்த ரயிலில் 80 மைல் தொலைவிலுள்ள 'சதாம்ப்டன்' துறைமுகத்திற்கு ஒன்றரை மணி நேரத்தில் வந்து சேர்ந்தேன்.

முறைப்படி, கஸ்டம்ஸ் அலுவலாளர்கள் சில சடங்குகள் செய்ததும், கப்பலை அடைந்தேன். இக்கப்பலின் பெருமையைப் பற்றி எவ்வளவோ கேட்டும் படித்துமிருந்தும், இதிற் கால் வைத்ததும் எனக்கு ஒரு புத்துணர்ச்சி உண்டாயிற்று.

'குயின் எலிசபத்' உலகிற் பெரிய கப்பல். இதனுடைய எடை 83,673 டன். அதாவது, பிரிவினைக்கு முன்பு இந்தியாவின் ஓராண்டு இறக்குமதியில் மூன்றிலொரு பாகம். இக் கப்பலின் நீளம் 1031 அடி ; அகலம் 118 அடி ; உயரம் 135 அடி முதல் 234 அடி வரையில். 'பிராமினுட் டெக்' மட்டும் 724 அடி நீளமுடையது. இக்கப்பலின் இயந்திரத்திலும் அமைப்பிலும் 50,000 டன் எடையுள்ள உலோகங்களும் ஒரு கோடி ஆணிகளும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இக் கப்பலைத் துறைமுகத்திற் கட்டுவதற்கு உபயோகிக்கும் சங்கிலியின் எடை 2000 டன்! எண்ணெயால் ஓட்டப்படும் இருபத்தாறு 'லைப் - போட்கள்' (Life Boats) உள்ள போட் டெக், டென்னிஸ் கோர்ட்கள் உள்ள 'ஸ்போர்ட்ஸ் -

டெக்', உலாவுவதற்கேற்ற 'சன் - டெக்', இரண்டு சினிமாக் கொட்டகைகள் உள்ள 'பிராமினுட் - டெக்', கடைகளும் அலுவலகங்களும் உள்ள 'மெயின் - டெக்', இன்னும் A டெக், B டெக், C டெக், D டெக், R டெக் முதலிய பதினன்கு மாடிகளும், மின்சாரத்தால் மேலிருந்து கீழும், கீழிருந்து மேலுஞ் செல்ல உதவும் 35 (Lifts) இயந்திரங்களும், புகைப்படம் எடுக்கும் கம்பெனியும் இக்கப்பலில் உள்ளன. நான் என் வாழ்நாளிலேயே இக்கப்பலில்தான் ஆறு நாட்கள் தொடர்ந்து சினிமாப் பார்த்தேன். இத்துணைப் பெரிய கப்பலைக் கண்ணுற்றதும் நான் திகைப்புற்றதில் வியப் பென்ன?

உலகின் எப்பகுதிக்கும் இக்கப்பலில் இருந்தவாறே, ரேடியோ டெலிபோன் மூலம் பேச இயலும். 10,000 மைல் கட்கு அப்பாலுள்ள தம் குடும்பத்தாரோடு 'குயின் எலிசபத்' பிரயாணிகள் டெலிபோனில் பேசுவதும், தத்தம் அலுவலகங் களுக்குப் பேசி, நடுக்கடலிலிருந்தே பெரிய வியாபாரங்களை முடிப்பதும் இக்கப்பலில் நாள்தோறும் நடைபெறும் விநோதங்களிற் சில.

"Ocean Times" என்ற தினசரிப் பத்திரிகை இக் கப்பலிலேயே அச்சிட்டு நாள்தோறும் பிரயாணிகட்கு வழங்கப்படுகிறது. இப்பத்திரிகையிலும், கட்டுரைகள், விளம் பரங்கள் முதலியன வெளியாகின்றன. பகுத்தறிவுப் போட்டி கூட உண்டு. ஆனால் தலையங்கம் மட்டும் இல்லை.

எல்லாப் பிரயாணிகளின் பெயர்கள் அடங்கிய புத்தகம் ஒன்று, ஒவ்வொரு பிரயாணத்திலும் இக்கப்பலிலேயே அச்சிட்டுப் பிரயாணிகட்கு வழங்கப்படுகின்றது.

இங்கிலாந்தின் ஐந்து பெரும் † பேங்குகளில் ஒன்றான மிட்லண்டு பேங்குக்கு இக்கப்பலில் மூன்று கிளைகள் உண்டு.

டென்னிஸ் விளையாடும் இடம், உடற்பயிற்சிச் சாலை, இயந்திரமூலம் நடக்கும் குதிரைப் பந்தயம், மாலை நேரங்களில் கப்பல் வாத்தியக்குழுவின் இன்னிசை, இவை பொழுதுபோக் குக்கு உதவும் சாதனங்களிற் சில. இவைபற்றிய அறிவிப்பு

† மற்ற நான்கு பேங்குகள் :—பார்கிளேஸ் பேங்கு, லாயிட்ஸ் பேங்கு, நேஷனல் புரவின்சியல் பேங்கு, வெஸ்ட்மினிஸ்டர் பேங்கு ஆகியன.

கள் அடங்கிய நிகழ்ச்சி நிரலே, நாள்தோறும் அச்சிட்டுத் தருகிருர்கள்.

'குயின் எலிசபத்' கப்பலின் பிற சிறந்த பகுதிகளிற் குறிப்பிடத்தக்கது அதனுள்ளிருக்கும் நூல் நிலையம். அதில் பல மொழிகளிலே, சில ஆயிரம் புத்தம் புதிய நூல்களும், பல பத்திரிகைகளும் இருக்கின்றன.

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்ள பெரிய ஹோட்டல்களில், தங்குவதற்கு ஏற்பாடு செய்யும் அலுவலகமும் இக்கப்பலிலேயே இருக்கிறது.

பிரயாணிகள் கடிதங்கள் எழுதுவதற்கும், புகை பிடிப்பதற்கும், சீட்டாடுவதற்கும், தனித்தனியே பல அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் குறிப்பிட்ட நேரங்களில் வானெலி நிகழ்ச்சிகளைக் கேட்கலாம்.

இக்கப்பலின் நடன மாளிகைகள் (Dance Halls) தனி அழகு உடையன. இக்கப்பலில் உபயோகிக்கப்பட்டிருக்கும் மரங்கள் அழகுக்கு அழகு செய்வன போல் உள்ளன.

பிரயாணிகளின் குழந்தைகட்கு (அல்லது 'குழந்தைப் பிரயாணிகளுக்கு' என்றும் சொல்லலாம்) விளையாடும் இடங்களும், பொம்மைகளும், மற்ற விளையாட்டுக் கருவிகளும் உள்ளன.

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஓவியங்கள், கண்ணைக் கவரும் வர்ணப் படங்கள், யாவருக்கும் கலையின் மேம்பாட்டை உணர்த்தும் அரிய சித்திரங்கள், இவற்றின் பலப்பல காட்சிகளை இக்கப்பலிற் காணலாம்.

லண்டன் நகரின் நான்கு பெரிய புகழ் பெற்ற கடைகளின் (Department Stores) கிளைகள் இக்கப்பலில் நிறுவப்பட்டுள்ளன. அவைகளிற் புத்தகங்களும், ரேடியோக்களும் இன்னும் பல இன்றியமையாத பொருள்களும் விற்கப்படுகின்றன.

டாக்டரும், நர்சுகளும், ஆப்பரேஷன் செய்யும் இடமும், பல் வைத்தியசாலையும், தொத்து நோய்களைக் குணப்படுத்தத் தனி அறைகளும், எக்ஸ்-ரே சிகிச்சை வசதியும் உடைய பெரிய ஆஸ்பத்திரியும், நவ நாகரிகமாகத் தலை அலங்கரிக்கும் நிலையங்களும், மின்சார மூலம் பலவகை உணவுகளைத் தயா

ரிக்கும் இயந்திரங்களும், அவற்றைக் குளிர்ந்த நிலையிலும் சூடான நிலையிலும் வைத்திருக்கும் தன்மையுடைய கருவிகளும் உள்ள உணவாக்கும் சாலையும், ஒரே காலத்தில் 850 பேர் உணவு அருந்தக் கூடியவாறு கட்டப்பட்டுள்ள 110 அடி நீளமும், 115 அடி அகலமுமுள்ள 'ஏர்கண்டிஷன்' செய்யப்பட்ட மிகப் பெரிய உணவருந்தும் அறையும், நீந்துங் குளங்களும், நோய் தீர்க்கும் வன்மையுடைய நீரில் குளிக்க வசதியும், 'ரோட்டரி கிளப் உறுப்பினர்' தம் கூட்டம் நடத்தத் தனி மண்டபமும் இக்கப்பலில் இருக்கின்றன. கிறித்தவர்களும், யூதர்களும், அவரவர்கள் கடவுளை வழிபடவும் தனி இடங்கள் உள. இரும்பாலும் எஃகாலும் ஆக்கப்பட்ட 'நகரம்' என்றும், மிதக்கும் 'அரண்மனை' என்றும் இக்கப்பலைப் பலர் பல பெயர்களால் வருணித்திருப்பதில் தவறு சிறிதும் இல்லை.

இக்கப்பலில் உள்ள மின்சாரக் கம்பி (Electric wire) யின் நீளம் நாலாயிரம் மைல் என்றால், விளக்குகளின் சிறப்பை விளக்கவும் வேண்டுமோ? விளக்குகள், டெலிபோன், லிப்டுகள், 10 மைல் தூரத்துக்குக் கேட்கும் அபாய அறிவிப்புச் சங்கு, கப்பலின் யந்திரம், நீராடுவதற்கு வெந்நீர் —இவை மட்டுமல்ல—கப்பலின் சமையல் வேலை முழுவதுங் கூட மின்சாரத்தால் நடைபெறுகின்றது. பிரயாணிகட்காகப் பல டன் அளவுள்ள பாலை ஐஸ்பெட்டியில் காப்பதும் மின்சாரமே. 25,000 மக்களுள்ள ஒரு நகரத்துக்கு வேண்டுவதைவிட அதிகமான மின்சார சக்தியை உபயோகிக்கும் 'குயின் எலிசபத்'தில் இரு பெரிய மின்சார நிலையங்கள் (Power Stations) இருப்பதால், இதை 'மின்சாரக் கப்பல்' என்றுகூட அழைக்கலாம். இக்கப்பலின் தண்ணீர் டாங்கும் மிகமிகப் பெரியது. நான்கு மணிக்கு 600 டன் தண்ணீர் தேவைப்படுகிறதாம். பெரும்பாலான கப்பல்கள் நிலக்கரியை உபயோகிப்பனவே; ஆனால் 'குயின் எலிசபத்' எண்ணெயில் ஓடும் கப்பல். 1,60,000 குதிரைப் பவருள்ள யந்திரத்தையுடைய இக்கப்பல் பல நூறு டன் எண்ணெய் கொள்ளும் டாங்கைத் தன்னகத்தே கொண்டது. மிக அதிகமான மூடுபனியிலும் 50 மைல் வரை வழி தெளிவாகத்

தெரிய உதவியளிக்கும் 'ரடார்' (Radar) என்னும் செயற்கைக் கண்போன்ற கருவி இக்கப்பலில் இருப்பதால் எவ்வித இருட்டும் இக்கப்பலின் பிரயாணத்தைத் தடைப்படுத்துவதில்லே.

சாதாரண நாட்களில் 'குயின் எலிசபத்' 850 முதல் வகுப்புப் பிரயாணிகளேயும், 720 இரண்டாவது வகுப்புப் பிரயாணிகளேயும், 745 மூன்ருவது வகுப்புப் பிரயாணிகளேயும், 1200 வேலேயாட்களேயும் ஏற்றிக்கொள்ளுகிறது. இவ்விதமிருந்தும் இக்கப்பலுக்கு டிக்கட்டு வாங்குவது குதிரைக் கொம்பாக இருக்கிறது. ஆறு மாதங்கட்கு முன்பே முயற்சி செய்தால் அநேகமாய் டிக்கட்டுக் கிடைத்துவிடும். ஆகாய விமானக் கட்டணத்தைவிட இக்கப்பலுக்கு அதிகமான பணம் கொடுத்து டிக்கட்டு வாங்கவேண்டியிருந்தும், விமான வேகத்திற் செல்லும் இந்நாட்களில், ஆடி அசைந்து மெல்லச் செல்லும் இக்கப்பலிற் பிரயாணம் செய்ய மக்கள் ஆவலாயிருப்பதினின்றும் 'குயின் எலிசபத்' கப்பலின் சிறப்பை ஒருவாறு உணரலாம். ஆறு மாதத்துக்கு முன்பே டிக்கட்டு வாங்கிய என்னிடம் சில நண்பர்கள் தாங்கள் ஓர் ஆண்டுக்கு முன்பே டிக்கட்டு வாங்கியதாகக் கூறியபோது அவர்களேப் பார்த்து ஆச்சரியப்படுவதா, அல்லது அனுதாபப்படுவதா என்று தெரியவில்லே.

முதல் வகுப்பு அறை ஒவ்வொன்றுக்கும், நீராடும் அறை ஒன்றும், டெலிபோனும், பெரிய கடிகாரம் ஒன்றும் இருக்கின்றன. அட்லாண்டிக் கடலேக் கடக்கும்போது ஏற்படும் (லண்டனுக்கும் நியூயார்க்குக்கும் உள்ள) ஏழு மணி நேர வேறுபாட்டைப் பல பகுதிகளாகப் பிரித்து நாள்தோறும், சிறிது சிறிதாக மாற்றுகின்றனர். எஞ்சின் அறையிலிருந்து நேரத்தை மாற்றியவுடன் எல்லா அறைகளிலுமுள்ள கடிகாரங்களின் நேரம் தானே மாறும்படி மின்சார மூலம் இவை அமைக்கப்பட்டிருக்கின்றன.

சதாம்ப்டனிலிருந்து நியூயார்க் வரையுள்ள 3088 கப்பல் மைல்களே (Knots) (அதாவது ஏறக்குறைய 3500 சாதாரண மைல்களே) இப்கப்பல் 4 நாள், 20 மணி, 45 நிமிஷ நேரத்தில் கடந்தது. அதாவது இதனுடைய சராசரி வேகம் மணிக்கு

26·45 கப்பல் மைல்கள் அல்லது சற்றேறக் குறைய 30 சாதாரண மைல்கள்.

இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் உள்ள வானொலி நிகழ்ச்சிகளை இக்கப்பலில் அஞ்சல் செய்கின்றனர். இக் கப்பலில் நடைபெறும் நிகழ்ச்சிகளை அந்த நாட்டு வானொலி நிலையங்கள் அஞ்சல் செய்யவும் தக்கபடி இக் கப்பலில் வானொலி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

நான் ஆறு நாட்கள் இதிலிருந்தும் இந்தப் பெரிய கப்பலை முழுவதும் பார்க்க இயலவில்லை. நல்ல வேளையாக இக்கப்பலில் ஏறியதும் இதைப் பற்றிய படங்கள் உள்ள விவரமான புத்தகம் ஒன்றைக் கப்பல் அதிகாரிகள் கொடுத்தனர். அது இன்றேல் கப்பலுக்குள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போக வழி தெரியாமல் சிரமப்பட்டிருப்பேன்.

அமெரிக்காவில் எல்லா வளமும் நிறைந்திருப்பதும், அனைத்தும் உயரமாயும், பெரிதாயும், சிறப்பாயும், விலை அதிகமாயும் இருப்பதும் உலகம் அறிந்த செய்தியாகும். இத்தகைய புதிய உலகத்துக்கு இதுபோன்ற சிறப்பியல்புகளையுடைய 'குயின் எலிசபத்' கப்பலிற் சென்றது மிகப் பொருத்தமே. ஓரளவுக்கு இக்கப்பலே எனக்கு அமெரிக்காவை அறிமுகப்படுத்தியது.

பிரபலமான கப்பல்களுக்கு அவ்வத் தேசப் பெரியார்களின் பெயரிடுதல் உலக மரபு. அமெரிக்கர் தங்களின் கப்பல் ஒன்றுக்கு 'ரூஸ்வெல்ட்' என்றும், மற்றொன்றுக்கு 'வாஷிங்டன்' என்றும் பெயரிட்டுள்ளனர். நம் நாட்டில் 1949 பிப்ரவரியில் கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம் பிள்ளை பெயரால் ஒரு கப்பல் மிதக்க விடப்பட்டதை நாம் அறிவோம். இங்கிலாந்தின் மிகப்பெரிய கப்பலாகிய 'குயின் எலிசபத்'துக்கு அந்நாட்டு அரசியான எலிசபத் பெயரே சூட்டப்பட்டிருக்கிறது.

இக்கப்பல் 'குனர்டு வயிட் ஸ்டார்' என்னும் பிரபல ஆங்கிலப் கப்பல் கம்பெனியாரைச் சேர்ந்தது. இங்கிலாந்தின் பெரிய கப்பல்களான 'குயின் மேரி' (81235 டன்), 'அக்குவிட்டேனியா' (45647 டன்), 'மார்டேனியா' (35677 டன்), 'கரோனியா' (34000 டன்), 'பிரிட்டானிக்' (27666 டன்)

ஆகியவையும் இக் கம்பெனியாருக்குச் சொந்தமானவையே.

இக்கப்பல் கட்டப்பட்ட வரலாற்றை அறிவதும் அவசியமாகும். 7000 ஒத்திகைகட்குப்பின் 2000 சன்னல்கள் உள்ள இக்கப்பலின் அமைப்பு முடிவு செய்யப்பட்டது. இதன் மிகப் பெரிய உருவை முன்னிட்டு, இக்கப்பலைக் கட்டிய 'ஜான் பிரவுன்' கம்பெனியார், கப்பல் கட்டும் தளமாகிய 'கிளைடு' என்னும் ஆற்றையே அகலப்படுத்தி ஆழமாக்கினர்களாம்.

1936 டிசம்பரில் இக்கப்பல் கட்டும் வேலை தொடங்கிற்று. 1938 செப்டம்பர் 27-இல் மாட்சிமை தங்கிய எலிசபத் அரசியார் இக்கப்பலுக்குத் தம் பெயரிட்டு இதை மிதக்கவிட்டனர். 1939-இல் போர் தொடங்கியதும், இக்கப்பலும் தக்கபடி மாற்றி அமைக்கப்பட்டுப் போரில் தொண்டு செய்தது.

இஃது அந்த ஆறு ஆண்டுகளில் 8,11,000 போர்வீரர்களை மறைவாகப் பல இடங்கட்குக் கொண்டுபோக 5 லட்சம் மைல்கள் பிரயாணம் செய்தது; போர் முடிந்ததும் மீண்டும் உல்லாசக் கப்பலாகத் திருத்தி அமைக்கப்பட்டு 1946 அக்டோபர் 16 முதல் இங்கிலாந்துக்கும், அமெரிக்காவுக்கும் இடையே ஓடிக்கொண்டிருக்கிறது.

மிகப்பெரிய உருவமுள்ள கப்பலாயிருந்தமையால் இக் கப்பல் ஓடியதே எனக்குத் தெரியவில்லை. ஆறும் நாள் கப்பலை விட்டு இறங்க வேண்டிய நேரம் வந்தபோது, வருத்தப் படாதவர் யாருமே இல்லை. ஆனல் நியூயார்க் ஆற்றின் இரு மருங்குகளிலும் கப்பல்களும், இடையே சுதந்திரச் சிலையும், அவற்றுக்குப் பின்னர் வானளாவும் கட்டடங்களும் உள்ள 'நியூயார்க்' நகரமென்றழைக்கப்படும் இந்திரலோகம் எதிரே தெரிந்தபோது அதைப்பார்க்கவும், அமெரிக்காவின் சுதந்திர மண்ணில் மிதிக்கவும் விரும்பாதாரும் இருக்க முடியுமா?

'குயின் எலிசபத்' ஒரு கப்பல் மட்டு மன்று; சூரியன் மறைதல் இல்லாத பேரரசாட்சியை ஏற்படுத்தியதற்கும், இரு பெரும் போர்களிலும் இங்கிலாந்து இறுதி வெற்றி அடைந்ததற்கு மூல காரணமான இங்கிலாந்தின் கடற்படையின் வன்மைக்கும், ஒரு சின்னமாகும்.

அட்லாண்டிக் கடலின் இருகரைகளிலு முள்ள ஆங்கி

லம் பேசும் நாடுகளை (இங்கிலாந்தையும் அமெரிக்காவையும்), இணைக்கும் பந்தங்களில் ‘ குயின் எலிசபத் ’ மிக முக்கியமான தொன்று. கடலை வெல்ல மக்கள் கொண்டுள்ள உறுதிக்கு எடுத்துக்காட்டாக இக்கப்பல் மிளிர்கின்றது. கப்பல் கட்டு வதில் ஆங்கிலேயரின் மேன்மைக்குக் ‘ குயின் எலிசபத் ’ தக்க சான்ருகும். தம் அரச குடும்பத்தாரிடம் ஆங்கிலேய மக்களுக்கு உள்ள உண்மையான அன்புக்கு இக்கப்பலின் பெயர் ஓர் அடையாளமாக விளங்குகின்றது.

### அருஞ்சொற்பொருள்

ஆழி - கடல். உற்சாகம் - உள்ளக் கிளர்ச்சி. மருங்கு - பக்கம். சின்னம் - அடையாளம்.

### கேள்விகள்

1. ‘நான் திகைப்புற்றதில் வியப்பென்ன ?’ என்று ஆசிரியர் கூறக் காரணம் யாது ?
2. ‘ குயின் எலிசபத்’தில் நாளும் நடைபெறும் விநோதங்களிற் சில யாவை ?
3. ‘ குயின் எலிசபத்’தில் உள்ள பொழுது போக்குச் சாதனங்கள் எவை ?
4. இங்கிலாந்தில் உள்ள சிறந்த பேங்குகள் எவை ?
5. ‘ குயின் எலிசபத் ’ என்று பெயர்வரக் காரணம் யாது ?

### பயிற்சி

1. பிரித்துக் காட்டுக :-மிகப்பெரிய, அதைப்பார்க்க, சுதந்திரச்சிலை, தேசப்பெரியார், ஓரிடம், பேரரசாட்சி, கப்பலோட்டிய.
2. வாக்கியங்களிற் பயன்படுத்துக : நிகழ்த்து, அகலப் படுத்தி, பெரும்பாலான, கண்ணைக் கவரும், கலையின் மேம்பாடு.
3. ‘ குயின் எலிசபத் ’ தன் சிறப்பினைத் தானே கூறுவது போலக் கூறுக.

# 11. தேனீ*

(டாக்டர் திரு. ச. இராஜகோபாலாச்சாரியார்)

1934-ஆம் வருடத்திய மத்தியில் சட்டசபைத் தேர்தல்களில் காங்கிரஸ் புகுந்தும், அதன்பயனுக ஏற்பட்ட பொறுப்புகளிலும் கவலைகளிலும் நான் முழுகியிருந்த காலத்தில், புதுப்பாளையம் ஆசிரம வாசிகள் முற்றிலும் வேருன ஒரு துறையில் புதிதாகப் புகுந்தனர். ஸ்ரீயுத விசுவநாதன் தேனீப் பள்ளிக்கூடத்தில் ஒரு மாதம் இருந்து 1934-ஞு ஜுன்மீ 2வ புதுப்பாளையம் திரும்பி வந்ததும், எல்லோரும் தேனீ சாஸ்திரத்தைப் படிக்க ஆரம்பித்தனர். தேனீக்கள் எங்கே கூண்டு கட்டியிருக்கின்றன வென்று சுற்றிச் சுற்றிப் பார்த்தார்கள். ஓட்டுத் தேடி யலைவதைக் காட்டிலும் தேனீக்களைத் தேடுவது மேன்மையான வேலை என்பதை எல்லாச் சாதுக்களும் ஒப்புக்கொள்ளுவார்கள். 1934-ஞு ஜுன்மீ 26வ முதல் கூண்டு பிடித்து வைத்தார்கள். இப்போது ஆசிரமத்தில் இருபத்தேழு கூண்டுகளிருக்கின்றன. ஆசிரமத்திற்கு வெளியே நண்பர்களிடத்தில் இருபத்தைந்து கூண்டுகளிருக்கின்றன. ஒவ்வொரு கூண்டிலும் ஒரு முனிஸிபாலிடியிலுள்ள ஜனத்தொகையளவு தேனீக்கள் வசித்துவருகின்றன. ஒரு கூண்டைச் சேர்ந்த ஈ மற்ருெரு கூண்டிற்குள் போகாது; வெளியே எங்கே எவ்வளவு தூரம் சென்ருலும், மறுபடி தத்தம் கூண்டிற்கே திரும்பும்.

தேனீ வளர்ப்பது என்பது என்ன? பசுமாடு விலைக்கு வாங்குவதுபோல், நல்ல சாதுவான பூச்சிகள் எங்கேயாவது விற்பார்கள் என்று எண்ணுதீர்கள். தேனீ பொல்லாத பூச்சியாயிற்றே! கொட்டினுல் உடம்பெல்லாம் ஊதி உபத்திரவம் உண்டாகுமே! சில சமயம் உயிருக்கும் ஆபத்துண்டாகுமாமே! அதை எப்படிப் பிடிப்பது? அதன் கொடுக்குகளை எவ்வாறு எடுப்பது? அது ஓடிப்போகாமல் எப்படிப் பார்த்துக் கொள்வது? அப்படி வீட்டில் நின்ருலும் கூண்டிலிருந்து தேன் எப்படி எடுப்பது? இவ்வாறெல்லாம் கேட்பீர்கள்.

---

* இது 'கலைமகளில்' வெளிவந்தது.

பசுமாடு, குதிரை, நாய் போன்றன வைப்பது வேறு, தேனீ வைப்பது வேறு. தீனி போட்டு அவைகளிடம் அன்பாக நடந்துகொண்டோமானால், இம்மிருகங்கள் வரவர மனிதர்களின் எண்ணத்தை அறிந்து நாகரிகமடைந்து விடும்; எஜமானனிடம் மிகவும் நட்புக்காட்டி அவன் சொல்லுகிறபடி நடக்கும். தேனீ அவ்வாறன்று; அதன் எண்ணத்தின்படி நாம் நடந்துகொள்ளவேண்டுமே ஒழிய, நம் இஷ்டத்தை அது கொஞ்சமும் கவனியாது. முதலி லிருந்து கடைசிவரையில் அது காட்டுப்பூச்சியாகவேதா னிருக்கும்; சுதந்திர உணர்ச்சியை இழக்காது. நாய், பசு, குதிரை முதலிய ஜந்துக்களைப்போல் தேனீ எஜமானனை அறியமாட்டாது. நம்முடைய அறிவையும் யுக்தியையும் உபயோகித்து அதன் சுதந்திரத்தை இழந்ததாக அதற்குத் தெரியப்படுத்தாமல் ஏமாற்றியே அதனிடம் வேலை வாங்கித் தேன் திருடவேண்டும். ஓகோ! இது என்ன மெள்ள சுய ராச்சியப் பிரசங்கம் ஆரம்பித்துவிட்டதே என்று நினைக்க வேண்டாம். இப்பொழுது தேனீக் கதையை மட்டுந்தான் சொல்லப்போகிறேன்.

எங்களுடைய கூண்டுகளின் பெயர்கள்: லக்ஷ்மி, கங்கா, கௌரி, ராதா, மாக்டலீன், காவேரி, சகி, உமா, ஈசுவரி, இந்திராணி, பத்மா, சீதா, மீரா, யமுனா, சம்பகா, மாதவி, பார்வதி, நாராயணி, கமலா, சுபத்ரா, காத்யாயனி, அல்லி, மேரி, மேனகா, சரசுவதி, துர்க்கா, காளி.

இதென்ன எல்லாம் பெண்பால்? கௌரவமாக ஆண் பாலாக வைக்காமல் ஏன் இவ்வாறு ஸ்திரீலிங்கம்? காரண முண்டு. ஒவ்வொரு கூண்டும் எல்லா அங்கங்களும் படைத்த ஒரு ராஜ்யம். அதில் அரசுபுரிவது ஆண் அன்று; தாய்த் தேனீ; குலபதியாக வீற்றிருப்பது பெண் ஈ. இராணியின் தலைமையின்கீழ் வேலைசெய்யும் பல்லாயிரத் தேனீக்களும் கன்னிகள். இராணுவப்படையும் கன்னிகள்தான். வாயிற் காவலாட்களும் கன்னிகளே. இடம் தேடும் 'ஸ்கவுட்'களும் கன்னிகளே. இவ்வாறு பல்லாயிரக் கணக்கான பெண்க ளிடையில் சில ஆண் தேனீக்களும் சாதுக்களாகக் குடி இருக்கின்றன. அவைகளுக்குக் கொடுக்கு இல்லை; விஷ

மில்லை; சண்டையிடமுடியாது; வேலை செய்யத் தெரியாது. சும்மா தேன் குடித்துக்கொண்டு மாலை வேளையில் கொஞ்சம் வெளியே உலவி வந்து, யாதொரு பொறுப்பும் அதிகாரமு மில்லாமல் காலங் கழித்துவரும்.

ஒரு கூண்டில் முதிர்ந்து வெளியேறிய பெண் ஈ ஒன்றே தானிருக்கும். பிரஜா உற்பத்தியும் பிரஜா பாலனமும் அது செய்து வரும். இராணிக் கன்னிகள் முதிரும் பருவம் வரையில் கூண்டில் அடைபட்டிருக்கும். இராஜகுமாரிகள் முதிர்ந்து வெளிவந்ததும், அவைகளில் ஒன்றுக்குக் குலத்தின் பொறுப்பைத் தந்துவிட்டு, பழைய இராணி சில தேனீக்களைக் கூட்டிக்கொண்டு கூண்டைவிட்டு வெளியேகிவிடும்; வேறு இடம் தேடிப் புதுக்கூண்டு கட்டிக்கொள்ளும். ஒரு கூண்டில் ஓர் இராணியும் பல்லாயிரங் கன்னிகளும் இருக்கும் என்று சொன்னேன். ஆனால், இராணித்தேனீதான் முட்டையிடுவது. மற்றவை ஆயுள் முழுவதும் பிரமசாரியாசிரமம். தொழில் செய்வதே அவைகளின் ஜீவார்த்தம். இராணி ஈ கூடத் தன் ஆயுளில் ஒரே தடவைதான் ஆணுடன் சேரும். அது, கூண்டிற்கு வெளியே. அதன் பயனாக ஆண் ஈ தன் உயிரை அர்ப்பணம் செய்துவிடுகிறது. வேதத்தில் பிரஜோத்பத்தியைஒரு யாகமாக ரிஷிகள் பாடுவது இதற்கல்லவோ பொருந்தும்! இராணி ஈ கர்ப்பம் தரித்துக் கூண்டிற்குத் திரும்பும்; அதன் பிறகு ஆயுள் முழுவதும் மறுபடி ஆண் ஈயைத் தீண்டாமல் பல்லாயிர முட்டைகள் இட்டுக்கொண்டு வரும்.

முட்டை பொரிந்து முதலில் புழு உண்டாகும். ஆண், பெண், இராணி, தொழிலாளி இவ்வாறு வெவ்வேறு இனத்திற்கு வெவ்வேறு விதமான உணவு மற்ற ஈக்கள் செய்து தரும். இராணி தன் உணவிற்காகக் கூண்டை விட்டு வெளியே போகாது, அதற்கென்று சில ஈக்கள் ஒரு தனித் தினுசு உணவு செய்து வாயிலூட்டும். முட்டை பொரித்து வெளிவந்த ஈக்கு, சில நாளில் சிறகு முளைக்கும், அது அறைக்குள்ளேயே மூடப்பட்டு வளரும். முதிர்ந்த பிறகு தன் அறையைக் கீண்டிக் கொண்டு வெளியே வரும். தொழில்செய்யும் ஈக்கள் வெளியே வேண்டிய தூரம் சென்று,

பூக்களிலிருந்து மகரந்தப் பொடி திரட்டிக்கொண்டும், தேன் உண்டாக்க மது குடித்துவிட்டும், தத்தம் கூண்டிற்கு நேராகத் திரும்பிவிடும். பல மூலை முடுக்குகள் திரும்பிச் சென்றாலும், திரும்பும்போது ஒரே நேர் கோடாகத் தன் கூண்டுக்கு அம்புபோல் வந்து சேரும். மகரந்தப் பொடியைத் திரட்டி இரண்டு மூட்டைகளாகப் பின்கால்களில் தூக்கிக் கொண்டு வரும். மதுவைக் குடித்து, அதற்கென்று வயிற்றில் இருக்கும் ஒரு பையில் கொண்டுவந்து பக்குவமாய்த் தேனாகக் கூண்டில் சிற்றறைகளில் உமிழ்ந்து நிரப்பி, மெழுகு வைத்துப் பத்திரமாக மூடும். பிறகு தேன் முதிர்ந்து பலகாலம் கெடாமலிருக்கும்.

ஒரு தாய்த்தேனீயைச் சேர்ந்த தேனீக்கள் மற்றொரு கூண்டிற்குப் போகமாட்டா. போனால், அக்கூண்டின் காவற் படை ஈக்கள் தடுக்கும்; யுத்தம் நடக்கும். இதெல்லாம் படிக்க வியப்பாகத்தானிருக்கும். ஆனால் முற்றிலும் உண்மை. இன்னும் கேளுங்கள்: வெயில் அதிகமாய் விட்டால், தேனுக்கும் குஞ்சுகளுக்கும் சீதோஷ்ண நிலை யைச் சமப்படுத்திக் கொள்ளுவதற்காக, ஈக்கள் எல்லாம் கூடி, சிறகுகளை, எலக்ட்ரிக் விசிறிகள்போல ஆட்டிக் குளிர்ச்சி யுண்டாக்கிக் கொள்ளும். குளிர் அதிகமானால், ஈக்கள் ஒன்றுகூடி மொய்த்து உஷ்ணம் உண்டாக்கிக் கொள்ளும்.

தேனீக்களில் பல வகைகளுண்டு. நான் பேசிவரும் தேனீ அடை அடையாகக் கூண்டு கட்டும். அடைகள் மத்தியில் சிறிது இடத்தோடு மேலே ஒட்டவைக்கப்பட்டு, கீழே விசாலமாகத் தொங்கும். தேனீக்கள் கீழிருந்து மேலே சென்று அடைகளினிடையில் தங்கும். அடைகளிலுள்ள சிறு துவாரங்களில் முட்டைகள் பொரித்த குஞ்சுகள், சிறகு கொண்ட இளம் ஈக்கள், தேன், மகரந்தபொடியாகாரம் இவைகளிருக்கும். அடைகளின் அடிப்பாகத்தில் முட்டை களும் இளம் பூச்சிகளுமிருக்கும்; அவைகட்கு வேண்டிய ஆகாரமும் இருக்கும். மேல் பாகத்தில் மிகுதித் தேன் மட்டும் சேகரித்து வைக்கும். பொந்துகளைத் தேடி விரோதிப் பூச்சி களும் ஜந்துக்களும் புகுவதற்குச் சவுகரியமில்லாத இடமாகப்

பார்த்துக் கூண்டு கட்டும். இந்தச் சவுகரியங்களை யமைத்து நாம் மரப்பெட்டி செய்து, தாமாகக் கட்டிய மெழுகு அடைகளைச் சேதம் செய்யாமல் இப்பெட்டிகளில் வைத்தோமானால் அவ் வாசனையால் தூண்டப்பட்டு உள்ளே புகுந்து, நம்முடைய பெட்டியிலே குடிகொள்ளும், பயத்திற்குக் காரணமில்லாமல் சவுகரியமாக இடம் அமைத்துக் கொடுப்பதே ரகசியம். மேல் பாகத்தில் மிச்சத் தேனைச் சேகரிக்கும், கீழ்ப்பாகத்தில் குஞ்சுகளை வைக்குமாதலால், நாம் செய்யும் கூண்டுகளை இரண்டு அடுக்காக வைப்பது அவசியம். அப்படிச் செய்துவைத்தால் மேல் அடுக்கில் உள்ள அடைகளில் தேன் மட்டுமிருக்கும்; குஞ்சுகள், முட்டைகள் எல்லாம் கீழ் அடுக்கிலிருக்கும். சுலபமாக மேல் அடுக்கைத் தனியாகப் பிரித்து அதிலுள்ள தேனைமட்டும் எடுத்துக்கொள்ளலாம். ஈக்களாவது முட்டைகளாவது சேதமாகாமல், தேன் அடைகளை ஒரு சுழற்று யந்திரத்தில் வைத்துச் சுழற்றினால் தேன் வெளிவரும். சாதாரணமாகத் தேன் எடுப்பவர்கள் தேனீக்களைப் புகைபோட்டு ஹிம்சை செய்து துரத்தி அடைகளைப் பிய்த்து எடுத்து முட்டை, குஞ்சு, ஈ என்று பாராமல் தேனைப் பிழிந்து எடுத்துக்கொண்டு, மெழுகையும் எடுத்து உபயோகித்து விடுவார்கள். ஈக்கள் நாசமாகும். தப்பினவை வேறு எங்கேயாவது தெய்வமே என்று போய், இடம் தேடித் தம் இயற்கை தருமத்தின்படி கூண்டு கட்டப் பார்க்கும்; தாய்த்தேனீ இல்லாவிடில் மாண்டுபோகும். அஹிம்சா முறையில் தேனீக்களை மெதுவாக விலக்கி, முட்டை, குஞ்சு இல்லாத மேலடைகளைமட்டும் எடுத்துத் தேன் கொள்ளப்படும். தேன் எடுத்துக்கொண்டு அடைகளை மறுபடி அப்படியே தேன் கூட்டில் வைத்துவிடலாம். அடை சேதமாகாது. ஈக்கள் அடைகளை மறுபடி ஒப்புக்கொண்டு அவற்றில் தேன் வைக்கும். ஈக்கள் கூண்டைவிட்டு வெளியேற வேண்டுவதில்லை. மறுபடி அடைகள் கட்ட வேண்டுவதில்லை. மெழுகு உண்டாக்கும் வேலை அதிகமாக இல்லாமல் நாம் செய்வதால் தேனீக்களுக்குப் பாதி வேலை மிகுதியாகி விடுகிறது. தங்கள் குலத்தைப் பாதுகாத்து விருத்தி செய்யும் விரோதிப் பூச்சிகள், எறும்பு, பல்லி முதலியவை புகுந்து

சேதம் செய்யாமல் நாம் காப்பதும், தேனீ சமூகத்திற்குப் பெரிய உதவியாகும். இதனால் தேனீக்கள் சீக்கிரம் விருத்தியாகித் தாராளமாகத் தேன் செய்து தரும். தேனும் சுத்தமாக இருக்கும்.

## எங்களுடைய முதல் கூண்டின் கதை

1934-ஆம்௵. ஜூன் மீ 26௳. மாலை 5-மணி; தேன் எடுப்பவன் ஒருவன், ஆசிரமத்தின் அருகில் கற்சுவர் ஒன்றின் பொந்திலிருந்த தேனீக்களை ஓட்டி அடைகளைப் பிய்த்துக்கொண்டிருந்தான். சங்கதி அறிந்ததும் ஸ்ரீவிசுவநாதனும் சில தோழர்களும் சாமான்கள் எடுத்துகொண்டு போனார்கள். மெதுவாக இரண்டு கற்களை எடுக்கவே ஒன்பது அழகிய அடைகள் வெளிப்பட்டன. மெதுவாக அடைகளைக் கத்தியால், சேதமில்லாமல், கல்லிலிருந்து அறுத்தெடுத்து, ஒன்றன்பின் ஒன்றாக வாழை நாரால் மரச்சட்டங்களில் கட்டித் தொங்கவிட்டுக் கூண்டில் வைத்தார்கள். ஈக்களைச் சிதறவிடாமல், அதாவது அவைகளுக்குப் பயமுண்டாக்காமல், இவ்வேலை நடந்தது. மரக்கூண்டைக் கீழ்ப்பலகையில்லாமல் பொந்திற்குப் பக்கத்தில் வைத்தார்கள். கீழே புகுந்து கூண்டுக்குள் ஈக்கள் மேலே அடைகளுக்கு ஏறச் சவுகரியமாய் வைத்துவிட்டு. விசுவநாதன் பொந்திலுள்ள தேனீக் கூட்டத்தில் கையிட்டுப் பூக்கூடையிலிருந்து புஷ்பம் எடுப்பதுபோல் மெதுவாக வாரி வாரி எடுத்தெடுத்து மரக் கூண்டின் கீழே கொண்டுபோய் ஈக்களைக் கூண்டுக்குள் ஏறவிட்டார். தம் குஞ்சுகளின் வாசனை கூண்டிற்குள் அடைகளிலிருந்து வருவதைக் கண்டதும் அவை ஆவலாக உள்ளே புகுந்தன. ஆனால், மறுபடி பழைய பொந்துக்குத் திரும்பி வந்துவிட்டன. பிறகு விசுவநாதன் பொந்திலுள்ள ஈக்கூட்டத்தை நன்றாகப் பரிசோதித்து, தாய்த் தேனீயைக் கண்டுபிடித்தார். தாய்த் தேனீ மற்றத் தேனீக்களைவிட நீண்ட தேகமும், நிறமும் பெற்று, அதிக அழகாக இருக்கும். அதனுடன் எப்போதும் சில ஈக்கள் தேகக் காப்புக்கும், சேவைக்கும் கூடவே சுற்றிக்கொண்டிருக்கும். விசுவநாதன் மெதுவாகத் தாய்த் தேனியையும் அதன்கூட ஒரு கை

நிறைய மற்ற ஈக்களேயும் எடுத்து மரக்கூண்டில் விட்டார். இவ்வாறு விட்ட கொஞ்ச நேரத்தில் பொந்திலுள்ள எல்லா ஈக்களும் ஒரே படை வரிசையாக ‘விர்’ என்று சப்தம் கிளப்பிக்கொண்டு உடலேத் தூக்கியாட்டிக்கொண்டு புதுக் கூண்டுக்குச் சென்றுவிட்டன! தாய்த் தேனீயை விட்டு மற்ற ஈக்கள் தனியாக நிற்கமாட்டா. தேனீ பிடிப்பதில் இதுவே ரகசியம். கற்பொந்து காலியாய் விட்டது. வேலேக்கு வெளியே போயிருந்து நேரம் கழித்துத் திரும்பிய சில தேனீக்கள் மட்டும் பழைய பொந்தண்டை வந்து வீட்டின் நிலேமையைக் கண்டு ஏக்கத்துடன் இங்கு மங்கும் பறந்து கொண்டிருந்தன. அவைகளேயும் மெதுவாக ஒரு வலேத் துணியில் பிடித்து மரக்கூண்டில் சேர்த்து விட்டார்கள். கூண்டுக்குள் மூன்று நாள் உணவுக்காகச் சர்க்கரைப் பானகம் வைத்து ஆசிரமத்தில் ஒரு தகுந்த இடத்தில் கிழக்கு நோக்கி அமைத்தார்கள். மறுநாளே புது இடத்தை ஒப்புக் கொண்டு ஈக்கள் வெளிச் சென்று கேஸரிச் சுமைகள் எடுத்துக்கொண்டு கூண்டுக்குத் திரும்பிவர ஆரம்பித்தன. நாலுநாள் கழித்துத் திறந்து பார்த்ததில், அடைகள் எல்லாம் கூண்டுக்குள் மரச்சட்டங்களில் நன்ருகப் பதிந்து ஒட்டப்பட்டுக் கயிறுகள் அறுபட்டுக் கிடந்தன. ஈக்கள் தாமாகவே இவைகளேத் தூக்கி வெளியே போடும். நாம் பார்த்து எடுத்துப் போட்டால் அவற்றின் வேலே குறையும். தோட்டி ஈக்கள் உண்டு. பிணம் தூக்கி ஈக்கள் உண்டு. அவை கூண்டிற்குள் எவ்வித அசுத்தமும் இருக்கவிடா; அவ்வப்போது சுத்தப்படுத்தி அழுக்கெல்லாம் வெளியே கொண்டுபோய்ப் போட்டு வரும். காயம் பட்ட ஈக்களுக்குச் சில ஈக்கள் சிகிச்சை செய்யும். இடந்தேடி வழி காட்டும் ‘ஸ்கவுட்’ ஈக்களும் உண்டு.

இந்த முதல் கூண்டுக்கு ‘லக்ஷ்மி’ என்று ஆசிரம வாசிகள் பெயரிட்டார்கள். ஆறு மாதமானதும் லக்ஷ்மி ஒரு சீசா தேன் கொடுத்தது. மறுபடி 15 நாட்களுக்குள் இன்னொரு சீசா நிறையத் தேன் எடுக்கப்பட்டது. 1935ஹு, ஜனவரி மீ, 16உ லக்ஷ்மியிலிருந்து ஒரு கூட்டத்தைக் கூட்டிக்கொண்டு தாய்த் தேனீ வெளியே போயிற்று.

கூண்டில் வேறொரு இராணியைத் தனக்குப் பதில் அமைத்து விட்டு, நிறையத் தேனும் சேகரித்து வைத்து, எல்லா வசதிகளும் சரியாய்ச் செய்துவிட்டுத்தான் இம்மாதிரி தாய்த் தேனீ வெளியே போகும். குடியேறும் ஈக்களும் புது இடம் தேடும் வரையில் பசிதாங்கத் தேன் குடித்துவிட்டு ஓர் இடத்தில் எல்லாம் மொய்த்துக்கொள்ளும். சில 'ஸ்கவுட்' ஈக்கள் நல்ல இடம் கண்டுபிடிக்க வெளியே போகும்; இடம் நிச்சயமானதும் திரும்ப வந்து மற்ற ஈக்களுக்குத் தெரியப் படுத்தும். அதன்பின் எல்லாம் போய்க் கூண்டு கட்டும். ஜனவரி 16ல வெளியேறிய கூட்டத்தை விட்டுவிட்டோம். அதற்குப்பின் நாலு நாள் கழித்து மறுபடி ஒரு கூட்டம் வெளிக் கிளம்பிற்று. அப்படையில் இரண்டு ராஜகுமாரிகள் இருந்தன. இரண்டில் ஒன்று யுத்த சோதனையில் வென்று, அதுவே ஆட்சி புரிய வேண்டியது. 20 நிமிஷம் யுத்தம் நடந்தது. ஒன்று மாண்டது. ஆனால் நாங்கள் இவைகளைக் குடியேற விடவில்லை; மெதுவாக இவைகளைப் பிடித்து மறுபடி பழைய கூண்டில் சேர்த்துவிட்டோம்; கூண்டில் ஆள்பலம் குறையாமலிருப்பதற்காக இவ்வாறு செய்தோம். 1935ஞு டிசம்பர் மாதத்தில் மறுபடி ஒரு கூட்டம் கிளம்பிற்று. இதைப் பிடித்து வேறொரு புதிய கூண்டில் அமைத்தோம். அதுதான் நம்முடைய 'கங்கா'. இவ்வாறே மற்றக் கூண்டுகளின் கதையும். ஆசிரமத்தில் தற்போதிருக்கும் கூண்டுகளில் 10 குடியேற்றக் கூண்டுகள்; 17 காட்டில் பிடித்த கூண்டுகள்.

தேன் எவ்வளவு எடுத்தீர்கள் என்று விசாரிக்காதீர்கள். தேன் எடுப்பது பெரிதன்று. தேனீக்களை வளர்த்துச் சரியாகப் பாதுகாத்து வருவதே ஒரு நல்ல ஆத்ம சிக்ஷை. கோரக்ஷணம் செய்யச்சொல்வது பாலுக்காகவன்று. குதிரை, பசு இவைகளை வைத்திருக்கும் வீட்டில் வளரும் குழந்தைகள் சுபாவமே வேறு. வாடகை வண்டியில் ஏறி, விலைக்குப் பால் வாங்கும் வீட்டுக் குழந்தைகள் சுபாவம் வேறு. அவ்விதமே தேனீ வளர்ப்பதும். ஜந்துக்களுடன் கூடி வாழ்ந்து, அன்பும் அறிவும் பெருக்கிக் கொள்வது படிப்புகளுக்குள் பெரிய படிப்பு.

## அருஞ்சொற்பொருள்

புதுப்பாளையம் - திருச்செங்கோட்டுக்குப் பக்கத்தில் உள்ள கிராமம். ஸ்திரீலிங்கம் - பெண்பால். பிரஜா உற்பத்தி - பிள்ளை பெறுதல். பிரஜா பாலனம் - பிள்ளை வளர்ப்பு. சிற்றறை - சிறுமை + அறை.

## கேள்விகள்

1. 'தேனீ வளர்ப்பது' என்பது என்ன?
2. தேனீயின் இயல்பு யாது?
3. தேன் கூடுகளின் பெயர்கள் யாவும் பெண்களின் பெயர்களாக இருப்பதற்கு ஆசிரியர் கூறும் காரணங்கள் யாவை?
4. இராணித் தேனீயின் வேலை யாது?
5. தேனீக்களின் பலவகைகள் யாவை?
6. தேன் எவ்வாறு எடுக்கப்படும்?

## பயிற்சி

1. 'தேனீ வளர்ப்பு' என்பது பற்றி ஒரு கட்டுரை வரைக.
2. 'முதல் கூண்டின் கதை' என்ற தலைப்பில் உள்ள செய்தியைச் சுருக்கி எழுதுக.
3. வாக்கியங்களிற் பயன்படுத்துக: குலபதி, வீற்றிருப்பது, குடியேறும், மறுபடி, இங்குமங்கும், விசாலமாக, ஆசிரமம்.

## 12. ஓவியன்

(திரு. ம. ப. பெரியசாமித்தூரன், பி. ஏ., எல். டி.)

தென்னங்கீற்றின் மேலே அந்திச் சூரியனுடைய பொற் கிரணங்கள் பட்டுச் சொலிப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? காற்று மெதுவாக ஓலைகளை அசைக்கும்போது, ஆகா, அந்தச் சொலிப்பின் அழகை என்னென்பது! அதை எனது ஓவியத்தில் பிடித்துவிட வேண்டுமென்று மூன்று நாட்களாக முயன்று கொண்டிருக்கிறேன். எந்த மாதிரி வர்ணக்கலவை செய்து வரைந்தாலும் எனக்குத் திருப்தி ஏற்படவில்லை. கண்ணெதிரில் கண்ட அந்த மின்னல் பிரகாச மினுமினுப்பை அப்படியே பிடிக்க முடியவில்லை. ஒன்று, மஞ்சள் நிறம் சிறிது அதிகமாகி விடுகிறது; அல்லது பசுமை மேலெழு கிறது; இல்லாவிட்டால் இவைகளுக்குள்ளே மயங்கிக் கிடக்கும் செவ்வண்ணம் மிகுதியாகிச் சொலிப்பைச் சிறிது மங்கச் செய்துவிடுகிறது. இப்படி ஏதாவது ஒரு குறை ஏற்பட்டு எனக்கு அதிருப்தியைப் பெருக்கிக்கொண்டே இருந்தது.

நான் உட்கார்ந்திருப்பது ஒரு காடு; சன நடமாட்டம் இல்லாத வனப்பு மிக்க இடம்; அதனால் நிம்மதியாக எனது வேலையில் மனத்தை ஒருமுகமாகச் செலுத்த முடிந்தது.

ஆனால் தூரத்தில் தோன்றும் அந்தத் தென்னங்கீற்று களில் நடக்கும் அந்த ஒளி நடனத்தை மட்டும் இன்னும் என்னால் திரையில் சிறைப்பிடிக்க முடியவில்லை. இரண்டு மாலை நேரங்கள் வீணாயின. மூன்றாவது நாளும் வெற்றி கிடைப்பதாகக் காணவில்லை. அதனால் நான் சிறிது சிறிதாகப் பொறுமை இழந்துவிட்டேன்.

‘சரி, இப்பொழுது வந்திருக்கிற மாதிரியே போதும். இதையே மக்கள் பார்த்து ஆச்சரியப்பட்டு மகிழ்வார்கள். ஆனால் அந்த உயிர் ஓட்டம் முழுவதும் இதில் இல்லைதான். இல்லாவிட்டால் என்ன? அதைப் பதினாயிரத்தில் ஒருவன் கூடச் சிந்திக்கமாட்டான். இதற்கே நல்ல விலையும் கிடைக்கும்; பிறகு எதற்காக வீண் சிரமம்?’ என்று நான் எண்ணமிட்டுக் கொண்டிருந்தேன்.

அந்தச் சமயத்தில்தான் திடீரென்று ஓர் அற்புத மனிதன் என்முன் தோன்றினுன். முதலில், 'இவன் யார், சிவபூசையில் கரடி நுழைந்தமாதிரி?' என்னும் ஒரு வெறுப் பெண்ணம் என் மனத்தில் உதித்தது. பிறகு அவனுடைய நீண்ட தாடியையும், கூர்ந்த பார்வையையும், கம்பீரமான தோற்றத்தையும் கவனித்தவுடன் அவன் உருவம் நல்ல சித்திரமாகும் என்ற எண்ணம் உண்டாயிற்று.

அவன் முறுவலித்துக்கொண்டே என் அருகில் வந்து, "அது முடியாது" என்ருன். 'எது முடியாது? நான் நினைத்ததை இவன் எப்படி உணர்ந்துகொண்டான்? உற்று நோக்குவதைப் பார்த்தே கண்டுகொண்டானு? அப்படி யிருந்தால், இவன் சிறந்த அறிவாளியாகத்தான் இருக்க வேண்டும்' என்ற எண்ணங்கள் கோவையாக ஒரே கணத்தில் என் மனத்தில் எழுந்து என்னைத் திடுக்கிடச் செய்தன. என்னை அறியாமலேயே அவனுடன் பேச வேண்டுமென்ற ஆசை தோன்றியது.

"நான் நினைத்ததை எப்படி அறிந்தாய்?" என்று வியப்புடன் கேட்டேன்.

அவன் எனது கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. "அதிருக்கட்டும்; நீ யார்?" என்று திரும்பி ஒரு கேள்வி கேட்டான். அவன் முகப்பொலிவும் சிரித்த பேச்சும் அவனேடு வார்த்தை கொடுத்துக்கொண்டிருக்க வேண்டு மென்று என்னைப் பெரிதும் தூண்டின. மேலும் நான்தான் எனது வேலையை அதோடு நிறுத்தி விடுவதென்று முன்ன மேயே முடிவு கட்டிவிட்டேனே!

"நான் ஓர் ஓவியன்" என்றேன்.

அவன் சிரித்தான். "நீதானு ஓவியன்? உலகிலுள்ள எல்லோரும் ஓவியர்களே. உனக்கு இதில் என்ன தனிச் சிறப்பு இருக்கிறது?" என்ருன்.

எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. உலகில் எல்லோருமே ஓவியர்களா? அதெப்படி இருக்கமுடியும்?

"நீ சொல்வது விநோதமாக இருக்கிறதே! எல்லோ ரையும் ஓவியர் என்று சொல்ல முடியுமா?" என்று நான் கேட்டேன்.

"நிச்சயமாகச் சொல்லலாம். நீ உன் இஷ்டப்படி படம் எழுதுகிறாய். உலக மக்களும் தம்முடைய இஷ்டப்படியே தம் வாழ்க்கைச் சித்திரத்தை எழுதிக்கொண்டிருக்கிறார்கள். உனக்கு வர்ணங்கள் எப்படியோ, அப்படியே அவர்களுக்கு அவர்களுடைய குணம்," என்று அப்புதியவன் பதிலளித்தான்.

"உன் வார்த்தையின் கருத்தை நான் அறிந்துகொள்ள முடியவில்லையே?" என்று நான் கேட்டேன்.

"கருத்தென்ன? இதுதான் கருத்து: நீ பல வர்ணங்களைக் கொண்டு வந்திருக்கிறாய்; அவற்றைக்கொண்டு தூரிகையால் ஓவியம் தீட்டுகிறாய். இந்த வர்ணத்தைத்தான் உபயோகிக்கவேண்டும், இந்த மாதிரிதான் தீட்டவேண்டும் என்று யாராவது உன்னைக் கட்டுப்படுத்துகிறார்களா? இல்லவே இல்லை. அதுபோலவே அவர்களும் சில குணங்களோடு உலகில் வந்து, வாழ்நாள் என்னும் தூரிகையைக் கொண்டு தங்கள் வாழ்க்கைப் படத்தை எழுதிக்கொண்டிருக்கிறார்கள். எந்தக் குணத்தைப் போற்றிப் பயன்படுத்த வேண்டும், எதை விலக்கவேண்டும் என்பனவெல்லாம் அவர்கள் இச்சைப்படியே விடப்பட்டிருக்கின்றன," என்று அந்த மனிதன் கூறினான்.

"சரி, அவர்கள் முயற்சியின் முடிவுதான் என்ன?" என்று நான் கேட்டேன்.

"உனது ஓவியத்தின் முடிவு போன்றதுதான் அதுவும். எந்த எந்த நிறங்களைப் பக்கம் பக்கமாக இருக்கச் செய்யலாமோ, எவற்றைக் கலவையாக்கிப் புதிய வர்ணத்தையும் காந்தியையும் உண்டாக்கலாமோ அப்படிச் செய்து, உயிர்க் கலையும் உணர்ச்சியும் தோன்ற வரைந்தால் உயர்ந்த சித்திரமாகும். தாறுமாறாகப் பட்டை அடித்தலும், வர்ணச் சேர்க்கை செய்தாலும் ஓவியம் பாழடைகிறது. அதுபோன்றதே வாழ்க்கை ஓவியமும். அதை எல்லோரும் மதிக்கும்படியாகச் செய்யலாம், அல்லது வெறுக்கும்படியாகச் செய்யலாம். எல்லாம் மனிதன் கையிலேயே இருக்கின்றது. வெற்றிச் சிகரத்தை அடைபவனும் அவனே; பாதாளத்தில் அழுந்திக் கிடப்பவனும் அவனே," என்று அப்புதியவன் புகன்றான்.

"ஆமாம், என்னுடைய ஓவியத்தைக் கண்டு பலர் புகழப் போகிருர்கள். நீ சொல்லும் ஓவியத்தை யார் பார்க்கிருர்கள் ?" என்று நான் வினவினேன்.

அவன் நகைத்தான். ஆகா அது என்ன சிரிப்பு! அதில், நான் எல்லாம் அறிந்தவன் என்ற எனது பாவனேயெல்லாம் அடியோடு சாம்பலாகிவிட்டது. அடக்கம் பிறந்தது. அவன் மறுமொழியைக் கவனமாகக் கேட்கலானேன்.

"பலபேர் புகழுகிருர்கள் என்ற திருப்தியால்தானே அரை குறையாக நீ உனது சித்திரத்தை இன்று முடிக்க நினைக்கிருய்? உனக்கு இன்றைய வேலே முற்றும் திருப்தியாயில்லேயே! சாதாரண மக்கள் புகழுரையிலா திருப்தி அடைவது? ஆயிரத்தில் ஒருவஞன ரசிகனே மகிழச் செய்வதல்லவோ சிறந்த கலே? அதோடு நீ நினேக்கிருய், உனது ஓவியந்தான் கவனிக்கப்படுகிறதென்று. உண்மை அதுவன்று. இந்த ஓவியம் எப்படி மக்களுடைய உள்ளத்தில் உணர்ச்சிகளே எழுப்புமோ, அதுபோல் ஒவ்வொருவனுடைய வாழ்க்கைச் சித்திரமும் அதன் மதிப்புக்குத் தக்கபடி உலகில் இன்ப துன்பம் போன்ற மாருன உணர்ச்சிகளே விளேவிக்கின்றது. அதன் பயனே நாம் எல்லோரும் தெரிந்தோ தெரியாமலோ அனுபவிக்கிறேம். உனது சித்திரம் உள்பட மற்றும் எல்லோருடைய வாழ்க்கைச் சித்திரத்தையும் கவனித்துத் தீர்ப்புச் சொல்லும் மகா ரசிகன் ஒருவன் இருக்கிருன். அவன் பார்வையில் அகப்படாதது ஒன்றும் இல்லே. அவனே மகிழ்விப்பதே வாழ்க்கையின் இலட்சியமாகும்," என்று நிதானமாக அவன் பேசினுன்.

எனக்கு எல்லாம் விளங்கிவிட்டது. இவன் சாதாரணப் பேர்வழி அல்லன் என்பதும் தெரிந்துகொண்டேன். அதே சமயத்தில் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றி அவனுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள என்னுள்ளே ஆவல் குதித்தெழுந்தது.

"அந்த மகா ரசிகன் என்னேப்பற்றி என்ன நினேப்பானே?" என்று நான் ஆவலுடன் கேட்டேன்.

"அதை யார் சொல்ல முடியும்? ஆனல் பாரபட்சமில்லாது தீர்ப்புச் சொல்லுவான் என்பது மட்டும் திண்ணம்.

மனித சமூகத்திற்கு உனது கலையினால் இன்பத்தைக் கொடுக்க நீ உண்மையாக முயன்றிருப்பாயாகில், அதில் பூரண வெற்றி அடையாவிட்டாலும், அவன் உன்னைப் போற்றுவான். ஆனால் சோம்பலாலும், அசிரத்தையாலும் உனக்கே திருப்தியில்லாத நிலையில் நிறுத்தினால் அவன் ஏற்றுக்கொள்ள மாட்டான். சாதாரண மக்களின் புகழுரையில் திருப்தி அடைந்து கலையின் சிகரத்தை அடைய முயலாது நின்றாலும் அவன் மகிழ்ச்சி அடையான்,'' என்று அவ்வறிஞன் கூறினான்.

'' ஆமாம், உண்மை '' என்று என் உள்ளம் எதிரொலித்தது. கை என்னை அறியாமல் தூரிகையை மறுபடியும் எடுத்தது. நான் தென்னங் கீற்றின் சொலிப்பைத் திரையில் சிறைப்பிடிக்கப் புது ஆவேசத்துடன் ஆரம்பித்தேன்.

மறுபடியும் நான் என் கண்களைத் திரையிலிருந்து வேறு பக்கம் திருப்பியபோது அவனைக் காணவில்லை.

### கேள்விகள்

1. ஓவியன் எதனை வரைய வேண்டுமென்று விரும்பினான் ?
2. ஓவியன் தனக்கு அதிருப்தி ஏற்பட்டதற்குக் கூறும் காரணம் யாது ?
3. 'அற்புத மனிதனி'ன் உருவத்தை ஓவியன் எங்ஙனம் கூறுகின்றான் ?
4. 'உலகவர் யாவரும் ஓவியரே' என்பதை 'அற்புத மனிதன்' எவ்வாறு கூறுகின்றான் ?
5. 'அவர்கள் முயற்சியின் முடிவுதான் என்ன ?' என்ற கேள்விக்கு 'அற்புத மனிதன்' அளித்த பதில் யாது ?

### பயிற்சி

1. இப்பாடப் பொருளைச் சுருக்கிப் பதினைந்து வரிகளில் எ[illegible]துக.
2. இப்பாடத்தை அற்புத மனிதன் கூறுவதுபோலக் கூறுக.
3. செவ்வையாக, ஆண்டுதோறும், இன்றியமையாத [illegible] கொடை, பயில்கின்றனர், ஓவியக்கலை, உயிர் ஓட்டம்--இ[illegible] அமைத்து வாக்கியங்கள் எழுதுக.

———

1,30,088

# TAMIZH ILAKKIYA MALAI

BOOK II FOR FORM V

(GENERAL COURSE)

BY

Panditha Vidwan L. P. KR. RAMANATHAN CHETTIAR

*Associate Professor, Annamalai University*

❋

*Price Re. 1/-*